
தமிழீழ ஆவணக் காப்பகம்

Mr. Thayalan

# எரிமலை

வைகாசி 1994



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இனிவரும் நாட்களில் இளவேனில் கருக்கட்டும்

மாருதம் தவழ்ந்து செடி கொடி தழுவும்
முதிர்ந்த இலையுதிர்ந்து மரங்கள் புதிதாய்ப் பிறக்கும்.
முற்றத்து வேம்பிருந்து
குக்கூவென்று குயில் பாடும்.
ஆடுகால் பூவரசுகள் அசையும்.
துலாக்கள் உடற்பயிற்சி செய்யும்.
அறுகுபடர்ந்த வரம்பில் ஆடுகள் அணிவகுக்கும்.
பச்சைப் பாவாடைகட்டி தோட்டங்கள் அழகுகாட்டும்.
விடிகாலை எழில்பூட்டி வெளியேவரும்.
சந்தைக்குப் போகும் வண்டில்களின்
சக்கரச் சத்தம் பூபாளமாகும்.
வரும் காலம் வசந்தம்.
எம்மண் இனி அழகு.
எதிரிக்கு எங்கே இது தெரியும்.
இந்த வசந்தத்தையும் எரியூட்டுவான்.
வெடிக்கும் எறிகணைகளுக்கு விரல்மடித்துக்கொண்டு
காப்பரணுள் நாங்கள் கண் துயில்வோம்.
இது கொடுமை.
இறப்புக்கு நிகர்.
இந்த வருடத்து மந்தமாருதத்திலும்
கந்தகக் கலப்பா?
ஏற்றுக்கொள்ளக் கூடாது.
வீதியெங்கும் வெளிச்சம் ஊற்றி
விடிய விடியத் திருவிழா வேண்டும்.
வல்லிபுரக் கோவிலுக்கு வண்டில் பூட்டு.
நிமிர்ந்து நின்று நிலவு பார்க்கவேண்டும்.
நிமிர்.

- மாலிகா -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
வைகாசி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# மே நாள்:
# ஒடுக்கப்பட்ட மக்களது போராட்ட நாள்

மே நாள். உலகத் தொழிலாளரின் உன்னத நாள். அவர்களது எழுச்சியைப் பறைசாற்றும் நாள். அவர்களை நசுக்குகின்ற அடக்குமுறைக்கெதிராக முரசறைவித்த நாள். உலகத் தொழிலாளர் என்ற பெருங்கடலுள், தமிழீழத் தொழிலாளரும் சங்கமித்து அவ்வெழுச்சி நாளைக் கொண்டாடி மகிழும் காரணத்தினால், மே நாள் தமிழீழ மக்கள் வாழ்விலும் மிக முக்கிய நாளாகப் போற்றப்படுகின்றது. தமிழீழத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் மேதின ஊர்வலங்களில் உணர்ச்சி பூர்வமாகக் கலந்து, விடுதலைப் பாடலை இசைத்துக் கொண்டு, தேசிய மீட்புக்கானதும், தொழிலாளர் மாட்சிக்கானதுமான சுலோகங்களை உரத்துக் கூவியவாறு செல்லும் தமிழீழ மக்கள், உலகளாவிய தொழிலாளர் ஒற்றுமையை மாத்திரமல்ல, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பையுமே வலியுறுத்துகின்றனர். தமிழீழத்தில் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்திப் பவனிவரும் ஊர்திகளோடு, இலட்சக்கணக்கான மக்கள் கலந்து ஊர்வலமாய் வரும்போது அவர்கள் உழைக்கும் மக்களின் ஒன்றுதிரண்ட உறுதியையே நிதர்சனம் ஆக்குகின்றனர். மே மாதம் இன்னொரு வகையில், குறிப்பாகத் தமிழீழ மக்களுக்கும், பொதுவாக உலக சமூகத்திற்கும் பிரபலமாக அமைந்து விட்டது. சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவினதும், இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியினதும் மரணங்களை உண்மையான ஜனநாயகத்துக்கும், சமாதானத்துக்குமான நிகழ்வுகளாகவே, ஒடுக்கப்பட்ட, பரந்துபட்ட மக்களுக்காக உழைப்போர் குறித்துக் கொண்டனர்.

தென்மாகாணத் தேர்தலில், ஆளும் கட்சிக்கும், டி.பி. விஜயதுங்காவின் அடுத்த ஜனாதிபதியாகும் கனவுகளுக்கும் விழுந்த அடியானது, சிறீலங்கா அரசாங்கத்தின் தீவிர இனவாதப் போக்கில் தளர்வை ஏற்படுத்தும் என்று கூறமுடியாது. நடைமுறை உத்திகளை மாற்றுவது குறித்தும் அதற்குச் சரியான தலைமை மாற்றம், ஆட்சி மாற்றம் குறித்தும் சிங்கள தேசத்தில் சிந்தனை ஓட்டம் நிகழுமே தவிர, அடிப்படையான மாற்றம் எதுவும் ஏற்படாது. தமிழ் மக்களின் தாயகம், சுயநிர்ணய உரிமை, சமத்துவம் ஆகியவற்றை அங்கீகரிப்பதற்கும், அதனடிப்படையில் சமாதானமாகத் தீர்வு காண்பதற்கும் சிங்கள தேசம் பக்குவமடையும் என்று கூறமுடியாது. அதற்கான அழுத்தமும், நெருக்கடியும் கொடுத்தால் ஒழிய அது பெரிதளவு மசியப் போவதில்லை.

புதிய இராணுவத் தளபதியின் கீழ், தமிழ் மக்கள் மீதான இராணுவ வெற்றியைக் காண்பதிலேயே முனைந்து நிற்கும். இராணுவத்தை விஸ்தரித்தல், சிறந்த பயிற்சி அளித்தல், நவீன ஆயுதங்களை வாங்குதல், கட்டளை, கட்டுப்பாட்டு மையங்களைப் பரவலாக்கல் போன்ற இராணுவ ஆயத்தங்கள் மூலம், மீண்டுமொரு பாரிய இராணுவ நடவடிக்கையை நடத்தி முடிப்பதையே சிறிலங்கா அரசாங்கம் தந்திரோபாயமாகக் கொண்டு செயல்படும்.

இஸ்ரேல், தென்னாபிரிக்கா, சீனா, ருஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடமிருந்து விமானங்கள், உலங்கு வானூர்திகள், கவச வாகனங்கள், பீரங்கிப்படகுகள் என்று நாசகார ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் முயற்சியிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. 2000 கோடிக்கு மேற்பட்ட ரூபாய்களை, யுத்தத்திற்கென ஒரு வருடத்திற்கு செலவழிக்க அது தயாராய் உள்ளது.

இத்தகு இன அழிப்புத் திட்டத்தில், விடுதலைப் புலிகளை, சர்வதேச ரீதியாக, "பயங்கரவாத இயக்கமென" ஓரங்கட்டுவதும், விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கிளைகளுக்குப் பங்கம் விளைவிக்க முயலுதலும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மேலும், விடுதலைப் புலிகளின் அமைப்பினுள்ளேயே ஊடுருவல் செய்ய எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தே தமிழீழ மக்கள் விழிப்புடன் இருத்தல் வேண்டும். கொழும்புத் தமிழ் குழுக்களை எழும்பி ஆடவிடுதல் என்பது ஒரு புறம். தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்ற போர்வையில், தமிழ் மக்களின் கருத்தாக விடுதலைக்கும், சமத்துவத்திற்கும், எதிராக, போராட்ட அடிப்படைகளையே தகர்த்து விடுகின்ற கருத்துக்களை வெளிநாடுகளிலுள்ள தமிழ் மிதவாதிகள் மூலம் வெளியிட வைத்தல் என்பது இன்னொரு புறம். ஒரு சில மிதவாதிகளின் கருத்துக்களையே பரந்துபட்ட தமிழ் மக்களின் கருத்தாகப் பூதாகரப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் கருத்துக்கும், விடுதலைப் புலிகளின் கருத்துக்கும் இலட்சியம், பாதை, அடிப்படை, தந்திரோபாயம், உத்தி ஆகியவற்றிற்கும் இடையில் வேறுபட்ட போக்கு, இடைவெளி இருப்பதாகக் காட்டுவதன் மூலம், விடுதலைப் புலிகளைத் தனிமைப் படுத்தலாம் என தமிழீழ விடுதலைக்கு எதிரானோர் எண்ணிச் செயல்படுகின்றனர். சிறீலங்காவின் அரசியல் யாப்பினுள்ளே, மாகாண சுயாட்சி மூலம், அதிகாரப் பரவலாக்கம் மூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என்பதே அவர்கள் முன்னெடுக்கும் கருத்தாகும். இது தமிழ் மக்களின் சுதந்திரம், சமத்துவம், தாயகம் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளை சிதறடிக்கும் விடயமாகும். மேலும் "பயங்கரவாதச் சுலோகம்" சர்வதேச ரீதியாகப் பயன்படும் என்பதும் அவர்களது நோக்காக உள்ளது. இக் கருத்தியல் ரீதியான ஆபத்தை உணர்ந்து, போராட்டத்திற்குப் பலம் சேர்க்க தமிழ் மக்கள் என்னும் அணையை உறுதியாகக் கட்டுதல் ஒரு போராட்டமாகவே அமைகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## 'எனது மக்களின் விடுதலைக்காக' நூலிலிருந்து



# சுதந்திரம் இல்லையேல் நிம்மதியாக வாழமுடியாது

### தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும், முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரிகம் தொடங்கிய காலந்தொட்டு இன்று வரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடத்திவருகிறது; யுத்தங்கள் புரிந்து இருக்கிறது; புரட்சிகள் செய்து இருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழமுடியாது. சமாதானமாக வாழமுடியாது. சந்தோசமாக வாழமுடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழ வேண்டும். படிப்படியாக அழிந்து போக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி இல்லை.

இளைஞர்கள் இருக்கிறார்கள், அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள்; அல்லாவிடில் இந்தியா இருக்கிறது, எமக்கு சுதந்திர தனியரசு பெற்றுத் தரும் என்ற வகையில் நாம் சும்மா இருந்து விட்டால் எமக்கு சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை. பொதுமக்களாகிய உங்களின் நேரடிப் பங்களிப்பின்றி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


எமது தேசிய சுதந்திரப் போராட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை. சுதந்திரப் போராட்டம் என்பதே மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சிகொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம். எமது எதிரியோ தனது ஆயுதப்படைகளை எமக்கு எதிராக ஏவி விட்டதுமன்றி சிங்கள வெகுசனத்தையும் தமிழருக்கு எதிராக அணிதிரட்டுகிறான். சிங்கள மக்களுக்கு இனவெறியூட்டி, போர்வெறியூட்டி ஆயுதம் தரித்த ஒரு இன யுத்தத்திற்குத் தயார் படுத்துகின்றான். இந்த அதர்ம யுத்தத்திற்கு சிங்கள மக்களிடமிருந்து நிதி திரட்டுகிறான். சிங்கள மக்களும் கோடிக்கணக்கில் பாதுகாப்பு நிதியென்று வாரிவழங்குகிறார்கள். முழுச் சிங்கள தேசமுமே ஒரு இன யுத்தத்திற்கு தயார்நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழராகிய எமது நிலைதான் என்ன?

இன ஒழிப்பின் விளிம்பில் நாம் தள்ளப்பட்டும் எமக்கு இன்னும் விடுதலைக்கான விழிப்புணர்ச்சியோ, வீராவேச உணர்ச்சியோ தோன்றவில்லை. பசியும் பஞ்சமுமாக தாங்கொணாத் துன்பங்கள் ஏற்பட்டும் நாம் இன்னும் போராடத் தயாராகவில்லை. இனியும் நாம் பயந்து, ஒழிந்து, ஒழிந்து, செத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ஏதோ எங்கிருந்தோ எமக்குப் புறம்பான சக்திகள் கைகொடுத்து உதவும் என்று காத்துக்கொண்டிருப்பது அசட்டுத்தனம். நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதை விடப் போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராகவேண்டும். ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப்புலிகளாக மாறவேண்டும். தாழ்ந்துபோன தமிழ் இனம் வீரப்புலி இனமாக மாற வேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக்கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச்சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச்சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகளைகளையப்பெற்று சமூக உணர்வும் பிறக்கவேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப்பண்டங்களை பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலங் கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவவேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும்.



போர்க்குணம் மட்டுமல்ல நேசமும், பாசமும் இவர்களுக்குள்....

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இது காலம் கனிந்த நேரம்

- புதுவை இரத்தினதுரை -

காற்று எங்கும் வியாபித்துளது.
கலங்காதே!
மூச்சை உள்வாங்கி வெளியேவிடு.
சுவாசம் சீராகும்.
முள்ளந்தண்டை நிமிர்த்தி
கை காலை உதறு
தளையறுந்து போகும்.
உனக்கு விலங்கிட எவரால் முடியும்?
நீ காலில் நசியும் சிறு புழு அல்ல
உன்னைக் கையால் கசக்கமுடியாது.
நீ யார்?
உரத்துக் கேள் பதில் வரும்.
நீ யார்?
மனிதன் மட்டுமல்ல...
நீ மனிதனிலும் தமிழன்.
பயமறியாத பரம்பரை வித்து.
நல்லூரின் "இராசவாசலில்" தேடிப்பார்
இந்தமண் உனதென்ற "தோம்பு" கிடைக்கும்.
"பண்டாரவளவை" உழுதுபார்
உன் பூட்டி வணங்கிய "மாடவிளக்கும்"
பொங்கிப் படைத்த "பித்தளைத் தாம்பாளமும்"
வரலாறெழுதிய "எழுத்தாணியும்" வந்து சேரும்.
வல்லிபுரக்கோவில் மணலைக் கிளறிப்பார்
நீ யாரென்ற தடயங்கள் தட்டுப்படும்.
இந்தளவும் இருக்கிறதே
இன்னுமேன் கட்டுண்டு கிடக்கின்றாய்.
எல்லாவற்றையும் மண்ணுள் புதைத்துவிட்டு
ஏன் இருப்பிழந்து இருக்கின்றாய்.
தமிழனே! நம்பிக்கையுடன் எழுவாய்
இரவு கரைந்து, கரைந்து
வைகறைப் பொழுதோடு கலக்கும்.
குங்குமச் சாந்தில் குளித்து
கிழக்கின் திரை விலத்தி
சூரியன் சுடர்விழி மலர்வான்.
விடியும் பொழுது உனக்கு விரைந்து வருகிறது.
வரவேற்க ஆரத்தித் தட்டுடன் ஆயத்தமாகு.
ஆனால்
புலரும் பொழுதுக்காகப் போராட வேண்டும்
என்பதைமட்டும் எண்ணிக்கொள்.
குஞ்சு கொத்தாமல்... முட்டை உடையாது.
கூழாகிப் போனால்... குஞ்சு பிறவாது.
வாழ்வுவரும் வழியில்
வேதனை வேலிகளைத் தாண்ட நேரிடும்.
குருதியில் குளித்தபடிதான் புதிய பிரசவம்.
தலைப்பிரசவம் தாய்க்கே தெரியும்.
போராடிப் பெற்றால்தான்
விடுதலையின் விலை தெரியும்.
காலம் வந்து கதவைத் தட்டும் போது
சாவியைத் தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி
முகூர்த்த நேரத்தில்
தாலியைத் தொலைப்பவன் முட்டாள்.
முற்றிச் சரிந்த வயலுக்குள்
அரிவாளுடன் இறங்குபவன் அறிவாளி.
ஏர்கொண்டு இறங்கினால்...
புத்தியிலேதோ பிசகிருக்க வேண்டும்.
இது காலம் கனிந்த நேரம்.
தோளின் சுமையை
அடுத்த தலைமுறைக்கும் சுமத்தாதே.
பயணத்தை உன் கால்களே முடிக்கட்டும்.
இப்போது வேண்டும் வீரம்
நாணல் போலக் கூனல் கூடாது.
ஊசியிலை மரங்கள் போல நிற்பவன்
விழுந்தாலும் நினைக்கப்படுவான்.
மணிமுடியும், கவசமும் தாங்கிய
பெருமைக்குரிய பிறப்புடையவனே!
அடையாள அட்டையும்,
அகதிப்படிவமும் சுமக்கின்றாயே
நினைத்துப் பார்! நெஞ்சு கொதிக்கவில்லையா?
சாளரத்தைத் திறந்து வெளியே பார்.
குஞ்சுகள் கூட அணிவகுத்துப் போகின்றனர்.
முரசம் முழங்க முன்னேறுகின்றனர்.
முடிந்தால் அவர்களுடன் முன்னேறு
இல்லையேல் என்ன செய்வதா?
வாழ்த்துக்கூறி வழியனுப்பு.
வெற்றியுடன் வீடு திரும்பும் வரை
அவர்கள் நினைவாக வாழ்ந்துகொள்.
அது போதும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வடமராட்சி வதிரித் தெருவில் கிடைத்த ஈழக்காசு

செ. கிருஷ்ணராசா, எம். ஏ

நாணயங்கள் வரலாற்றுக் காலந்தொட்டு மக்கட் கூட்டத்தினரின் மத்தியில் பரிமாற்ற ஊடகங்களாக விளங்கியது மட்டுமல்லாது, நில ஆதிக்கவரம்பின் உச்சவரையறைகளை வெளிப்படுத்தும் ஆணையாகவும் செயற்பட்டிருந்த முறையினைக் காணலாம். அரசமுத்திரைகள், கொடிகள், சின்னங்கள், குலதேவதைகள் ஆகியவை பதிக்கப்பட்ட நிலையில் நாணயங்களை மக்கள் மத்தியில் புழக்கத்திற்காக அதிகாரிகள் அனுமதித்திருந்தனர். புராதன காலங்களில் தோற்றம் பெற்று-வளர்ச்சி கண்டிருந்த அரச வம்சங்கள் யாவும் வெளியிட்டு வைத்த நாணயங்கள், முத்திரைகள், இலச்சினைகள் அத்தகைய தன்மை வாய்ந்திருந்தன. இதே போன்று வணிக கணங்களினால் (சாத்துக்களினால்) வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த நாணயங்களும், முத்திரைகளும் மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்திய வணிக கணங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த இலச்சினைகளும், நாணயங்களும், கல்வெட்டுக்களும் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வணிக கணங்களினால் வெளியிட்டு வைக்கப்பெற்ற காசுகளில் அல்லது இலச்சினைகளில் அந்தந்த வணிகக் குழுக்களின் குழுக்குறியீடும், சில வேளைகளில் வாசகங்களும் இடம் பெறுவதுண்டு. வாசகங்கள் இன்றிக் கிடைத்த தனித்துவமான இலச்சினைகளுடனான ஈழக்காசுகளும் முத்திரைகளும் இப்பொழுது ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பின்னணியிலேயே மிக அண்மையில் வடமராட்சி- வதிரியில் உள்ள கோட்டைத்தெரு என்ற மையத்தில் கிடைத்த ஐம்பொன்னினாலான நீள்சதுரமான வெட்டுக் காசு (ஈழக்காசு) மத்தியகால வடமராட்சிப் பிராந்தியத்துடனும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும் சோழர்கால வணிகக் கூட்டுக்களில் ஒன்றான நானாதெசிகள் என்றழைக்கப்பட்ட சாத்துக்கள் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பு பற்றியும், அப்பின்னணியில் சோழப் பண்பாடு இப்பிராந்தியத்தில் பரந்துகொண்டிருந்த முறைமை பற்றியும் அறிந்துகொள்வதற்குரிய தொல்லியற் சான்றாதாரமாகின்றது.

## நாணயம் அடையாளம் காணப்பட்ட வகை

கோட்டைத் தெருவில் கிடைத்த தனித்துவம் வாய்ந்த இந் நாணயமானது நீள்சதுரமான அமைப்பினை உடையது. இதன் நீளம் 3 செ.மீற்றரும், அகலம் 2 செ.மீற்றருமாகும். நாணயத் தகட்டின் உலோகம் ஐம்பொன்னாகும். தகடு மிகவும் கனதியானதாகவும் உறுதிமிக்கதாகவும் காணப்படுகின்றது. நாணயத்தின் முற்பக்கத்தில் காணப்படுகின்ற உருவமானது சமபங்க நிலையில், சுகாசன இருக்கை முறையில் (இடது பாதம் இருக்கையில் சமாந்தரமாக மடிக்கப்பட்டும், வலது பாதம் இருக்கையிலிருந்து கீழே தொங்கிய வகையிலும்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மிக ஒடுங்கிய இடை, அகன்ற மார்புப் பகுதி, கேசம் கீழே தொங்கி நிற்கும் வகை (தலைவிரிகோலம்) ஆகியன திட்டவட்டமாக ஒரு பெண்ணின் உருவ அமைதியை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

நான்கு கரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் முன்னிரு கரங்களுமே மிகத் தெளிவாகவும், திரண்டதாகவும் காணப்படுகின்றது. முன்னிரு கரங்களுள் வலது கரத்தில் முச்சூலக் குறியுடனான ஒரு கருவி காணப்படுகின்றது. அம் முச்சூலக் கருவியின் நடுக்காம்பானது மற்றைய இரு காம்புகளையும் விட சற்று உயரமானதாகவும், கூடவே கேச மகுட மட்டத்திற்கு சற்று மேலாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையையும் காணலாம். இடது கரம் தாங்கி நிற்கும் பொருள் தெளிவற்றதாக உள்ளது. காரணம் அக்கரத்தின் முழங்கையுடனான பகுதி நாணய வெட்டுக்குள் (விளிம்புக்குள்) அகப்பட்டுவிட்டமையே ஆகும். இவ்வாறான தோற்ற நிலையில் அந் நாணயத்தில் காணப்படும் பெண் உருவமானது சமபங்க இருக்கை நிலையை மிகத் தெளிவாகக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

இவ்வாறான தோற்றப்பாடுடைய முத்திரை (Seal) ஒன்று அம்பாந்தோட்டையில் 1986ல் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அம் முத்திரையில் காணப்படுகின்ற பெண் உருவம் துர்க்கையின் ஒரு வடிவமான பரமேஸ்வரியாக வரலாற்று ஆசிரியர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த வட்டவடிவமான முத்திரையின் பின்புறத்தில் "நானாதெசிகள் சகை" என கி. பி. 11ம் நூற்றாண்டுக்குரிய தமிழ் எழுத்தக்களினால் வாசகம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளமையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இப்பின்னணியில் அம்முத்திரை சோழர் கால வணிக கணங்களுள் பிரசித்தமானதாக விளங்கிய நானாதெசிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

என்பவர்களது சின்னமாகும் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதே போன்றே கோட்டைத் தெருவிலிருந்து கிடைத்த இந் நீள்சதுரமான வெட்டுக் காசும் (ஈழக்காசு) நானா தெசிகளுடையது என்பதனை ஒப்பீட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. முச்சூலக் கருவியுடனான பரமேஸ்வரி நானா தெசிகளுடைய காவல் தெய்வம் என்பது தென்னிந்தியாவில் கண்டு பிடிக்கப்பட்ட சான்றுகளின் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## சோழப்பண்பாடும் வடமராட்சியும்

வடமராட்சிப் பிராந்தியத்தில் சோழப் பண்பாட்டு மரபுகளுடன் இணைந்த வகையிலான சில அம்சங்கள் ஏற்கனவே ஆராய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பொலிகண்டிக்கு அண்மையில் உள்ள கங்குண்டான் கிராமம் (கங்கைகொண்டான் கிராமம்) அருகிலுள்ள பாலாவிக் குடியிருப்பு- பத்திரகாளி அம்மன் கோவில், வதுரியில் உள்ள ஆலங்கட்டை, வீரணன்கல் (வீராணன்கல்), சக்கோட்டை (சாக்கோட்டை), வடமராட்சி கிழக்கிலுள்ள (சோழகுல) வல்லிபுரம், நாகர் கோயில், செம்பியன் பற்று ஆகியன சோழப் பண்பாட்டினை பிரதிபலித்து நின்றமைக்கான தொல்லியல் சான்றுகளைக் கொடுத்துள்ளன. ஆனால் கோட்டைத் தெரு என்ற மையமானது ஏராளமான சோழர் கால மட்பாண்டக் குவியல்களுடன் இணைந்த வகையில் இவ்வெட்டுக் காசினை (ஈழக் காசினை) கொண்டிருந்தமை இம் மையத்தின் அதித வரலாற்று முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. அதனை அங்கு நிலவிக்கொண்டிருக்கும் ஐதிகங்களும் உறுதிப்படுத்துகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கோட்டைத்தெரு என்ற பெயர்க் காரணம் தொடர்பாக அங்கு நிலவிக்கொண்டிருக்கும் ஐதிகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புராதன காலம் தொட்டு அங்குள்ள புளியமரத்தடியில் கோடு (மன்று) செயற்பட்டு வந்தது என்றும், அதனாலேயே அக்கிராமத்திற்கு கோட்டுத்தெரு என்ற பெயர் வழங்கப்பட்டது எனவும், அக்கோட்டில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை- வரிப்பணம் முதலியவை ஒரு பெரிய பானைக்குள் இட்டு மூடப்பட்ட நிலையில் மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டதன் பின்னர் புளிய மரம் ஒன்று அதற்குமேல் வயோதிப மாது ஒருவரினால் நாட்டப்பட்டது என்றும் அக்கதை மரபு நிலவி வருகின்றது. கோட்டுத்தெருவே பின்னர் கோட்டைத்தெரு என இன்று வழங்கி வருகின்றது என்பது பலரது கருத்தாக உள்ளது.

கோட்டைத்தெருவிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட புராதன மட்பாண்டங்கள் யாவும் சோழர்கால தொழில்நுட்ப உத்திகளையும் அலங்கார வேலைப்பாடுகளையும் ஒருங்கே கொண்டுள்ளன. பாத்திரங்களின், குறிப்பாக வாயகன்ற பாத்திரங்களில் கழுத்து வளையங்கள் மிகமிகத் தடிப்பாக இருப்பதோடு, கழுத்துப் பகுதியில் மிகவும் அலங்காரமான வளைவு வேலைப் பாடுகளைக் கொண்டு காணப் படுகின்றன. சமகால வெண்கல சிற்ப மரபுகளில் காணக்கூடிய அலங்கார வனப்புக்களை இப் பாத்திரங்களிலும் காணமுடிவது என்பது சோழக்கலை மரபினை தனித்துவமாக அடையாளம் காண வைக்கின்றது எனலாம். இதனை ஒத்த மட்பாத்திரங்களின் பல பாகங்கள் யாழ்ப்பாணக் கோட்டையில் தெற்குப் பக்க சுவர்ப் பரப்பிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னர் மீட்டெடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இம் மட்பாண்டங்களில் கி. பி. 11ம், 12ம் நூற்றாண்டுக் குரிய தமிழ் வரி வடிவம் பொறிக்கப்பட்டுக் காணப்படுவது சோழர் கால பண்பாட்டுப் பரப்பினை மேலும் அதிகரிக்கச் செய்யும் ஒரு வரலாற்று மூலமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. யாழ்ப்பாணக் கோட்டையும் அதன் பின்னணி நிலமும் உள்ளடக்கி இருந்த நிலப் பரப்பானது "ஐநூற்றுவன் வளவு" என்ற தோம்புப் பெயரினால் குறிக்கப்பட்டு வந்தமை இங்கு நோக்கத்தக்கது. "ஐநூற்றுவர்" என்பது சோழர்கால வணிக கணங்களுள் ஒரு பிரிவினர் என்பது சாசனச் சான்றுகளினால் உறுதிப் படுத்தப்பட்ட செய்தியாகும். எனவே சோழர் காலத்தில் வணிக கணத்தினரே அக்கால பண்பாட்டு குறிகாட்டிகளை மக்களுடன் தொடர்புபடுத்தி, தமது வாணிப- அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றிருந்தனர் என்பது இப்பொழுது தெளிவாகின்றது.

கோட்டைத்தெருவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கும் தொல்லியல் ஆய்வுகளினூடாகவே மேலதிகமாக சோழப் பண்பாடு பற்றியும், அதனுடன் இணைந்த உள்ளூர் நிர்வாக முறைகள் பற்றியும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும் என நாம் நம்பலாம்.

## கிராமிய திட்டங்கள்

சமூக மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பல்வேறு கிராமிய மேம்பாட்டுத் திட்டங்கள் கிராமிய உற்பத்திக் குழுக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் கிராமங்களில் அடிப்படையான பொருண்மிய மேம்பாடு ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. இந்த வகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள நாச்சிக்குடா கிராமத்தில் தும்பு உற்பத்தி நடவடிக்கைகளும் பள்ளிக்குடா, செம்மண்குன்று ஆகிய கிராமங்களில் கோழி வளர்ப்புத் திட்டங்களும் இரணை தீவில் கருவாடு பதப் படுத்துதலும் அரிப்பு கிராமத்தில் தென்னை உற்பத்தித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# மீன்பாடும் தேன்நாட்டின் தாய்மார்கள்

## கீத்தா

வயலில் உழுவதும், விதைப்பதும், மீன்கள் பாடும் வாவியில் வலை வீசுவதும், ஓய்வு நேரங்களில் வடமோடி, தென் மோடிக் கூத்துக்களை ஆடிக் களிப்பதுமாய்...


ஒரு காலத்தில் மட்டக்களப்பு தமிழர்கள் வாழ்ந்தனர். வானம் பொழிந்தது; பூமிவிளைந்தது; மீன்கள் பாடின. எனவே மக்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். இன்று அந்த மக்கள் மகிழ்ச்சி என்ன என்பதே அறியாது, அழுதுகொண்டேயிருப்பதைத் தவிர வேறெதுவுமே செய்ய வழியில்லாமல்... ஆனாலும் சோகங்களின் நடுவேயும் அவர்கள் நிமிர்ந்து நிற்க முயன்று கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் மட்டு நகரில் இருந்து இன்றும் புதிய புலிவீரர்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தின் அழுத்தங்களுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் மட்டக்களப்பிலிருந்து சில தமிழ்க் குடும்பங்கள் பிற மாவட்டங்களிலுள்ள தமது உறவினர்களைச் சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். சிறைக்கு வெளியே வந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் நிம்மதியோடும், திரும்பியும் மட்டக்களப்புக்குப் போகவேண்டுமே என்ற அச்சத்தோடும் நின்ற தாய்மார்கள் சிலரை நாம் சந்தித்தோம்.

"நாய் கொலைச்சா ஆமியின்ர நினைவுதான் வெருகுது. ஆமி 'ரவுண்டப்' பண்ணிறமாதிரிச் சத்தம் கேட்டுப் பெயந்துபோய் எழும்புவம். வாகனச் சத்தத்தைக் கேட்க பெச்சை உடுப்புக்களைப் பார்க்கவே பெயமாயிருக்கு. மௌனசுக்குள்ளேயே உக்கிப்போறம். 'புள்ளை வீரச் சாவடைஞ்சிட்டுது' எண்டு அறிஞ்சாக்கூட எங்களாலை வாய்உட்டு குளற ஏலாது. அறைக்குள்ள கதவைச் சாத்திக் கொண்டு வாயை மூடிக் கொண்டுதான் கண்ணீர் உடவேணும். எங்கையாவது சண்டை நடக்கப்போகுது எண்டு ஆமி அறிஞ்சா ஒவ்வொரு ஊருக்கையும் ஒவ்வொரு சீ.ஐ.டீ நிப்பான். சண்டை நடக்கிற நேரம் யார் ஊட்டில குளறுறாங்க, ஏன் குளறுறாங்க எண்டு பாத்துப் பிடிச்சுக் கொண்டு போடுவாங்க. சாப்பாடு இல்லாட்டாலும் பெரவாயில்லை. நிம்மதியான வாழ்க்கை எங்களுக்குத் தேவை." என்றார் ஒரு தாய்.

மட்டக்களப்பில் உள்ள தமிழர்


*மட்டக்களப்பிலிருந்து தமது உறவினர்களைச் சந்திப்பதற்காக வந்திருந்த தாய்மார்கள் சிலருடன் 'சுதந்திரப் பறவைகள்' சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டபோது.*





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தென்தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தினரால் எரியூட்டப்பட்ட வீடு ஒன்று

கள் சுவாசிப்பதற்குக்கூட சிறீலங்கா இராணுவத்திடம் அனுமதிப் பத்திரம் வாங்க வேண்டும். இராணுவ விதிமுறைகளை மீறுகின்றவர் யாராக இருந்தாலும் எந்த வேறுபாடுமேயின்றி எல்லோருக்குமே மரண தண்டனைதான் வழங்கப்படும்.

எல்லோரும் தம் வீடுகளில் உள்ள உறுப்பினர்களின் விபரங்களை புகைப்படங்களுடன் அந்தப் பகுதியிலுள்ள இராணுவ நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும். புதிதாக யாரும் ஊருக்குள் வருவதானால், வெளியே போவதானால் ஏன் போகிறார்கள், வருகின்றார்கள் என்றும் எத்தனை நாளில் திரும்புவார்கள் என்பதையும் பதிவு செய்து அவர்கள் தரும் அனுமதிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்த பின்னரே நகரலாம்.

சுற்றி வளைப்புக்கள், கைது செய்தலெல்லாம் அங்கு சொல்லிக் கொண்டு நடைபெறுவதில்லை. காலையில் எழுந்து பார்க்கும்போது வீதிகளில் இராணுவ நடமாட்டம் பரபரப்பாக இருந்தால் அன்று அந்த ஊரில் தேடுதலும், கைது செய்தலும் நடைபெறப்போகின்றது என்று அர்த்தம்.

சுற்றி வளைப்பு நடைபெறும் விதத்தை ஒரு அன்னை விபரித்தார்.

"எங்கட ஊரை ரவுண்டப் செய்ய வேணுமெண்டா சுத்திவெர இருக்கிற நாலைஞ்சு ஊரைச் சுத்தி நிப்பாங்க. பிறகு அப்படியே நெருங்கி நெருங்கி எல்லாப் பக்கத்தாலையும் ஒரே நேரத்திலை வெருவாங்க. ஒருபக்கத்தாலையும் ஓடேலாது. விடியச்சாமத்தில எல்லாரையும் பிடிச்சுக் கொண்டு போய் இருத்துவாங்கள். கண்ணைத் தவிர முழு உடம்பையுமே சாக்கால மூடிக்கட்டியிருக்கிற தலையாட்டிக்கு முன்னாலை நிப்பாட்டுவாங்கள். தலையாட்டி யாரையாவது பார்த்து தெலையாட்டினா அவ்வளவுதான்; பிறகு உயிரோடை இருக்கேலாது. ராவு எட்டுமணி, ஒன்பது மணியளவிலதான் எங்களைப் போக உடுவாங்க. அதுவரைக்கும் சொல்லொணாத அளவு சித்திரவதை நடக்கும்'' என்று சொன்னார் அந்தத் தாய்.

இராணுவத்தினரால் நம் தமிழீழப் பெண்கள் படும் அவலம் சொல்லமுடியாது.

"அம்மா, உங்களுக்குப் பொம்பிளப் புள்ள இருக்கா?"

"ஓம் இரிக்கி"

"என்ன செய்றா"

"படிக்கிறா"

"உங்கட மகள எனக்குக் கெலியாணம் கட்டித் தாங்க. உங்கட ஆக்கள் எல்லாம் இயக்கத்தில போய் செத்துப்போட்டாங்கள். இனி உங்கட மகளுக்கு நாந்தான் புருசன்"

இவ்வாறு தனக்கும் ஒரு இராணுவத்தினனுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் குறிப்பிட்ட ஒரு தாய்,

"என்ன செய்யிறது? கேட்டுக் கொண்டு போறதைத்தவிர வேற வழியில்லை" என்றார்.

தொடர்ந்து,

"இன்னொரு நாள் எல்லாரையும் வரச்சொன்னாங்க. போனம். கூட்டம் வெச்சுச் சொன்னாங்க, 'ஆறு மணியான உடனை ஒரு வீட்டிலையும் விளக்குப் பத்தக்கூடாது. நாங்க உண்மையான புலியைப் பிடிக்க வேணும். எங்களுக்கு ஏதும் நடந்தா, நீங்க ஒருத்தரும் இருக்கமாட்டீங்க' எண்டு சொன்னாங்க.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அவன்ட கையில ஆயுதம் இல்லாட்டா நாங்க சேந்து அவனுக ளைக் கெத்தியாலையாவது குத்திக் கொண்டிருப்பம். என்ன செய்யி றது? அவண்ட கையில ஆயுதம் இருக்கு அது எங்களை ஊமையா வைச்சிருக்கு. எங்களுக்கு ஒரு காலம் வெரும். அப்ப அவனைச் சும்மா உடமாட்டன்'' என்றார் ஆவேசத்துடன்.

"எங்கட இடத்துக்கு ஆமி ஒவ்வொரு நாளும் ஊடு ஊடாக, வெருவாங்க 'புலி வாறதா' எண்டு கேப்பாங்க. நாங்க 'இல்லை' எண்டாலும் அடிப்பாங்க. 'ஓம்' எண்டாலும் அடிப்பாங்க. நாங்க எதைச் சொல்லித் தப்புறது?"

"ஆமி வாறான் எண்டா எங்கட ஊர் நாயெல்லாம் கொலைக்கும். புலி வாறது எண்டா கொலைக்கிறதில்லை. நாங்க வாறது எண்டா கொலைக்குது'' எண்டு சொல்லி நாய் எல்லாத்தையும் சுட்டுப் போட்டாங்க.

"சின்னப் பிள்ளையளைப் பிடிச்சு, துவக்கைக் காட்டி 'மாமாமார் இது போல கொண்டு வாறதா' எண்டு டொபி எல்லாம் வாங்கிக் குடுத்துக் கேப்பானுங்கள். நாங்க பெயத்தில, ஆமி வாறான் எண்டா புள்ளையளை ஒளிச்சுப் போடுவம்."

"இரவுல வருவாங்க. கொஞ்சம் வசதியான ஊட்டு வாசலிலபோய், 'அம்மா, அம்மா' எண்டு கதவைத் தட்டி, 'நாங்கள் இயக்கம், நாங்க சைலன்ட் (அமைதி) குறூப்பில இருந்து வெருகிறம். தோணியில வந்தனாங்க. கொஞ்சப்பேர் ஆத்துக் குக் கெரையில நிக்கிறாங்க. எங்களுக்குப் பத்துப் பாசல் சோறுகட்டுங்கோ' எண்டு கேப் பாங்க. இயக்கம் எண்டு நினாச்சு அவசரமாச் சமைச்சுக் குடுத்த எத்தினையோ சனத்தைப் பிடிச்சுப் போட்டாங்க" என்றும் அவர்கள் சொன்னார்கள்.

"எங்கட கெஷ்ரத்தை என் னெண்டு சொல்லிறது. நாங்க ஆமியால, ஈப்பியால, ரெலோவால எல்லாராலயும் நிறையக் கெஸ்ரங் களை அனுபவிச்சிட்டம். இனி நாங்க செத்தாலும் பெரவாயில்லை. எண்ட மகனை ஒரு தரம் பாத்தாப் போதும் எண்டு வந்துசேந்து போட்டடன். இனித் திரும்பி அங்க போனா என்ன நடக்குமோ தெரியாது. ஏனெண்டா நாங்கள் இருக்கிற சூழ்நிலை அப்பிடி. எங்கட புள்ளையளைப் பார்த்துவிட்டு வாறம் எண்டு ரெலோ குடும்பங் களுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான். உடன ஆமிக்குச் சொல்லிப் போடுவாங்க. பிறகு நாங்க நிக்கிற இடமெல்லாம் நெருப்பாத்தான் எரியும். அப்படியான சூழ்நிலை யிலைதான் நாங்க வாழுறம்." என்றார் ஒரு தாய்.

"எண்ட மகன் ஒருவனை இயக்கத்துக்கு உதவி செய்யிறவன் எண்டு ரெலோக் குடும்பங்கள் காட்டிக் குடுத்து, ஆமி சுட்டுப் போட்டான். எண்ட அடுத்த மகனையும் காட்டிக் குடுத்தாங்க. அவன் இயக்கத்தில சேர்ந்திட்டான். அவனைப் பாக்கத்தான் எண்டு தெரிஞ்சா அங்க இருக்கிற எண்ட குடும்பத்தை டயர் போட்டு பத்த வைப்பாங்க. எங்களுக்கு ஆமியை விட எங்கட இனமா இருந்து கொண்டே காட்டிக் குடுக்கிறவங் களாலைதான் பிரச்சினை. இப்ப நான் இங்க நிக்கிறன். அங்க என்ன நடக்குதோ தெரியேல்லை."

என்று தன் துயரைக் கொட்டி னார் ஒரு தாய்.

"எண்ட ரெண்டு புள்ளைங்க ளும் வீரச்சாவடைஞ்சிட்டாங்க. அவங்க ரெண்டு பேருந்தான் ஆம்புளைப் புள்ளைங்க. இஞ்ச இருக்கிற எண்ட அக்கா, எல்லாரை யும் கூட்டி வந்து தன்னோடை இருக்கச் சொன்னா. எங்களுக்கு இருக்கிறது மட்டக்களப்பில இருக் கிற ஒரே ஒரு ஊடுதான். அங்கை யிருந்து வந்தா அந்த ஊடும் இல்லாமவுடும். எவ்வளவோ கஸ்ரப் பட்டு அந்த ஊட்டைக் கட்டினம். எண்ட புள்ளைகளும் நானும் தெலையில கெல்லும் மண்ணும் தூக்கி சுமந்து கட்டின ஊடு. அதையும் விட்டுட்டு இஞ்ச வந்து என்ன தொழில் செய்யிறது? எண்ட மூத்த மகளை வெளிநாட்டுக்கு அனுப்பக் கேட்டாங்க. நான் வேணாம் எண்டு சொன்னன். அங்கை போய் ஆருக்கும் அடிபணிஞ்சு உழைக்க வேணுமோ? செத்தாலும் பெரவாயில்லை. இந்த நாட்டிலைதான் சாகவேணும். ஆருரையையும் நாட்டிலை சாகக் கூடாது."

என்று உறுதியுடன் சொன்னார் இன்னொரு தாய்.

துன்பங்கள் வந்தால் சோர்ந்து போவதுதானே சாதாரண மனிதர் களின் இயல்பு. இது என்ன இவர்கள் வீரமாய், வேகமாய் பேசுகின்றார்கள்:

அடிபட, அடிபட பணிவதற்குப் பதில் நிமிர்கின்றார்கள்.

அடக்குமுறைப் பிடிக்குள்ளி ருந்தவாறே தம் மனங்களில் ஆக்கிரமிப்பாளர்களுடன் போரிடு கின்றார்கள்.

இவர்கள் தமிழர்கள். அதனால் தான் இந்த வீரமும் வேகமும் இவர்களிடம் இருக்கின்றது.

இவர்கள் கொஞ்சும் கிள்ளைத் தமிழில் பேசி, பாட்டெழுதி, கூத்து ஆடி தமிழையும் கலையையும் வளர்த்தவர்கள். அதனால்தான் இத்தனை பற்று இவர்களுக்கு.

நேற்று இவர்களின் மடிகளில் தவழ்ந்தவர்கள் இன்று எண்ணற்ற அளவில் போராளிகளாக மாறியிருக் கின்றார்கள். இவர்கள் ஓயமாட்டார் கள். தாயகம் விடியும்வரை தாமும் ஓயாமல், தம் குழந்தைகளின் வீரமும் மடியாமல் பார்த்துக் கொள்வார்கள்.

## ஆடுகள் வழங்கல்

கொழும்புத்துறை மேற்கு கிராம சேவைப் பகுதியில் மிக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் வைத்து அண்மையில் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முதிர்ந்து கனிந்த கனிவுள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்வுகள்



கிட்டு அவர்கள் தனக்கு இனியவளான துணைவி யாருக்கு எழுதிய மடல்களைத் தொகுத்து 'என் இனியவளுக்கு' எனத் தலைப்பிட்டு வெளியிட்டுள்ள அழகிய, செய்நேர்த்தியான சிறு நூலைக் கையிலெடுத்தவுடனே அன்புவயப்பட்ட இரு உள்ளங் களை, அவர்களுக்கே சொந்தமான தனியுணர்வுகளை உணர்வது போன்ற மெலிதான உணர்வு பரவியது. வாசித்து முடித்தவுடன்

**நூல் மதிப்பீடு**

## 'என் இனியவளுக்கு'

### கேணல் கிட்டுவின் கடிதங்கள்

**வே. பாலகுமாரன்**

மனதில் தோன்றிய எண்ணங்களை எழுத்தில் வடிப்பது இயலாத காரியம் என்றே பட்டது. 1991ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து 1992ம் ஆண்டு இறுதிவரையான அவரது வாழ்வின் குறுகியதொரு கால கட்டமே இங்கு எண்ணப்பதிவு களாகின்ற போதும் முதலில் வாசித்தபோது தோன்றும் பிரமிப்பே இதற்குக் காரணமாகின்றது. பின்னர் அப்பிரமிப்பானது மெல்ல அடங்கி ஆழ்மனதிலே அமைதிப் படிவமாகப் படிந்து மனதை மௌனிக்கச் செய்துவிடுகின்றது. ஏனெனில், ஒரு நிறை மனிதனின் எண்ணச் சிதறல்கள் அல்லவா இவை.

மனிதத் தேடலை- அதன் ஆரம் பத்தில் அவன் படும் அவலத்தை- பின் அத்தேடலில் இலக்குகளைத் தெளிவாக்கி, அதன் வழிகளை வகுத்து, அவ்வழியே ஆழமான முரண்பாடுகளைக் களைந்து- இவ்வாறாக கிட்டுவின் கடிதங்கள் கூறும் செய்திகள் புதுமையானவை. பொருள் பொதிந்தவை. மனிதனின் ஆன்மீகத் தேடலையும் போராட்ட வாழ்வின் அடிப்படைத் தத்து வத்தையும் ஒரு நேர் கோட்டிலேயே சந்திக்க வைத்து- அத்தத்துவக் கருவின் பின்புலத்திலே வாழ்வின் அர்த்தத்தை- எவரும் வாழ்வதின் நோக்கத்தை எம்முன்னே விரிய வைத்து விடுகின்றது. அவ்வகையில் தனக்கான தனது துணைவரின் எண்ணப் பகிர்வுகளை முழுத்தமிழீழ மக்களோடும் பகிர, பகிர்ந்திட முன்வந்த அவரது துணைவியாரின் அன்புள்ளம் வாழ்த்தப்பட வேண்டியதாகின்றது.

இந்நூலின் தொகுப்பானது மலையின் அடிவாரத்திலிருந்து அதன் உச்சியை நோக்கி ஏறும் மனநிலையை தோற்றுவிக்கும் வகையில் படிப்படியாக ஒரு கருத்துக்குவி மையத்தை ஈற்றில் அடைவாகப் பெறத்தக்கதாக அமைந்திருப்பதும் இங்கே குறிப் பிடப்படவேண்டிய செய்தியொன்றா கின்றது. மண்ணை, மக்களை, மனதுக்குகந்த காதலியை விட்டுப் பிரிந்த அவலத்தில் தொடங்கி- பின் அவர் மனம் அமைதியாகி முத்திப் பக்குவமாகி- முதிர்ந்து ஆன்மீகத் தேடலின் எல்லையைக் கண்டு தெளிவாகி- தனது தேடலின் முடிவை எண்ணப் பெய்வுகளாகப் பெய்யும் வகையில் நூல் அமைந்து விட்டது பெரும் பேறுதான். குறிப்பாகக் கிட்டு அவர்கள் 1992ம் ஆண்டின் இறுதியில் எழுதிய நவம்பர் 07, நவம்பர் 16ம் திகதிகளிட்டு (தன் தாயார், சகோதரன், அவர்தம் மனைவி, பிள்ளைக்கு) எழுதியவை, இறுதியாக டிசம்பர் 15ல் தனது துணைவி யார்க்கு எழுதியவை. தான் உய்த் துணர்ந்தவற்றில் சொல்லவேண்டிய வற்றை சொல்லிவிடும் வேகம் தெரிகிறது. இவை ஒரு போராளி இறுதியில் பரிணமிக்கவேண்டிய உயர்நிலையை, தமிழீழ மக்கள் தம்மை அக, புற விடுதலைகட்கு தயாராக்க வேண்டிய அவசியத்தை கற்றுக்கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அன்புள்ளங் கொண்டு கனிந்த இரு தூய உள்ளங்களிடையே பரிமாறப்படும் எண்ண மடல்கள் வெறும் காதற் கடிதங்களாக அமையாமல் பாரதி கூறியது போல-

**"ஞானமென்ற விளக்கினை ஏற்றிக்**
**காலமுற்றும் தொழுதிட வேண்டும்**
**காதலென்பதோர் கோயிலின் கண்ணே"**

என்றாகிவிடுகின்றது.


துணைவியைக் கைப்பிடித்த உடனேயே (1989ம் ஆண்டு ஐப்பசி மாத முடிவில்) நாடுவிட்டுச் சென்ற கிட்டுவின் தொடக்க கடிதங்கள் அவர்பட்ட மன அவலங்களை வெளிப்படுத்தும் போது கவிதை களேயாகிவிடுகின்றன.

**"என் கவிதை உனக்குப் புரியாது.**
**ஏனென்றால்**
**நான் கவிதை எழுதவில்லை.**
**இதயத்தில் இருக்கும் வேதனையால்**
**எண்ணத்தில் உதிக்கும் அலைகள்**
**அதைத்தான் எழுதுகிறேன்."**

-என்கிறார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தளபதி கிட்டுவின் துணைவியார்

துயரின் உச்சமாய்-

'எல்லாவற்றையும் பிரிந்துவிட்டு என்னை இங்கு வாட வைத்ததே என்விதி'

என்று தன்னையே முதலில் நொந்துகொள்ளும் அவர், பின் என்னமாய் மாற்றம் கொள்கின்றார்.

"மறுக்கப்படும் எம்மக்கள் வாழ்விற்காக ஆயுதம்தாங்கி போராட வேண்டிய" நியதியை நிலைநிறுத்தும் அவர், "எம்மிடையே வறியவர்க்கு மறுக்கப்படும் வாழ்வு கொடுக்கப் படவேண்டும்." என்ற அடிப்படையிலேயே தனது தேடலைத் தொடங்குகிறார். ஆனால் அவரது இத்தேடல் என்பது திடீர் என்று வெளிநாட்டில் தொடங்கியதாகக் கருதமுடியாது. இதற்கான விடை அவரது துணைவியாரின் முன்னுரையிலே இருக்கின்றது. எப்போதுமே வேகமாக இயங்கிக் கொண்டிருந்த போராளி ஒருவரின் ஆழ் மனநிலையை எவரால் அறியமுடியும்? அவருக்கு தொடக்கத்தில் இருந்தே ஆன்மீக ஈடுபாடு- எதிராளி மீதும் பரிதாபப்படும், அவர்தம் குடும்பங்களை நினைத்து வேதனைப்படும் இயல்பு- தெரியாதனவற்றை சிறுபிள்ளைபோல எவரிடத்திருந்தும் கேட்டுத் தெரியும் சுபாவம்- மக்கள் நேயம்- அவரது தேடலின் தொடக்க நிலையாக இருந்திருக்க வேண்டும்.

தேடலின் அடிப்படை விதிகளை துணைவியார்க்கு விளக்கும் போது:-

"உலகில் எல்லார் கருத்தையும் கேள். சிந்தி. நன்றாக சிந்தி, நீயாக சிந்தி. யாரும் உனக்காக சிந்திக்கமாட்டார்கள்" என்றும்,

"அறிவும் வயதும் அனுபவமும் உயர்வும் கிடைக்கும்போது பணிய வேண்டும். பணிவென்பது உலகையும் மக்களையும் புரிந்துகொண்டு அவர்களுக்காக உழைத்தல்"

என்றவர்; அதை மேலும் விளக்குகையில்:-

"அறிவும் கல்வியும் கூடும்போது மனிதன் கீழிறங்கி வரவேண்டும்." என்கிறார்.

பின், முத்தாய்ப்பாக தேடலின் இலக்கை விரிவாக்கும் போது "ஒவ்வொரு மனித வாழ்வுக்கும் அர்த்தமிருக்கிறது. எம்முடைய வாழ்வின் அர்த்தத்தை நாம்தான் தேடிக்கொள்ளவேண்டும். தேடல் என்பது எம்முள் இருக்கும் அழுக்கை அகற்றுவதுதான்" என மிக இலகுவாக புதியதாக விளக்கி நிற்கின்றார்.

இங்கேதான் கிட்டு உயர்ந்து நிற்கின்றார். உயிரூட்டமுள்ள போராளியாக அவர் எழுதுவதும் ஆத்மீக ஞானத்தின் அழகைக் கூறும் துறவியாக அவர் மாறுவதும் இங்கேதான் நிகழ்கிறது. அவர் இறுதியாக கூறுகிறார்:-

"பணக்காரனையும் ஏழையையும் சமமாக நடத்தப்பழகு. படித்தவனுக்கும் பாமரனுக்கும் சமமாக மதிப்புக்கொடு. மாற்றங்கள் மனதிலேற்படவேண்டும். இது சோசலிசமுமல்ல; ஆத்மீகமுமல்ல. இதுதான் மனிதன் வாழ்வென்பது"

-இது அவரது துணைவியார்க் கூடாக எம்மவர் எல்லாருக்கும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொல்லும் செய்தியல்லவா?

"வாழ்வு மறுக்கப்படும் வறிய வர்க்கு.. விறகு கொத்தும் கந்தனுக்கும், கள்ளு வடிக்கும் பூதனுக்கும், கோமணத்தோடு தோட்டம் கொத்தும் இராமையாவுக்கும், கண்வலை வீசும் கோபுவுக்கும் வாழ்க்கை வளம்பெறவேண் டும்.... இதைத்தான் ஆத்மீகமும் சொல்கிறது. புரட்சியும் சொல்கிறது. ஆத்மீகம் போதிக்கிறது. புரட்சி வழிகாட்டுகின்றது. ஆத்மீகமும் புரட்சியும் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான்."

இங்கேதான் தேடலின் சிகரத்தை கிட்டு தொட்டுவிடுகிறார். காலம் காலமாக விளங்காப் பொருளாக நிற்கும் தத்துவ சிக்கலொன்றை முடிச்சவிழ்த்து விடுகின்றார். தனி மனித விடுதலைக்கும், அடிமைத் தளையை அறுக்கும் சகமானுடத் தின் விடுதலைக்கும் உள்ள முரண்பாட்டை நீக்கி விடுகின்றார். ஆன்மீகத்திற்கும், பொருண்மிய உல கிற்கும் இடையே பாதை அமைத்து விடுகின்றார். தேசவிடுதலைப் போராட்டத்தையும் பொதுவுடமைத் தத்துவத்தையும் இணைத்துவிடுகின் றார். அகவிடுதலைக்கும், புறவிடு தலைக்கும் தொடர்பேற்படுத்தி விடுகின்றார். இவை எல்லாவற்றை யும் விட தேடலை எவர்க்கும் இலேசாக்கி எவரும் தேடவேண்டிய அவசியத்தை மிக எளிதாக வலியு றுத்தி விடுகின்றார். ஏனென்றால், இவ்வுலகம் ஏற்கனவே தேடலைத் தொலைத்த உலகம். தேடுவோரை தடுமாறவைத்து தத்தளிக்கவிடும் உலகமல்லவா? இதனாலே

"தொடங்கியது சரிதான் நடுவி லெங்கோ வழிதவறிப்போனேன்"

-என் போரும்,

"தேடலில் ஈடுபட்டே தேடியதை தொலைத்தேன்"

-என்போரும் இங்குளர்.

"தேடாதே தேடினால் தொலைந்து போவாய்

இங்கே பாதைகள் மாற்றி வைக்கப் பட்டுள்ளன"

எனப்பயமுறுத்தும் இவ்வுலகில் இப்படியொரு அற்புத மனநிலை எவ்வாறு கிட்டுவிற்கு வாய்த்தது? ஏறுங்கால் இறங்கவும், இறங்குங்கால் ஏறவும் அவரால் எவ்வாறு முடிந்தது? குருதியைக் குதறும் சோகங்களும் இழப்பின் அவலங்க ளும் வெற்றியின் பெருமிதமும் நிறைந்த போர்க்களத்தில் நின்ற போராளிக்கும் உயர்மன அமைதி கிட்டி... முதிர்ந்து, கனிந்து, பழமாகி, பக்குவமாகி கசியும் கருணை உணர்வுகள் ஊற்றெடுக்கும் உள்ளம் எவ்வாறு கிட்டியது? துறவிகட்கும், ஞானிகட்கும் கிட்டாத ஞான ஒழுக்கமும் மன ஒருமைப்பாடும் இணைந்த நிலையை அவர் எவ்வாறு சென்றடைந்தார்?

இவை எல்லாவற்றையும் விட தனி மனித ஆளுமையை தாபன மொன்றின் இயங்கு விதிகட்குள்ளே நின்று வளர்க்க முடியும் எனபதை அவர் நிரூபிக்கும் விதமே அலாதி யல்லவா? விடுதலைப் போராட் டத்துள் புகவிரும்பாமல், தமது சுதந்திரம், ஆளுமையை மழுங்கடிக்க தாம் தயாராக இல்லையென பொய்காப்புக் காரணங்கள் பல கூறி விலகிநிற்கும் அறிவார்ந் தோருக்கு அவர் புகட்டும் பாடம் ஒரு வரலாற்று விதியாகி விடுகின் றது. எனவே, காசி ஆனந்தன் எழுதியதுபோல, "நிறைவாகும்வரை மறைவாக இருந்த" கிட்டு அவர்கள் போதித்த உண்மைகள் எமது போராட்டத்தின் புத்துயிர்ப்பு விதிகளாகும். எமது போராட்டம் இன்றைய உலகிற்கு அளிக்கப் போகும் புதிய தத்துவத்தின் தோற்று வாயாகும்.

ஏனென்றால், "வாடிய பயிரைக் கண்டபோது வாடியதோடு" நின்றுவிடாது அதை வாடாமல் இருக்க வழிகண்டவர் பெயரே போராளி ஆகின்றது. எமது போராட்டத்தின் மறுபெயர் மனித நேயம் என்று ஆகிவிடுகின்றது. தளைகள் அறுத்தல் என்பது "நாமார்க்கும் குடியல்லோம்" என அ டி மை த் த ளை யை அறுப்பதாகிவிடுகிறது. புறவிடுதலை கிட்டாமல் அகவிடுதலை பற்றி எவராலும் சிந்திக்க முடியுமா என்ன?

இதனையே "எமது சூரியன் ஒருநாள் மலரும்" என மனையாளுக்கு மடல் வரைந்த கிட்டு- "செங்குருதித் துளி என் இதயச்சுவர் சுடர்கின்றவரை இங்கொரு விடுதலையை மலர்விக்க இறப்பிலும் வாழ்வேன் நான்" என்ற வரிகளுக்குச் சாட்சியாகிவிட்ட கிட்டு "மறைந்தாய் மண்ணில் மடிந்தாய்"

-என்றும்,

"படிந்தாய் கண்ணில் நீர் முத்தாய்"

என தமிழீழ மக்கள் உதிர்க்கும் கண்ணீர்த் துளிகளிலே படிந்து விட்டான் அல்லவா?

இப்போது எவரும்-

"அறத்திற்கேகும் அன்பு சார்பென்பர்_ அறியார்

மறத்திற்கும் அஃதே துணை"

என்ற குறளை வாழ்விக்க மறைந்தவர் கிட்டு- உற்றுணர முடியுமல்லவா?

**நன்றி: வெளிச்சம்**

---

**தொகுப்பு நூல்**

## தளபதி கிட்டு: ஒரு காலத்தின் பதிவு

**தளபதி கிட்டுவைப் பற்றி தலைவர் அவர்களிடமிருந்தும், சகதோழர்களிட மிருந்தும் கட்டுரைகளாக, உரைகளாக, பாடல்களாக, கவிதைகளாக வெளிப் பாடு கண்ட உணர்வலைகளும், இயக் கத்தின் அதிகாரபூர்வ குரல்களாக வெளியிடப்பட்ட அறிக்கைகளும் கட்டுரைகளும் இந்நூலில் உள்ளடங்கி யுள்ளன.**

**கேணல் கிட்டுவினது தாயகம் நோக்கிய பயணம் பற்றியும், அவர் பிரயாணம் செய்த கப்பலைச் சுற்றி இந்திய அரக பின்னிய சதி தொடர் பான விபரமான விளக்கங்களையும், இந்த இந்தியச் சதி தொடர்பாக புலிகள் இயக்கம் வெளியிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கைகளை யும் ஒருசேரப் பார்க்கும் வாய்ப்பை இந்நூல் வழங்கியுள்ளது.**

**இந்தவகையில் கேணல் கிட்டு தொடர்பான ஒரு நல்ல ஆவணமாக இந்நூல் விளங்குகின்றது எனலாம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## சுதந்திரப் பறவைகள் பார்வையில்..

# சீதனத் தடைச் சட்டம்

தமிழ்ச் சமூகத்தின் மேலான நல்வாழ்வைச் சிதைப்பதில் சீதனமும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. வெளிப் பார்வைக்கு இது பெண்களை மட்டும் பாதிப்பது போலத் தோன்றினாலும், உண்மையில் மொத்தச் சமூகமுமே பாதிப்புக்குள்ளாகின்றது.

சீதனம் என்பது எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திலிருந்து விலகிவிட்டது. திருமண வயதை நெருங்கிக் கொண்டிருக்கும், கடந்து கொண்டிருக்கும் பெண்களிற்கும் அவர்களின் பெற்றோருக்கும் இது ஒரு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விட்டது.

ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை பெண்களில் பெரும்பாலானோர்க்கு சுயமான பொருளாதார அடித்தளம் இல்லை. உழைக்கும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. ஆகவே தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான சீதனத்தைத் தாமே சேகரிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவே. பெரும்பாலும் இவர்களுக்கான சீதனத்தைச் சேகரிப்பது இவர்களின் ஆண் சகோதரர்களாகவோ, அன்றி தந்தைமாராகவோதான் இருப்பர். சில வேளைகளில் சீதனம் தாய் வழிச் சொத்தாகவும் அமைந்து விடுவதுண்டு.

எப்படிப் பார்த்தாலும், ஒரு ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் பொருட்டு பலர் தமது உழைப்பைச் செலவிடுகின்றார்கள். சீதனம் கொடுக்க முடியாத நிலையால் மணவாழ்வின்றி வாடும் பெண்கள், தம் குடும்பத்துப் பெண்களின் வாழ்வுக்கென உழைப்பதிலேயே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழிக்கும் ஆண்கள் என ஒட்டு மொத்தமாக முழுச் சமுதாயமுமே இந்தச் சீதன நடைமுறையால் பாதிப்புக்குள்ளாகின்றது.

தமிழீழ விடுதலைக்காக நாம் போராடிக் கொண்டிருக்கின்ற அதே நேரம், எமது இனத்தைச் சிதைக்கும் தன்மை வாய்ந்த சீர்கேடுகளை நீக்கவேண்டிய கடமையும் எமக்குண்டு. அதனால்தான் எங்களெல்லோரையுமே பாதிப்புக்குள்ளாக்குகின்ற 'சீதனம்' என்ற நடைமுறையை இல்லாதொழிக்க முனைந்துள்ளோம்.

சமுதாயத்தில் எவ்வெப்போது சீர்கேடுகள் எழுந்தனவோ, எழுகின்றனவோ அவ்வப்போதெல்லாம் புதிது புதிதாகச் சட்டங்கள் இயற்றப்பட்டன; இயற்றப்படுகின்றன. அதாவது மக்கட் சமூகத்தில் எழுகின்ற சீர்கேடுகளைக் களையும் நோக்குடனேயே சட்டங்கள் எழுதப்படுகின்றன.

எழுதப்படுகின்ற சட்டங்கள் எல்லாமே சரியான முறையில் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லைத்தான். சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் தோன்றலாம். சட்டங்களைத் தவறான வழியில் பயன்படுத்துவோரும் உளர். எனவே சட்டங்கள் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

அதுபோலத்தான் சீதனத் தடைச் சட்டமும். இப்போது உள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சீதனத் தடைச் சட்டம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் எழுகின்ற சிக்கல்களைப் பொறுத்து இது திருத்தி அமைக்கப்படும்.

சீதனத்துக்கு எதிரான தடைச் சட்டத்தின் வெற்றி தமிழீழ மக்களின் கைகளிலேதான் தங்கியுள்ளது.

## சிறிலங்காவில் 50,000 போதைவஸ்து பாவனையாளர்

சிறிலங்காவில் போதைப் பொருள் பாவனைக்கு 50,000 பேர் அடிமையாகியுள்ளனர் என தேசிய ஆபத்து ஒளடக சபை தெரிவித்துள்ளது. தற்போது மேற்படி சபையினால் அமைக்கப்பட்ட 5 புனர்வாழ்வு நிலையத்தில் வருடமொன்றுக்கு 2,000 பேர் அனுமதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்று வெளியேறுகிறார்கள் எனவும் 3,000 பேர் ஆலோசனை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

போதைவஸ்துப் பாவனைப் பெருக்கத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகள் பெரும் பங்கை வகிக்கின்றன. அதேவேளையில் இந்தியா - பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து மேற்கு நாடுகளுக்கு போதைவஸ்துகள் கடத்தப்படுவதற்கு சிறிலங்கா ஒரு மையமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது.

இது பற்றிச் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரசிங்க கருத்துத் தெரிவிக்கையில் போதைவஸ்து பாவனை விற்பனைக்கெதிராகக் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டால் மட்டுமே இவற்றைத் தடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தகர்வு

**செம்பியன் செல்வன்**

இருளும் அச்சமும் கொண்ட நீண்ட இரவுப்பொழுது, அந்திவேளை உதயத்தின்போதே ஊரை உறக்கத்திலாழ்த்தும். இடையிடை வெடிக்கும் துப்பாக்கி ஓசைகள் அவர்களை அடிக்கடி மூத்திரத்திற்கு எழுப்பிவிடும். ஆர்.பி.ஜிக்கள் தொலை தூரத்தில் வெடித்துச் சிதறும். பக்கத்துக் கல் வீடுகள்... பங்களாக்களில்... மாடிக் கட்டிடங்களில்... நள்ளிரவில் எழும் சந்தடிகளும்... சரசரப்புக்களும்... அச்ச வெடிகளும்... "எங்க இருக்கு?... எங்க ஒழிச்சுப் புதைச்சு வைச்சிருக் கிறியள்... சொல்லமாட்டியா... உன்ர சின்ன மகன்ர சின்னிவிரலை வெட்டி எடுத்தாத்தான் சொல்லு வியா?... எங்களிட்ட ஒண்டுமில்லை யெண்டு நீ சொன்னாப்போல நாங்கள் ஒண்டும் பேயர் மடைய ரல்ல... நம்புறதுக்கு... நீங்கள் ஆரு?... உங்கட வைப்புச் சொப்பென்ன?... எல்லாத்தையும் அறிஞ்சுகொண்டு தான் வந்திருக்கிறம்... டேய்... அந்தப் பெட்டையைப் பிடிச்சுக்கொண்டு வாடா... அப்பத்தான் இவருக்கு எங்களைப் புரிய வரும்"

"ஐயோ..... வேண்டாம், வேண் டாம்... என்ர சொத்துப் பத்தெல் லாத்தையும் கொண்டு போங்கடா... என்ர குஞ்சுகளை ஒண்டும் செய்து போடாதேங்களடா".

"ஏய் வாய் பொத்தோணும்... சத்தம் போட்டா பொடியங்கள் வருவாங்கள் எண்டு நினைப்போ... இப்ப வந்து பாக்கவேணும்... வரச் சொல்லுங்கடி பாப்பம்... தெரு முழுக்க இந்தியன் ஆமி நிக்குது எங்களுக்குக் காவலா... கூப்பிடுங் களடி அவன்களை"... என்று எழும் குரல்களும்.... சப்பாத்துச் சரசரப்புக் களும்... தெரு நாய்களின் குரைப் பொலிகளும் எல்லாவற்றையும் உணரவைக்க, இருளில் கூட மூச்செழா வண்ணம் முடங்கிக் கிடப்பர்.

தெரு நாய்கள் கூட நன்றாக இனம் கண்டுகொண்டன. வருவது இந்தியன் ஆமியா... துரோகக் கும்பலா... பொடியளா என்று... நாய்களின் குரைப்பொலி வித்தியா சத்திலிருந்தே மக்களும் இனம் பிரிக்கவும்... வெடியோசைகளிலிருந்து இது பொடியளின்ர... இது ஆமி யின்ர என்று வேறுபடுத்தவும்... வானத்தில் எழும் சப்தங்களிலிருந்து பொம்மரா... அவ்ரோவா... சீப்பிளேனா...? என்று குழந்தைகள் கூட பந்தயம் கட்டுவதை ஒரு போர்க்கால விளையாட்டாகவே மாற்றிக்கொண்ட அவர்கள்...

எதற்கும் விடியட்டும்... செய்தி தெரிய வரும் என்று நித்திரையில் லாமல் படுக்கையில் புரளும் ஆண்களை... என்னப்பா... என்று மெல்லக் குசுகுசுக்கும் மனைவி மார்களை, அதைத் தெரியப்படுத்த விரும்பாமலோ... வெறும் ஊகங் களைச் சொல்லி இதுகளை ஏன் கலவரப்படுத்துவான் என்ற நினைப் பில்... ஒண்டுமில்லையப்பா நீரேன் வீணாக் கவலைப்படுகிறீர்?... பேசாம நித்திரையைக் கொள்ளும்... அவங் கள் எங்கையோ கடலுக்கை அடிக் கிறாங்கள் போல... என்று சொல்லப் போக, என்னப்பா... பொடியள் ஏதும் ஆயுதங்கள் வண்டியில கொண்டு வந்து இருப்பாங்களோ... அதைக் கண்டுட்டுத்தான் ஆமிக் காரன்கள் அடிக்கிறான்களோ... என்று கவலையில் விசாரணை விரிய... உந்த விசர் எண்ணங்கள் தானே உங்களுக்கு வரும்... பொடியளைப்பத்தி இவ்வளவுக்குப் புறகும் என்ன நினைக்கிறியள்?... பொடியளின்ர வீரத்தில... புத்தியில கால்தூசி பெறுவாங்களே... இவங் கள்... என்று பேச்சிலேயே மிகுதிப் பொழுதையும் கழித்து வெளியே வருவார்கள்.

அவர்களுக்கு இந்த நித்திய வாழ்க்கை வழக்கமான பழக்கமாகி விட்டது...

அன்று விடிகாலையில் எழுந்த சடசட.... சடசட பட்... பட் வேட்டுச் சத்தங்கள் கிராமத்தையே ஒரு உலுப்பு உலுக்கிவிட்டது.

ஊருக்குள் ஏதோ அனர்த்தம் நடந்து விட்டது.

எங்கே...? எங்கே?...

'கோயில் குருக்களின்ர மகனை... சின்ன ஐயரை இந்தியன் ஆமி சுட்டுப்போட்டாங்களாம் 'பொடி' கோயிலுக்குள்ளையாம்... ஏன் சுட்டவங்களெண்டு தெரியாது... காலைப் பூசைக்குப் போனவையும் உள்ளயாம்... ஒருவரையும் வெளிய விடுறாங்களில்லையாம்...'

செய்தியை காற்றிலே பறக்க விட்டவர்கள் யார்?

கிராமமே கோயிலை நோக்கி ஓடியது.

சடலத்தை வாங்க நீண்ட நேரம் போராட வேண்டியதாயிற்று. கோயிலுக்கு வெளியே கிராமமே திரண்டிருந்தது. சின்ன ஐயரை ஏன் சுட்டீர்கள்... என்ற மக்களின் கேள்விக்குப் பதிலில்லை... இந்தியா இன்னொருமுறை தனது அஹிம்சை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



யில் சேற்றை அள்ளிப் பூசிக் கொண்டது.

'சின்ன ஐயரை எங்களிடம் தாருங்கள்... அவர் எங்கட கிராமத்தின் சொத்து... அவரின் கொலைக்கு யார் காரணம்?...' மக்களின் கொதிப்புக்கு அவர்கள் இறங்கி வரவேண்டியதாயிற்று.

"பிரேதத்தைத் தரலாம். ஆனால் நீண்ட நேரம் வைத்திருக்கக் கூடாது. இரண்டுமணிக்குள் அடக்கம் செய்து விடவேண்டும்... ஊர்வலத்தில் ஐம்பது பேருக்குமேல் கூடாது... நாங்கள் அடிக்கடி வந்து பாப்பம்..."

இந்திய ஆமி வெளியேறியது.

உள்ளே அகப்பட்டிருந்த அடியார் கூட்டம் திகைத்துச் சூழ்ந்து நிற்க வித்தியா வியாகரண சித்தாந்த சிரோன்மணி சாம்பசிவக் குருக்கள் தனது ஐம்பதாவது வயதிலும் தளராத உடல் நிலைகுலைய கர்ப்பக்கிருகப் படிக்கட்டில் உறைந்து போயிருக்க, அவர் காலடியில் சின்ன ஐயர் நெஞ்சில் குண்டு பாய்ந்த அடையாளக் குருதியில் கிடக்க...

உள்ளே நுழைந்த கூட்டத்திலிருந்த நாலைந்து இளைஞர்கள் பரபரப்பாக கடமையாற்றத் தொடங்கினர். யார்? என்ன செய்கிறார்கள்? என்பதைப் புரிந்து கொள்வதற்கிடையில் சின்ன ஐயரின் சடலம் வீடுபோய் சேர்ந்து விட்டது.

வீடு சிறிது நேரத்தில் அழுகை ஒலியால் நிறையலாயிற்று. ஊரும் உறவும் கூடியது. சாம்பசிவக் குருக்களின் பத்தினியார், மகனின் சடலத்தைப் பார்த்து மயங்கி விழுந்தவரின் மயக்கத்தைப் போக்க சில அம்மாக்கள் முயன்று கொண்டிருந்தனர். சின்ன ஐயரின் சகோதரிகள் சகோதரனின் முகம் பார்த்துக் கதறிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரேயொரு சகோதரன்; ஆளும் நல்ல அழகன். சைவானுஷ்டானங்களைக் கடைப் பிடிப்பது மட்டுமல்லாமல், இருக்கு வேதம் கற்றுக் கொள்கிறான்... வேதங்களில் மிகப் பெரியது... இதனைக் கற்றாலே யசுர், சாம, அதர்வணங்களைக் கற்றுவிட்ட நிறைவு ஏற்படும்... சமூகத்தில்... சடங்குகளில்... நல்ல மதிப்பும் ஏற்படும்... இவற்றுடன் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரியில் ஏ.எல் மருத்துவம் படிக்கிறான்... தோளிற்கு மேல் வளர்ந்த பிள்ளை, அதனால் அடிக்கடி தந்தைக்கும் மகனுக்குமிடையில் தர்க்கங்கள் நிகழ்வதை தாயும், சகோதரிகளும் பார்த்தும், கேட்டும் மகிழ்வர். அந்தச் சகோதரன் இன்று இப்படி... வாய்பேசா மௌனியாக... நீண்ட துயிலில் சூழ்ந்திருக்கப் பொறாமல் இரு சகோதரிகளும் வாய்விட்டு அடிக்கடி அலறினர்.

சாம்பசிவக் குருக்களோ பார்வையை அவனது நெற்றிப் பொட்டினூடாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்...

"மகன் இப்ப எங்கட சமூக ஆசாரங்களெல்லாம் கெட்டுக் கொண்டு வருகிறது... அவனவன் ஆசாரங்களைக் கைவிட்டுவிட்டு கிராப் வைத்துக் கொண்டு அரசாங்க உத்தியோகத்திற்கும் வேறு மாதச் சம்பளத்திற்கும் போய் விடுறாங்கள்... பணம்... செல்வம்... மட்டுமா வாழ்க்கை... பிழைப்பு... நாங்கள் தெய்வத்தை தொட்டு வாழுறவங்கள்... மக்கள் தங்கள் விக்கினங்களுக்கு கடவுளைத் தேடி வருகினம்... நாங்கள்தான் கடவுளுக்கும் அவர்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பவர்கள்... நாங்கள் எங்கள் குல தர்மத்தை... புனிதத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்."

"எல்லாம் சரிதான் அப்பா... ஆசாரம்... ஆசாரம்... என்று சொல்லிக்கொண்டு சில சமயம் மக்களை விட்டே வெகுதூரம் போய் விடுகிறோமோ என்று அச்சமாக இருக்கு..."

"நாம் என்ன? அரசியலில் தேர்தல் காலத்தில் வாக்குக் கேட்கும் அரசியல் வாதிகளே?... நாம் எட்ட எட்ட நிக்கத்தான் புனிதம் பெருகும்... தூய்மை சிறக்கும்... ஏனெண்டா இது தெய்வ சங்கல்பம்... தெய்வ சேவை... அதோட..."

அதோட என்னப்பா...

'ப்பிராஹ்மணோ ஸ்யமுகமாசித் பாஹுரன்ய'. பிராமணர்கள் யஜ்ஞப் ரௌஷகன் முகத்திலிருந்து வந்ததாக ஸூக்தம் சொல்கிறது...

அப்பா... உங்களிடம் வேதம் கற்றுக் கொள்கிறேன். உங்களிடம் பெற்ற பிரம்மோபதேசம்... திரிகால சந்தியாவதனம்... காயத்திரி மந்திரம் எல்லாமே எனது உடலுக்கு ஆத்மாவுக்கு இன்பமாக இருக்கிறது... கல்லூரியிலே கற்கும் கல்விக்கும் நிறையப் பயன் தருகிறது... சமூகத்திலே உயர் நிலையிலிருந்த பிராமண சமூகம் இன்று என்ன நிலையில் உள்ளது? இந்தியாவில் உயர் சமூகமெனக் கூறி தாழ்நிலைப் படுத்துகிறார்கள்... அரசியல் மேடைகளில் எங்களைச் சதுரங்கக் காய்களாக நகர்த்துகிறார்கள்... ஏன் எங்களைப் பலிக்கடாக்களாக்கி வருகின்றார்கள்... இது எங்கள் பொருளாதாரத்தை நிறையப் பாதிக்கின்றது... ஏன் இன்றைக்கு

**கல்லுண்டாய் முதல் அராலி வரை**

## உவர் நிலப் பயிர்ச்செய்கை யாழ். செயலகம் பரீட்சார்த்த முயற்சி

**கல்லுண்டாய் வெளியில் இருந்து அராலி வரைக்குமான பகுதியில் உவர் நிலப் பயிர்ச்செய்கை ஒன்றை பரீட்சார்த்தமாக மேற்கொள்ள யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ். செயலக பதில் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.**

**இதேபோன்ற ஒரு பரீட்சார்த்த திட்டமொன்று அண்மையில் கோப்பாய் பகுதியில் மேற்கொள்ளப் பட்டு வெற்றியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.**

**அத்துடன் மேற்படி உவர் நிலத்தில் கால் நடைகளுக்கான புல் வகைகளையும் ஒரு பகுதியில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

**மேற்படி திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்தும் அப்பிரதேசங்களில் பயிர்ச்செய்கை பண்ணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பிராமண சமூகம் கோயிலை விட்டு வெளியே வேலை தேடுகின்றது...? பூசகர் வேலையில் போதிய வருமானம் இல்லை... மாறிவரும் விலை வாசிகளுக்கேற்ப சன்மானம் வழங்குகிறார்களா?.. அதுவுமில்லை... ஆனால் அந்த சொற்ப சன்மானத்தைக் கொடுக்கும் போதும் எவ்வளவு எள்ளல்கள்... கேலிகள்.

சாம்பசிவக் குருக்கள் மகனை உற்றுப்பார்த்தார். எவ்வளவு உண்மைகளை உணர்ந்து பேசுகிறான், தந்தைக்கு உபதேசித்த தகப்பன் சாமிபோல... அவர் நெஞ்சம் விம்மக்கேட்டார்.

"அதற்கு என்ன செய்வது?"

"ஒன்றும் செய்யவேண்டாமா?... நாங்கள் வெறும் பூசகர் மட்டுமல்ல, தமிழர்களின் பண்பாடு... கலாச்சாரம்.. சடங்கு... சம்பிரதாயங்களை வழிவழியாகக் கட்டிக்காத்து மக்களுக்கு அளித்து வருபவர்கள்... கோயில்கள் இவற்றின் களஞ்சியங்கள்... இந்த உண்மையை மக்களுக்கு புலப்படுத்த வேண்டும்... இதைத்தான் ஆதிசங்கரரும் இன்னொரு வழியில் செய்தார்."

அவர் திடுக்கிட்டார்.

ஆதிசங்கரர்?

"ஆமாப்பா, தானறிந்த பிரம்மோபதேசம் பிறருக்கு... முக்கியமாக சூத்திரருக்கு தெரியக்கூடாது... தெரிந்தால் தனக்கு நரகம் என்பதை நன்குணர்ந்தும் லோகாமோஷத்திற்காக ஊர் அறியப் பிரசங்கிக்கவில்லையா... அதனால் இந்துமதம் வளர்ந்ததேயன்றிக் குன்றவில்லையே"

"நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"இந்த உண்மையைப் புரிந்து கொண்ட மக்களுடன் நாம் இணைந்துகொள்வோமானால் எமது தனித்துவமும் வளரும்... நாடும் நன்மை பெறும்... அதற்காக நாம் போராட வேண்டிய காலம் வந்து விட்டது..."

"சண்டையா? அது பிராமண தர்மமல்லவே?"

"தர்மங்களை நிலைநாட்ட நடந்த போர்களில் பிராமணர்கள் பங்குகொள்ளவில்லையா?"

அவர் நெற்றி சுருங்கியது.

என்ன சொல்கிறாய்?

பாரதப் போர் நடந்தது. எதற்காக?... நடத்தியவர் யார்?... குருக்களின் விழிகளில் நீர் பிரவாகமெடுத்தது மகனே!... மகனே!...

***

ஏய்!.. ஏய்!..இங்க நிண்டு இப்ப ஆர் ஓடினது உண்மையைச் சொல்லிப்போடவேணும்.

யார் யாரோ வேகமாக குறுக்கும் நெடுக்குமாக ஓடுகிறார்கள்... சப்பாத்துக் கால்களின் ஒலி... தெய்வ சந்நிதானத்தையே கொலைக்களமாக்கிய பாதகர்கள்... தெய்வ சந்நிதானத்திலேயே தெய்வமாகி வந்து சயனம் கொள்ளும் இந்தப் புனித இடத்தைக் கூடவா சற்று நேரம் தூய்மையாக இருக்க மனம் விடவில்லை யார் இந்த அரக்கர்கள்...?

எல்லாக் கைகளிலும் துப்பாக்கிச் சனியன்கள்...

உதவி செய்து கொண்டிருந்த இளவட்டங்கள் எல்லோரும் எங்கேயோ போய் ஒளிந்துகொண்டார்கள்... பெண்களின் விழிகளில் நீர் பயத்தால் உறைய... சில வயோதிபர்கள் திண்ணையில் இருந்தவாறு மௌனமாகப் பார்வையை விரித்த

# நடு வீட்டுக்குள் விழுகின்ற இடிகள்

## படையினர்க்கு எரிச்சலையும் தலையிடியையும் கொடுக்கும் தொடர் அதிரடி

பூநகரி 'தவளை' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் சிங்களப் படைத்தளபதிகளுக்கு எரிச்சலையும்-தலைவலியையும் ஒரு தொடர்தாக்குதல் கொடுத்துள்ளது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் மன்னார்த்தீவு மற்றும் ஊர்காவற்துறை ஆகிய இடங்களில்- அடுத்தடுத்து நடந்த மூன்று தாக்குதல்களே அவையாகும்.

இத் தொடர்தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனாலும் இத்தாக்குதல்களில் படையினர்க்கு ஏற்பட்ட இழப்புக்களைவிட, வெற்றிகரமாக உட்புகுந்து தாக்குதல்களை நிகழ்த்திவிட்டு வெற்றிகரமாகப் புலிகள் வெளியேறிச் சென்றமைதான், படைத்தளபதிகளுக்கு எரிச்சலையும் தலைவலியையும் கொடுத்துள்ளன.

மன்னார்த்தீவில் தாராபுரம் இராணுவ - பொலிஸ் கூட்டு மினி முகாம் மீது, 9-3-94 அன்று ஒரு அதிரடித் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் 6 படையினர் பலியாகினர்; பலர் காயமடைந்திருந்தனர். இத்தாக்குதல் நடந்த இரண்டாம் நாள், ஊர்காவற்துறையில் ஒரு இராணு வண்டியை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட 'கிளைமோர்' தாக்குதலில், 4 படையினர் உயிரிழந்தனர்; 12 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். இந்த 'கிளைமோர்' தாக்குதல் நடந்த நான்காம் நாள் மீண்டும் மன்னார்த்தீவினுள் நடந்த ஒரு அதிரடியில், மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். இந்த மூன்று துணிகரத் தாக்குதல்களும் கடல்வழியாக வந்த புலி வீரர்களால் நடாத்தப்பட்டதாக, படையினர் தரப்பில் கூறியிருந்தனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வாறு...

இங்க ஆர் வந்தது?... நிண்ட பொடியள் எல்லாம் எங்க?

யார் யாரையோ விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் இழவு வீட்டிற்கு வந்தாக்கள்... இண்டைக்கு என்ன இண்டைக்கு... இனி இந்த வீட்டிற்கு துக்கம் விசாரிக்க ஆக்கள் வந்து போவினம்... செத்தது என்ன உங்களைப்போல சாதாரண மனுசனா...? வேதவித்து... கிராமமே நம்பிக்கையோட காத்திருந்த உத்தம மனுசன்... கிராம மக்களின் கனவையே அழிச்சிட்டீங்களே... இங்க வந்து போறவையள கணக் கெடுக்கவே வந்திருக்கிறம்? போதாத தற்கு நீங்கள் வேற சப்பாத்துக் காலோடு..

ஏய் கிழடு என்ன கனக்க கதைக்கிறா?... துப்பாக்கியின் பின் பக்கத்தால் யாரோ அடிக்கும் ஓசை

ஐயோ... ஐயோ... முருகா...

கெதியெண்டு சவ அடக்கத்தை முடிக்க வேணும்... ஆரும் பொடியள் இளம் பொடியள் இங்க நிக்க வேண்டுமெண்டால் எங்கட சம்ம தம் எடுக்கவேணும்...

ஏன்?... ஏன்?...

அவர் கண்களில் எதுவோ காட்சியாக விழுகிறது...

உதயகாலப் பூஜைக்காக அவரும் மகனும் வீட்டை விட்டு புறப்பட்டபோது எல்லாம் சரியாகத் தானிருந்தது. ஆள் அரவமற்ற வீதி... வெட்டவெளியில் உறங்கும் தோட் டங்கள்... ஆட்களற்ற துலாக்கள்... வானோடு மௌன இரகஸ்யம் பேசும் பெரிய தோட்டக் கிணறு கள்... காலைப்பனி தூறியிருந்த தார் வீதி பச்சைப் பசும் புல் நிலங் களுக்கு சமன்தான். வீதியின் வலது புறம் கழிவு வாய்க்கால்... அதற்கப் பால் பரந்திருந்த தோட்டம்... தோட்டத்திற்கு அப்பால் புகையிரத வீதி... அதற்குமப்பால் வெறும் பற்றைகள்... பனைவடலிகள் புல் மேடுகள்... வழக்கமான பார்வையில் மாற்றம் தெரியவில்லை. தந்தையும் மகனுமாகக் கோயிலைத் திறந்து உள்ளே புகுந்து பூசைக்கான யுத்தங் களை மேற்கொண்டனர். பெரியவர் கர்ப்பக்கிருகம் புக சின்னவர் மடப்பள்ளியிலிருந்த சருவக்குடமும் கயிறுமாக தீர்த்தக் கிணற்றை நோக்கிச் சென்றபோது, அவர்கள் நுழைந்தார்கள்.

ஐயா சத்தம் போடாதேயுங்க... நாங்கதான்...

இரண்டு இளைஞர்கள் அவசர மாக நுழைவதற்காக காலில் சிலிப் பருமில்லாமல், சாறம் சேட்டுடன் ஒருவன் கையில் உரப்பையில் எதனையோ சுருட்டி வைத்திருக் கிறான்...

அவருக்கு விளங்கி விடுகிறது.

தண்டவாளத்துக்கு அங்கால ஆமிக்காரன் விடியவிடிய படுத்துக் கிடக்கிறான்... ஐயா, நாங்க வந்ததைக் கண்டிட்டாங்கள் எண்டு தான் நினைக்கிறம். எப்படியும் அவர்கள் வாறதுக்குள்ள நாங்க போயிடுவம்... நீங்க ஓடிப்போய் பூசைமணியை அடியுங்க...

பஞ்சாட்சரம் மணியை நோக்கி ஓட, அங்க என்ன கதை யாரோட கதைக்கிறா...? என்றபடி சாம்பசிவக் குருக்கள் கர்ப்பக்கிருகத்தை விட்டு வெளியே வந்தவர் திக்கித்துப்

**இதேவேளை இராணுவத்தின் பிடியிலுள்ள காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, மண்டைதீவு, ஊர்காவற்துறை மற்றும் மன்னார்த்தீவுகளில் நிலை கொண்டுள்ள படையினர்க்குத் தொல்லை கொடுக்கும் நோக்குடன் புலிகள் ஒரு தொடர் தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர் என, 'ஐலண்ட்' இதழ் (13.3.94) கூறியிருந்தது.**

**நடந்து முடிந்த தாக்குதல்கள் காரணமாகவும், இனியும் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற ஊகங்கள் காரணமாகவும், மன்னார் தீவு உட்பட தீவகம் தொடர்பான இராணுவக் கொள்கையில் சில மாற்றங்கள் செய்தாக வேண்டுமென, படைத் தளபதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

**இப்பகுதியில் படையினரின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து, தீவகத்தை இரும்புப் பிடிக்குள் வைத்திருக்க வேண்டுமென, ஒருபகுதியினர் கூறியுள்ளனர். அவ்விதம் துருப்புக்களைத் தீவகத்தில் குவிப்பது நடைமுறையில் பல சிக்கல்களைக் கொடுக்கக் கூடியது என வாதிடும் மறுபகுதியினர், கட்டுப்பாட்டுப் பகுதியைச் சுருக்கிக் கொள்வதன் மூலம் அப்பகுதியைப் பலப்படுத்தி இராணுவத்தினரைப் பாது காக்கவும், புலிகளின் ஊடுருவலைத் தவிர்க்கவும் முடியுமெனக் கூறுகின்றனர். ஆனால் இதுவரை பெரியளவில் எந்தமாற்றமும் நடக்கவில்லை என்றே, கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.**

**மன்னார்த்தீவில் அடுத்தடுத்து நடந்த இரண்டு அதிரடிகளிலும் பார்க்க, ஊர்காவற்துறை கிளைமோர் கண்ணி படையினரை அதிகளவு அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இதற்கு ஒரு காரணம் உண்டு. பத்தொன்பது மாதங்களுக்கு முன் சிங்கள தேசத்தையே உலுக்கியெடுத்த அராலிக் கண்ணியுடன், இந்தக் கிளைமோர் கண்ணியைப் படையினர் ஒப்பிட்டுப் பார்ப்பதால் எழுந்த அச்சம்தான் அது.**

**படையினரின் பிடியிலுள்ள தீவகத்தில், அன்றிலிருந்து இன்றுவரை பாதுகாப்பான பிரயாணப்பாதை என்று எதுவுமில்லை என்ற உணர்வு, இப்போது படையினரை ஆட்கொண்டு விட்டது. இந்த மனப்பீதி அங்குள்ள படையினரது மனநிலையைப் பெருமளவு பாதிப்பதுடன், ஒரு மனக்களைப்பையும் ஏற்படுத்தலாம்.**

**அண்மைக் காலத்தில் கடற்புலிகள் பெற்றிருக்கும் பலமும் இந்தத் தொடர் தாக்குதல்களும், கடலால் சூழப்பட்டிருக்கும் தீவகப்பகுதிப் படையினரது 'அமைதியை' நிரந்தரமாகவே குலைத்துவிட்டிருக்கும் என நம்பலாம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போகிறார்.

அவர்கள் வடமேற்குத் திசை யாக வாகனசாலையிருந்த இடமாக ஓடுகிறார்கள்.

வெளியேயிருந்து சிற்சில அடியார் கள் கோயிலுக்குள் நுழைந்து சில மணித் துளிகளில் இந்திய ஆமி 'படபட' வென உள்ளே புகுகின்றது. கோயிலின் உள் வீதியெங்கும் சப்பாத்துக்களுடன் ஒடுகின்றனர். புல் வெளிகளில் தட்டாம் பூச்சி யைத் துரத்தி வெறும் கையுடன் திரும்பும் சிறுவர்கள்போல...

ஏய்... ஐயர்... இங்க வா... இரண்டு பேர் வந்தாங்கள் எங்க...

எந்த ரெண்டு பேர்?

சாறனோட வந்தாங்கள்...

நான் கர்ப்பக்கிரகத்திற்குள் நிண்டனான் கவனிக்கேல்ல...

ஏய்... பூஜாரி பொய் சொல் லுறா? இல்லை, நீயும் அவங்கட ஆளா..? நீ நிசம் சொல்லாட்டா உங்களையும் எல்லாம் சுடுறது... வா.. எல்லோரும் வரிசையா நில்லுங்க... ஆ.. ஒண்ணு... ரெண்டு

வெடிச்சத்தம் வானைப் பிளக் கிறது...

பஞ்சாட்சரம்... கர்ப்பக்கிருக வாசலில்.

இந்த வெடிச்சத்தம் எதனையோ வெளியில் நின்றவர்களுக்கு உணர்த் தியிருக்க வேண்டும்.

தண்டவாளத்திற்கு அப்பால் பல வெடிச்சத்தம் கேட்க ஆமி நகர்கிறது...

ஐயோ... மகனே...! பஞ்சாட் சரம்... அவரது இதயம் ஓலமிட்டு அழுகிறது...

இந்திய இராணுவம் நுழைந்த போது தமிழர்களுக்கு ஏதாவது இவர்களால் நன்மை கிடைக்கலாம் என அறியாமை வசத்தில் நம்பிய வர்... இந்தியா என்றால் தமிழகம்... தமிழகம் என்றால் எமது தாய்நாடு என்ற மனப்பான்மையில் வளர்த் தெடுக்கப்பட்ட பரம்பரை வேறெப் படி சிந்திக்கும்? அதிலும் சாம்ப சிவக்குருக்கள் போன்றோருக்கு?

இந்தியா வேதங்களின் விளை நிலம், அங்கிருந்து வரும் படை நிச்சயம் நல்லதே செய்யும்.

# தெருக்கூத்து

**அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை தொடக்கம் விழித்தெழுவோம், பெண் அடிமை என்ற இரண்டு தெருக்கூத்துக்கள் முல்லை மாவட்டத்தின் சகல கிராமங் களிலும் முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தால் எழுச்சி கரமாக நடத்தப்பட்டுவருகிறது.**

"அப்பா படை எண்டால் படைதான்... அதில் சைவப்படை... அசைவப்படை என்ற வித்தியாச மில்லையப்பா"

பரமசிவம், வாய்க்கு வந்தபடி பேசாத, உனக்கென்ன தெரியும் இந்தியா பற்றி..?. எங்கும் நதிக் கரைகள்... புண்ணியதலங்கள்... கன்னியாகுமரியிலிருந்து இமயமலை வரை புண்ணிய பூமியிலிருந்து வருப வர்கள் வேறுயாருமல்ல... எங்கட சாதி சனம். நீ ஒரு கண்டறியாத கல்லூரி ஒண்டிலை படிக்கப் போய்த்தான் இப்படியெல்லாம் பேசிறா... பாரன் என்ன நடக்கப் போகுது எண்டு...

அவர் எதிர்பாராதது நடந்தது.

மக்கள் அனைவரும் உடனடி யாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அருகிலுள்ள கோயில், பாடசாலைகளில் போய் இருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

அவர் மனதில் ஏதோ ஒன்று நகர்வது போல் பட்டது. குடும்பத் துடன் நல்லூரை நோக்கி நடந்த போதுதான் அவருக்கு அரசியல் அறிவு ஏன் அவசியம் என்று புலப்படலாயிற்று. மனைவியோ... வீடு வாசல் எப்படியிருக்குமோ... பண்டம் பாத்திரம் பறிபோகாமல் இருக்குமோ என்று கவலைப்பட்ட தற்கு... வந்தவங்கள் என்ன கொள் ளைக்காரன்களோ? நீ ஒண்டுக்கும் பயப்படாத, அதோட கோயில் குருக்கள் வீட்டில் கை வைக்கிற அளவுக்கு மோசமா இருக்க மாட்டாங்கள்... என்று தேற்றியவர் ஒரு வாரத்தின் பின் வீட்டிற்குச் சென்றவர் அதனைத் திறக்க வேண்டியிருக்கவில்லை வீடு சூறை யாடப்பட்டிருந்தது. கோயிலை நோக்கி ஓடினார்....

கோயிலின் உட்பிரகாரங்களில், மடப்பள்ளிப் பாத்திரங்கள் மாமிசக் கறி எச்சங்களுடன்...

ஐயோ... முருகா... என்ற அலறலுடன் அவரின் இன்னொரு மூலையில் எதுவோ தகர்ந்தது.

வேத வித்துக்களின் விளை நிலங்களில் அரக்கர் முளைத் தெழுந்தது எப்படி...?

கோயிலில்... மடப்பள்ளிப் பாத்திரங்களில்... மாமிசக்கறி... பொறுப்பதிகாரியின் சட்டையில் ஏதோ சர்மாஜி எனப் பெயர் பொறித்திருந்ததாக ஞாபகம்...

அவர் இடிந்துபோய் உட்கார்ந் திருக்கிறார்....

கோயிலை எப்படிப் புனிதப் படுத்துவது...?

'யார் வீட்டில...?'

அவர் எட்டிப்பார்க்கிறார். வெளியே இந்திய ஆமி.

என்ன?

இந்த வளவு வேலியை வெட்டிப் போடவேணும்... நாளைக்கு நாங்க வரேக்க வெட்டாமலிருந்தா எரித்துப் போடுவோம்.

ஏன்...?

அதென்ன கேள்வி... சொன் னதை செய்யும் ஐயர் சரியா...

அதெப்படி இந்த வளவுக்கு மேற்கால பிரதான வீதி... தெற்கால சின்ன வீதி.. வேலியை வெட்டி விட்டா... நடுச்சந்தியிலதான் என்ர வீடு... இது பிராமண வீடு... அப்படியிருக்க முடியாது...

ஏய் ஐயர்... அதிகம் பேசாத... சொன்னதைச் செய்...

அவர் அடுத்த நாள் பூசை முடிந்து வரும்பொழுது அவரது வேலி எரிந்துகொண்டிருந்தது... இந்தியன் ஆமி தனக்குப் பாதுகாப் புத் தேடிக்கொண்டிருந்தது.

அவரது நெஞ்சம் எரிந்து கொண்டிருந்தது. இப்படைகளுக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இப்படியெல்லாம் ஆணையிட்டுக் கொண்டிருக்கும் அந்தப் பெரியவன் யார்? நல்லாயிருப்பானா?... அவனும் இப்படியா?... வரம் கொடுக்கும் வாய் சபிக்கிறதா?

ஏய்.. ஐயர்... நீ என்ன பொடியள் கட்சியா?...

என்ன பேசாமலிருக்கிறாய்? அந்த வேலியை நீ ஏன் வெட்டிப் போடேல்ல...?

எதை...?

அதிர்ந்து போகிறார்.

கிணற்றடிக்கு மறைவாகப் போட்டிருக்கிறதையா? அதை வெட்டி விட்டா பெண் புரசுகள் எப்படி மானம் மறைப்பாக நின்று குளிக்குங்கள்?...

ஏன் பொடியள் மறைவா நிண்டு எங்களுக்கு குண்டு சுடவா...

சொன்னதைச் செய்... படைக்குப் பாதுகாப்புத் தேவை?...

அவரது குடும்பம் விடிகாலைக்கு முன்னதாகவே கிணற்றடிக்கு செல்லத் தொடங்குகிறது...

***

திருப்பொற் சுண்ணம் இடித்தாயிற்று. பஞ்சாட்சரத்தின் சடலத்திற்கு இறுதி மரியாதைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விம்மல்... அழுகை எங்கும் நிறைகிறது. பெண்கள் பெருங்குரல் எடுத்து அழுகின்றார்கள்...

பெட்டி... பெட்டி...

பெட்டி வருகின்றது...

கிரியைகள் தொடர, பேச்சுக்கள் கிசுகிசுக்கின்றன.

பெட்டியைக் கொண்டு வாறது பெரும்பாடாப் போச்சு... பெட்டி எடுக்கிற இடத்தில வைத்து மறிக்கிறாங்கள்... யாருக்கு... எங்க செத்ததெண்டு ஆயிரம் பதில் வழி வழிய சொல்லிக்கொண்டு வர வேண்டியுள்ளது... பெட்டிக்குத் தேவையான மரங்களில்லை எண்டு பெட்டி செய்யிறவன் அழுகிறான்... வரேக்க இந்தப் பெட்டி ஒன்றுதான் கடைசியாகக் கிடந்தது... அவனும் கடையைப் பூட்டிக் கொண்டு போறான்...

வேலிகளில்லாததால், பெட்டி வாசலால் வருகிறதா.. வீட்டைப் பிளந்து கொண்டு வருகிறதா என்று புரியாத நிலையில் பாடையும் மக்களுமாகத் தெருவில் இறங்குகின்றனர். தூரத்தே வெடிச்சத்தங்கள் கேட்கின்றன.

சுடலையில், மண்டபத்தில் மீண்டுமொருமுறை சடங்குகள் நடக்கின்றன. பெட்டியில், இருந்து சடலம் 'பச்சைப்பன்னாங்கு'க்கு மாற்றப்பட்டு சைவக்காரருக்கான இறுதிக் கிரியைகள் மிக வேகமாக...

சுடலைக்கு வந்தவர்களுக்கோ வீடுகளுக்குத் திரும்பும் அவசரம்... மந்திர கோஷங்களும்... யாககுண்டப் புகையும்... எங்கும் சூழ...

சுடலை கட்டைகுத்தி தனது உதவியாளர்களுடன் சிதையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறான்... கிடைக்கப் போகும் துணிமணி... சாராயத்திற்கான காசு... என்பவற்றின் நினைவில் படு உற்சாகமாக... கட்டைகளை அடுக்கி... பக்க அணையாக கம்பிக் கட்டைகளை அடித்து.. வாகாகப் பற்றி எரிய பழைய ரயர்களையும் காற்று வீசும் திசை பார்த்து காய்ந்த தென்னோலை, காவோலைகளை அடுக்கி... அவன் காத்திருக்கிறான்.

சடலம் கிடத்தப்பட்டு, நெஞ்சாங்குத்தி ஏற்றி, அவர் கொள்ளிக் குடம் கொண்டு மூன்று முறை சுற்றி தீயிட்டபின் தான் அது நிகழ்ந்தது.

சவப்பெட்டியைக் கொத்தி எரியும் நெருப்பில் சிதையில் போடுவதற்காக கட்டைகுத்தி வேகமாக கோடரியை உயர்த்தினான். யாரோ ஒருவன் வந்து அவன் கைகளைப் பிடித்து நிறுத்தினான்.

என்ன?

கொஞ்சம் பொறு... பெட்டியை வீணாக்காத இப்ப பெட்டி தேவையாக இருக்கு...

அப்படி சவப்பெட்டியை இரவல் கொடுக்கிற வழக்கமில்லை. அத்தோட இது குருக்கள் வீட்டுப் பெட்டி... அவர்கள் சம்மதமின்றி...

அந்த இளைஞர்கள் குருக்களை நெருங்குகிறார்கள்.

முதல் தடவையாக அவர் முகத்தில் ஒரு புன்னகை மலர்கிறது.

மகனே!... நீயே இல்லை... இதில் உடமை பற்றிய பேச்சு... வேடிக்கையாக இல்லையா...? தெய்வமானபின் சடங்குகளும் சம்பிரதாயங்களும்... நீ அன்று ஆதிசங்கரரை உதாரணம் காட்டினாய்... ஆனால்.. இன்று நீயே... உன் சவப்பெட்டியை இன்னொரு போராளிக்கு உதவப் போறதை நினைத்தால் என் மெய்யே புல்லரித்துப் போகிறது...

அவரது உள் மனம் ஏதேதோ பேசுகிறது...

பிள்ளையள்... என்ன தயங்குகிறீர்கள்...? உங்கள் போராட்டங்களின் புனிதமும் பொருளும்... ஏன் எங்கட வேதத்தின் உட் பொருளும் இப்பதான் எனக்குப் புரியுது... ஆனா எப்பவோ புரிந்துகொண்ட என் மகன்... போங்கள்... கெதியாப் போங்கள்.... அந்த அறுவான்கள் இங்க வருமுன் பெட்டியைக் கொண்டு போய்விடுங்கள். போராட்டம் வெற்றி பெறும்... அப்பொழுது... நாங்கள் எங்கட பிள்ளைகளை இப்படி அநியாயமாகப் பறிகொடுத்துக் கொண்டிருக்க மாட்டம்.

தூரத்தே எதுவோ நொருங்கித் தகர்வது போல் பேரோசை ஒன்று எழுகிறது.

## கோழி வளர்ப்பு

**கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் முகமாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வகையில் நுணாவில் கிழக்கு கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியில் குடும்பம் ஒன்றுக்குத் தலா 25 கோழிக் குஞ்சுகளும் தீவனமும் ஐந்து குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றது. அத்துடன் இயக்கச்சிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களுக்கு தலா 2500 ரூபா வீதம் மொத்தம் 37,500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கிராமியப் பாசறை

## பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

அண்மையில் வடமராட்சியிலுள்ள கரவெட்டி என்னும் இடத்தில் உள்ள இராஜ கிராமத்தில் நடைபெற்ற கிராமியப் பாசறையின்போது, அங்கு வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

இப்பிரச்சினைகள் அனைத்துக்கும் மூலகாரணியாக இருப்பது கல்வியறிவின்மை என்பது தெளிவாகியது. இதுகுறித்து ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப் படவுள்ளன.

விடுதலைப் புலிகளின் அரசியற் துறையால் நடாத்தப்பட்ட கிராமியப் பாசறையின்போது பல பிரச்சினைகள் பற்றி நேரடியாக ஆராயப் பட்டன. 1994.02.15 அன்று தொடக்கம் 1994.02.19 வரையான ஐந்து நாட்களும் நடாத்தப்பட்ட கிராமியப் பாசறையின்போது இக்கிராமத்தில் வாழும் மக்களிடையே காணப் பட்ட பிரச்சினைகள் குறித்து அவர்கள் மத்தியில் இறங்கிப் பார்த்த போது பல பிரச்சினைகளின் காரணங்கள் தெளிவாகின.

நெல்லியடியிலிருந்து ஏறத்தாழ 300 யார் தூரத்திலமைந்துள்ள இராஜகிராமம் 287 குடும்பங்களைக் கொண்ட மிகவும் பின்தங்கிய கிராமமாகும். 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் எடுக்கப் பட்ட தகவல்களின்படி கிராமத்தின் மொத்த சனத்தொகையில் 53.7 வீதம் பெண்களாவர். கல்வியறிவிலே மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ள இக்கிராமத்தில் பெண்களின் நிலை பரிதாபத்துக்குரியதாகக் காணப் படுகின்றது. இக்கல்வியறிவற்ற தன்மையானது பல பிரச்சினைகளை அவர்கள் மீது அழுத்தியுள்ளது.

எமது சமூக அமைப்பைப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பொறுத்தவரை ஏறக்குறைய ஒரு குடும்பத்தின் சகல விடயங்களையும் தாங்கி நிற்பவள் தாய். இதனால் அவள், குடும்பத்தின் சகல பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியவளாகிறாள்.

இந்த நிலையில் படிப்பு வாசனையே அறியாத தாய்மாரின் எண்ணிக்கையே இங்கு அதிகம். இப்பாரிய பிரச்சினையானது இச் சமுதாயத்தை பல வழிகளிலும் பாதித்துள்ளமை ஆழ நோக்குதற்குரியது.

தாய்மாரின் குடும்ப ஆளுமையற்ற தன்மை சிறுவர், சிறுமியரின் எதிர்கால வாழ்க்கையை வளர்ச்சியற்ற, குறைபாடுடைய பாதையில் செல்வதற்கு வழிவகுத்திருக்கிறது.

குடும்பத் திட்டமிடலில் ஏற்படும் தவறுகள், பொருளாதார பலமற்ற நிலை, இவற்றின் நடுவில் திண்டாடும் தாய்மார் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு வலுவற்றவர்களாக இருக்கின்றனர்.

சுகாதாரச் சீர்கேட்டினால் ஒரு புறம் தொற்றுநோய்களும், போசாக்கின்மை, குருதிச்சோகை போன்றவற்றினால் சூழப்பட்ட சிறுவர் சமுதாயத்தில், சிறுவர்களின் எதிர்கால வளர்ச்சி என்ன? இதற்குப் பொறுப்பானவர்கள் பெற்றோர்களே என்று ஒட்டுமொத்தமாகக் கூறாவிடினும் ஆழ்ந்து நோக்குகையில் பெண்களின் கல்வியறிவு பற்றிய பிரச்சினையே மேலோங்கி நிற்கிறது.

குழந்தை பிறந்த சில நாட்களில் நோய்வராமல் தடுப்பூசி ஏற்றுதல் என்ற தெளிவு அற்ற நிலையில் போலியோவால் பாதிக்கப்பட்டோர் வாழ்க்கைநிலை, பொருளாதாரத் திட்டமிடல் அற்றநிலை, இவற்றின் முக்கியமான மூலப் பிரச்சினையாக நிற்பது கல்வியறிவற்ற தன்மையே யாகும்.

எனவே வளர்ச்சியுடைய திட்டமிட்ட குடும்ப அமைப்புக்கோ அன்றி சமூக அமைப்புக்கோ கல்வியறிவே இன்றியமையாதது. அதுவும் அமைப்பின் முக்கிய பாத்திரமாக நிற்கும் பெண்கள் குறைந்தது சாதாரண கல்வியறிவையேனும் பெற்றிருத்தல் மிகமுக்கியமானது. இதுவே குடும்ப அமைப்பைச் சீர்படுத்த உதவும்.

இக்கிராமியப் பாசறையில் கண்டு அறியப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக குழந்தைகள் காப்பகம், பாலர் பாடசாலை, முதியோர் கல்வித்திட்டம் என்பன விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் செய்யப்படவுள்ளன.

நன்றி:
'சுதந்திரப் பறவைகள்'




*கரவெட்டியில் நடாத்தப்பட்ட 'கிராமியப் பாசறை' நிகழ்வின் போது விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பெண் போராளி சிறுவர்களுக்கு மருந்து கொடுப்பதையும், தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த பெண் போராளி, பெண்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொள்வதையும் படங்களில் காண்கிறீர்கள்.*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# வீர வரலாற்றுப் பதிவு

திசை எட்டும் தெறித்தது செய்தி
'பூநகரி' எங்கள் புலிகளின் கைகளில்
இரண்டு ஆயிரம் படையினர்; ஆயினும்
புலிகளின் பாய்ச்சலில் சிலமணி நேரமே!

மெய் சிலிர்த்தது!
உடல் புல்லரிக்க நாங்கள் சிரித்தோம்.
பிந்திப் பிந்தி வந்த செய்தியில் நெஞ்சு
நிமிர்ந்தோம்.

'எங்கும் புலிகளே பேச்சு'
சிறுமைப்படுத்தும் ஏடுகள் கூட
தயங்கித் தயங்கி செய்திகள் போட்டன.
'எத்துணை பெரிய சாதனை இது'
உலகம் தமிழனை வியக்கப் பார்த்தது; அவன்
விடுதலை வேட்கையின் ஆழஅகலம் நீளம்
புரிந்தது.

458 வேங்கைகள் இழுத்துவிட்ட இறுதிமூச்சு
புயலாய் எழுந்தது.
இடியாய், மின்னலாய் வெடித்தது.
சிங்களப் படையின் கூட்டுப்படைத்தளம்
சிதைந்தது! எரிந்தது!

வீரம்மிக்க புலிகளின் படையணி
வெற்றிக்கொடியை ஏற்றிச் சிரித்தது.
'தமிழன் மெய்சிலிர்த்தான்'
'மனம்பொங்கிச் சிரித்தான்'


பணிவும் குனிவும் பரம்பரைக் குணமாய்
கொண்ட தமிழனை
நிமிர்த்தி வைத்த வீரச் சாதனை!
வீரமும், தீரமும் அறிவும் ஆற்றலும் கொண்ட
தமிழனின்
கூனல் நிமிர்த்திய வீரப்பதிவு.

எங்கள் தலைவனின் கைகளில்
தமிழர் வரலாற்றை எழுதும் எழுதுகோல்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'சிரித்திரன்'

## சிவஞானசுந்தரத்துடன் ஒரு நேர்முகம்

கருணாகரன்



**'சிரித்திரன் சிவா', 'சிரித்திரன் சுந்தர்' என்று அழைக்கப்படும் சிவஞானசுந்தரம் அவர்கள் 1991ம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய 'மாமனிதர் விருது' இனைப் பெற்றவர்.**

**'சவாரித்தம்பர்' என்ற கருத்தோவியம் மூலம் தமிழ் மக்கள் அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர். முப்பது வருடங்களுக்கு மேலாக 'சிரித்திரன்' என்ற சிரிப்பிதழை நடத்தி எம்மக்களுக்கு வழிகூறும் வல்லவராக விளங்குபவர்.**

**அகில இலங்கை கம்பன் கழகம் 1993ம் ஆண்டு 'மூதறிஞர்' பட்டத்தையும், 'கைலாசபதி நினைவு விருது'இனையும் வழங்கிக் கௌரவித்துள்ளது.**

**↔ ஒரு கருத்து சித்திர ஓவியராக, ஒரு பத்திரிகை ஆசிரியராக, ஒரு சமூக சிந்தனையாளராக நீங்கள் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்று விளங்குகிறீர்கள் எப்படி?**

⇔ அவசர உலகில், ஓடும் வாகனங்களிலும் ஓய்வு நேரங்களிலும் சுவைக்கக்கூடிய சஞ்சிகை ஒன்றை வெளியிட விரும்பினேன். எப்படி உலகப் பிரச்சினைகளை மறந்து சுவைக்கக்கூடிய சஞ்சிகையை பிரசுரிக்கலாம் என்று எண்ணினேன். பிரச்சினையை மறப்பதற்கு பிரச்சினையையே மூலக் கருத்தாக வைத்து சிந்தித்தேன். சிந்தனையில் மலரும் சிரிப்பே சமூகத்திற்கு சிறந்தது என எண்ணி சிரித்திரனைப் பிரசுரித்தேன். சிரித்திரன் பிரபல்யமானது.

**↔ கலையுலகில் கருத்துச் சித்திர வடிவம் உங்களைக் கவர்ந்ததன் காரணம் என்ன?**

⇔ அகத்தில் முத்திரை பதிக்க கருத்தோவியம் சிறந்த ஊடகம் என உணர்ந்தேன். கருத்தோவியம் சிறந்த வடிவம் எனத் தேர்ந்தெடுத்தேன்.

**↔ நீங்கள் வரைந்த கருத்து ஓவியச் சித்திரத்தில் 'சவாரித்தம்பர்' என்ற பாத்திரம் மிகவும் புகழ் பெற்றதொன்றாகும். இந்தப் பாத்திரத்தை உருவகம் செய்ததன் நோக்கமென்ன?**

⇔ ஒருநாள் நான் கொழும்பில் மத்திய நூல்நிலையம் சென்றிருந்தேன். அங்கு திரு. கைலாசபதி அவர்களும் வந்திருந்தார். அப்பொழுது திரு. கைலாசபதி அவர்கள் தினகரன் பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். அங்கேதான் அவர் என்னை சந்திக்க நேர்ந்தது. "சுந்தர்.... இப்போ நீர் என்ன செய்துகொண்டு இருக்கிறீர்?" எனக் கேட்டார். நான் "ஒரு கருத்து ஓவியக் கண்காட்சி வைப்பதற்கு ஆயத்தம் செய்துகொண்டு இருக்கிறேன்" என்றேன். "நீங்கள் தினமும் கருத்தோவியக் கண்காட்சி வைப்பதற்கு ஒரு அருமையான கண்காட்சி சாலை ஒழுங்குசெய்யட்டுமா?" எனக் கேட்டார். நான் யோசித்தேன். கைலாசபதி முறுவல் பூத்துவிட்டு, "தினகரன் பத்திரிகையில் பிரசுரிப்பதற்குத் தினம் நீங்கள் கருத்தோவியம் வரைந்தால் என்ன? நான் கலைஞனுக்குத் தேவையான பூரண சுதந்திரம் தருகிறேன்" என்றார். 'கலைஞனுக்கு பூரண சுதந்திரம்' என்றதும் என்மனம் பூரித்தது. "ஓம் வரைகிறேன்" என்றேன். நான் கருத்து ஓவியம் தீட்டுவதற்குத் தந்தக் கோபுரவாசம் செய்யவில்லை. புழுதி புத்திரனானேன். சிறுவனாக கரவெட்டியில் புழுதியில் விளையாடியதெல்லாம் 'வீடியோ'வாக விரிந்தது. சவாரித்தம்பர் என்ற அறிஞர் அன்று இருந்தார். அவர் திண்ணையின் தலைமாட்டில் அறிவு நூல்கள் பல இருந்தன. பெரும்பாலானது இடது பக்கம் சாயும். அவர் என்னை, இராமசாமிப் பெரியாரின் (ஈ.வே.ரா) ஒரு புத்தகம் தந்து உரக்க வாசிக்கச் சொல்லிவிட்டு 'அப்பாலே' சிலை மாதிரி உட்கார்ந்து கேட்டுக் கொண்டு இருப்பார். இப்படி பல நாட்கள் பல புத்தகங்கள் வாசித்திருக்கின்றேன். அவர் சாதாரணமாக உரையாடும்போது கார்ல் மார்க்ஸ், லெனின், ராமசாமி பெரியார் போன்ற பெரியார்களை மேற்கோள் காட்டிப் பேசுவார். ராமசாமிப் பெரியார் யாழ்ப்பாணம் வந்து கரவெட்டியிலும், சங்கானையிலும் கூட்டங்கள் நடாத்தியதாகக் கூறினார். சவாரித்தம்பர், தத்துவ ஞானி சோக்கிறற்றீஸ் போன்று கரவெட்டிச் சந்திகளில் நின்று உரையாற்றுவது சர்வசாதாரணமான காட்சி.

இவர் பேசும் சீர்திருத்தக் கருத்துக்களை கேட்க ஒரு கூட்டமே அவரைச் சுற்றி நிற்கும். அவர் அன்று திராவிடர் கழகம் வெளியிட்ட குடியரசுப் பத்திரிகையை வரவழைத்தார். அதை நெல்லியடி மடத்தில் கந்தவனம் (ஐயா) வாசிக்க எல்லோரும் ஞான ஒடுக்கத்திலிருந்து கேட்பார்கள். இதனால், குடியரசுப் பத்திரிகையின் பெயர் சிலருடன் ஒட்டிக்கொண்டது. இதில் குடியரசு கந்தப்பு, குடியரசு சின்னையா மிகவும் பிரபல்யமானவர்கள். சிறுவயதிலேயே சவாரித்தம்பரில் ஒரு மதிப்பு ஏற்பட்டுவிட்டது. சவாரித்தம்பரை முக்கிய பாத்திரமாக வைத்து மூன்று கருத்துப்படங்கள் வரைந்து கைலாசபதியிடம் காட்டினேன். கைலாசபதியின் முகத்தில் புன்னகை பூத்தது. "சுந்தர்... இது உம்முடைய துறை. நீங்கள் தூரிகை ஏந்தியவர்கள். ஒரு துறையிலுள்ளவர் மற்றத்துறையில், துரைத்தனம் காட்டுவது முட்டாள் தனம்" என்றார் அந்த அறிஞர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தொடர்ந்தேன். 'சவாரித்தம்பர்' மக்கள் நாயகம் ஆனார். 'சவாரித் தம்பர்' மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. பாராட்டுக் கடிதங்களாகவும், கவிதைகளாகவும் தினகரன் காரியாலயத்திற்கு வந்து குவிந்தன. திரு. கைலாசபதி அவர்கள் உற்சாகத்துடனும் பெருமிதத் துடனும் எல்லாவற்றையும் தினமும் பிரசுரித்து எனக்கு ஊக்கம் கொடுத்தார். முத்தையா அவர்கள் "விடிவெள்ளி" என்ற புனைபெயரில் "தம்பர் புராணம்" என்ற பெரிய கவிதையை அனுப்பியிருந்தார். திரு. கைலாசபதி அவர்கள் அக்கவிதையை அப்படியே பிரசுரித்து என்னை மகிழ்வித்தார். அதில் சிலவரிகள்-

"தம்பரினைக் காணாத நாளெல்லாம்
நமக்கு இங்கு பிறவா நாளே"

⇐⇒ என்று எழுதியிருந்தார். தம்பர் கருத்தோவியத்துக்குக் கிடைத்த வரவேற்பே 'சிரித்திரன்' தொடங்குவதற்கு ஒரு உந்து சக்தியைக் கொடுத்தது.

**↔ சிரித்திரன் என்ற நகைச்சுவைப் பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் தோன்றியதற்கு காரணம் என்ன?**

⇐⇒ இறக்குமதிச் சிரிப்பையோ, இரவல் நகைச்சுவையை இறக்குமதி செய்வதையோ நான் விரும்பவில்லை. எங்கள் மனம் மலர வேண்டும் எங்கள் தனித்துவம் தழைக்கவேண்டும் என்ற மன உந்தலிலேயே சிரித்திரனை ஆரம்பித்தேன். யாழ்ப்பாண வளச் சொல்லாகிய 'சிரித்து இரு' என்றதை 'சிரித்திரன்' ஆக்கினேன்.

**↔ இன்றைய போராட்டச் சூழலில் படைப்பு இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?**

⇐⇒ பெற்றதாயையும் பிறந்த பொன்னாட்டையும் துப்பாக்கி முனையால் மட்டுமல்ல தூரிகை முனை பேனா முனை, இவைகளாலும் காப்பாற்ற முன்வர வேண்டும். மாதாவின் மைந்தன், மண்ணின் மைந்தன் என்று உதட்டினால் மட்டும் பேசினால் போதாது. நாம் அதற்காக உழைக்கவும் வேண்டும்.

**↔ நீங்கள் சவாரித்தம்பர் சித்திரத்தை நீண்டகாலம் வரைந்தீர்களே! அதில் சுவையான கருத்தோவியங்கள் சிலவற்றைக் கூறமுடியுமா?**

⇐⇒ சில நினைவுகள் குமிழி விடுகின்றன. சவாரித்தம்பரின் மூத்த மகன் நடமாடும் புகைபோக்கி. ஒருநாள் அவன் தன் அறைக்குள் 'சிகரெட்' புகைப்பதை தம்பர் யன்னலூடாகப் பார்க்க நேர்ந்தது. அவர் உடனே வாழைத் தோட்டத்திற்குள் போய் வாழைக்குலை ஒன்றை வெட்டி வந்து மகன் படுக்கும் கட்டிலின் மேலே தூக்கி விட்டு "தம்பி நல்லா ஊது மேனை வாழைக்குலை பழுக்கட்டும்'' என்றார்.

அதுதான் எங்கள் சரித்திரம்" எனக் கூறுகிறார்.

தம்பரின் மூத்த மகன் 'கிளரிக்கல் கிளாஸ் ரூ' எடுப்பதற்கு ஊருக்கும் வராமல் படித்துக் கொண்டு இருந்தான். பாறிமாமி மகன் சோதினை பாஸ் பண்ண வேண்டும் என்று கந்தஷஸ்டி விரதம் பிடித்துக் கொண்டு மகனுக்கு எள்ளுப்பாகு, நல்லெண்ணை, முட்டைமா எல்லாம் கொடுத்து தம்பரையும் சின்னக்குட்டியையும் கொழும்புக்கு அனுப்புகிறார். யாழ்தேவி இரவு 12 மணிக்கு கொழும்பு போய்ச் சேர்ந்தது. தம்பரும் சின்னக்குட்டியும் மகனின்



அறையை நோக்கி வருகின்றனர். மகனின் அறையில் 'லைட்' எரிந்துகொண்டு இருக்கின்றது.மகன் இரவிரவாகக் கண்விழித்துப் படிக்கிறான் என்றுதம்பருக்குப் பெரிய சந்தோசம். அறையை நெருங்கியதும் மகனின் அருகில் சாராயப் போத்தல் இருப்பதைக் காணுகின்றார். அப்போது "அடி கம்மார்ஸ்" என்று மகனின் குரல் கேட்கிறது. தம்பர் அறையைத் திறந்து உள்ளே போய் "தாய் மூன்று மிளகும் தண்ணியும் மகன் இங்கு 304 உம் தண்ணியும்" என்று கூறுகிறார்.

**↔ உங்கள் சித்திரகானம் பிரபல்யமாக இருந்தது. அதிலும் சில கூறமுடியுமா?**

⇐⇒ மூன்று உயரிப்பனையை வரைந்து அதற்குக் கீழ் "பஞ்சம் ஏதடா பசியும் ஏதடா பாரில் உயர்ந்த நம் நாட்டில்'' என்று

பண்டாரநாயக்கா காலம் இனக் கலவரம் நடந்தது. தமிழ் மக்கள் றோயல் கல்லூரியில் அகதியாக இருந்துவிட்டு கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வர நேர்ந்தது. அப்படி வந்த நாகரிகப் பெண் ஒருவரை தம்பர் சந்தித்தார். "பிள்ளை கலவரத்தால் பாதிக்கப் படவில்லையோ" எனக் கேட்கிறார். அப்பொழுது அப்பெண் அவரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று தன் அலுமாரியைக் காட்டுகிறாள். அதற்குள் வெள்ளிக் கோப்பைகள் அடுக்கப்பட்டு இருந்தன. அவைகளைக் காட்டி இந்தக் கோப்பை கேக் தயாரிக்கும் போட்டிக்குக் கிடைத்தது. இந்தக் கோப்பை நாய் வளர்ப்புப் போட்டிகுக் கிடைத்தது. என்று கூறிக்கொண்டு போகையில் தம்பர் இடை மறித்து, "பிள்ளை அது சரி நீங்கள் அகதியாக றோயல் கல்லூரியில் இருந்தபோது சாப்பிடுவதற்குத் தந்த கோப்பை எங்கே?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எழுதியிருந்தேன். மற்றொன்று... ஒருவர் ஒரு ஆட்டுக்கு கையாலே குழை கொடுத்துக் கொண்டு கத்தியுடன் அதை கொலை செய்வதற்கு அழைத்துக் கொண்டு போகிறார். அதற்கு "வாராய் நீ வாராய் போகுமிடம் வெகுதூர மில்லை" என்று எழுதினேன். மற்றொன்று ஒரு பெண், கார் ஓட்டிக் கொண்டு போகும் பொழுது காரை வேலிக்குள்ளால் விட்டுவிட்டார். அதற்கு "என் வாழ்வின் புதுப்பாதை கண்டேன்" என்று எழுதினேன்.

**↔ உங்கள் வாழ்க்கைப் பின்னணி, இளமைப் பிராயம், இந்தியாவில் கட்டடக் கலை மாணவனாக இருக்கும்போது ஏற்பட்ட அனுபவம் ஆகியன பற்றி விரிவாகக் கூறுங்கள்?**



⇔ என் மாணவப் பருவம் புரிந்துணர்வு இல்லாத ஆசிரியரால் பாலைவன யாத்திரையாகவே இருந்தது. என் தந்தை தபால் இலாகாவில் உயர் பதவியில் இருந்தபடியால் என்னையும் உயர் பதவி வகிக்க வேண்டும் என்று விரும்பினார். பிள்ளைப் பாசத்தில் நான் நன்றாகப் படிக்க வேண்டும் என்று கனகாபிஷேகம் செய்தார். ஆனால் பட்டம், பதவி, பதக்கம் ஒன்றையும் நான் நாடவில்லை. ஓவியம் ஒன்றே என் ஆராதனையாக இருந்தது. நான பம்பாய்க்கு கட்டடக்கலை படிக்கச் சென்ற காலம் இந்தியா, தன் சுதந்திரத்திற்குப் போராடிக் கொண்டு இருந்தது. நான் அப்பொழுது நாதர் நகரில் வசித்து வந்தேன். நேதாஜியின் பிறந்த தினம் வந்தது. என்னை நேதாஜியின் பெரிய படம் ஒன்று வரைந்து தரும்படி அந்நகர மக்கள் கேட்டார்கள். வரைந்தேன் பாராட்டுப் பெற்றது. அப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. கரிக்கேச்சர் (Caricature) என் இயல்பான கலை. எங்கள் பாடசாலைக் கலை விழாவின் போது இந்தியப்பிரமுகர்கள், பாடசாலை ஆசிரியர்களை மேடையில் வரைந்து அமோக வரவேற்பையும், பாராட்டுக்களையும் பெற்றேன். பம்பாயின் சில பத்திரிகைகளுக்கும் கருத்தோவியம் வரைந்தேன். 'பிளிட்ஸ்' (Blitz) பத்திரிகையில் தான் என் முதல் கருத்தோவியம் முதல் பக்கத்தில் பிரசுரமாகியது. இலங்கையில் வெள்ளவத்தை இருப்பது போன்று பம்பாயில் மாதுங்கம் என்ற நகரம் உண்டு. அங்கே சங்கீத சபாக்கள் நிறைய உண்டு. அங்கு தென்னிந்தியாவின் பிரபல சங்கீத வித்துவான்கள் எல்லோரும் வந்து கச்சேரி செய்வார்கள். மாதுங்காவில் பாரதி விழாக் கொண்டாடினார்கள். விழாவிற்குப் போயிருந்தேன். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்ற பாரதியின் பாடல் ஒரு பாடகி கனிவாகப் பாடிக்கொண்டிருந்தார். ஹிந்துஸ்தானி, மராட்டி, குஜாரத்தி பேசிய பம்பாயில் 'தமிழ் மொழி போல் இனிதான..' என்ற பாடல் கேட்டதும் மெய்மறந்தேன். பெரும் எழுத்தாளர்கள் எல்லாம் பேசினார்கள். பாரதியின் நண்பர் வா.ரா. எழுந்து பாரதியின் நினைவுகள் பற்றிப் பேசினார். தான் வீரகேசரி ஆசிரியராக இருந்ததையும் கூற மறக்கவில்லை. இதன்முன் பம்பாயில் நான் ஓவியக் கண்காட்சியைத் தரிசிப்பதற்குப் போவேன். ஆனால், ஓவியங்களைப் பார்ப்பதில்லை. ஒரு ஆசனத்தில் இருந்து கண்ணீர் வடித்துவிட்டு வீடு திரும்புவேன். என் மன உளைச்சலில் 'நான் ஓவியக்கலை பயில விரும்புகின்றேன்' என்று தந்தைக்குத் தந்தி கொடுப்பேன். தந்தை 'கட்டடக் கலையைப் பயிலவும்' என்று தந்தி தருவார். நான் அவர் ஆணைக்குப் பணிந்து கட்டடக் கலையைத் தொடர்ந்து படித்தேன். ஆயினும் ஓவியக் கலையிலேயே ஈடுபாடு அதிகமாகவிருந்தது. அவ்வேளையில்தான் சிவசேனைத் தலைவர் திரு. பால் ரக்கறே (Pal Tacheray)யின் அறிமுகம் கிடைத்தது. அவர் தன்னுடைய கருத்தோவியம் ஒன்றைத் தந்தார். அதுவே என்னுடைய ஓவிய வழிகாட்டியாக அமைந்தது. சென்னையிலிருந்து பம்பாய் நோக்கிய பயணமொன்றின் போது எதிர்பாரமல் சந்தித்த ஒரு மனிதர். அந்தப் பயணம் முடியும் வரையிலும் அவர் யாரெனத் தெரியாது. பின்னர் ஒருநாள் பம்பாய் குறோனிக்கல் அலுவலகத்தில் அந்த மனிதரைக் கண்டு உரையாடும்போதுதான், அவர்தான் இந்தியாவின் முக்கியமான கார்டூனிஸ்ட் அபூ (Abu) ஏப்ரஹாம் என்பது தெரிந்தது. அவரும் ஓவிய முறைமை பற்றிச் சில கருத்துக்களைச் சொன்னார். இவையெல்லாவற்றின் பின் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத தனயனாக ஊர் திரும்பினேன். (ஆனால் தந்தையின் விருப்பப்படி கட்டிடக்கலைஞனாக நான் தேறாது விட்டாலும் இன்று எனது மருமகன் ஒரு கட்டிடக்கலைஞனாக படித்துத் தேர்ந்திருக்கிறார்) இலங்கையில் என். எம் பெரேராவின் வேண்டுகோளுக்கிணங்க 'ரோட்ஸ்கி', 'லெனின்' ஆகியோரின் இரு படங்களை அவருக்கு வரைந்து கொடுத்தேன். அவரின் கட்சிப் படத்திற்கும் கருத்தோவியம் வரைந்தேன். நான் வரைந்த கலாயோகி ஆனந்தக்குமாரசாமியின் படம் இன்றும் கொழும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பில் அருங்காட்சிச்சாலையில் இருக்கின்றது. கைலாசபதி என்னை யாரென்று எனக்கு அறிமுகப்படுத்தினார். அதற்குப் பின்பே 'சவாரித் தம்பர்' வெளிவந்தது. சிலகாலம் முரசொலிக்கும் கருத்தோவியம் வரைந்தேன். உரிமையாளர் சிவராசா கருத்தோவியத்தின் கனமறிந்து கனமாக வழங்கி என்னை உற்சாக மூட்டினார். பின்பு என்னைப் பாரிசவாத நோய் பாதித்தது. என் கருத்துக்களை மக்களுக்குக் கூற முடியாது போய்விட்டதே! இனி உயிர்வாழ்ந்து என்ன பலன் என்று விரக்தியின் விளிம்பில் சோர்ந்து போய் இருந்தபொழுது எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் என் மன நிலையை உணர்ந்தோ என்னவோ சிரித்திரன் மீண்டும் வெளிவர வேண்டுமென்று விரும்பினார். சோர்ந்திருந்த என் உணர்வுகள் விழித்தெழுந்தன வலதுகையால் எழுதவோ வரையவோ முடியாத நிலை. இடதுசாரியானேன். கடும் பயிற்சியின் பின் இடது கை இசைந்தது. இன்று மீண்டும் சிரித்திரன் மக்கள் மத்தியில் பவனி வருகின்றான். ஒரு கலைஞனின் உள்ளத்தை உணர்ந்து மீண்டும் சிரித்திரனை வெளிவரச் செய்த எமது தலைவர் திரு. பிரபாகரனுக்கு எவ்விதம் நன்றி கூறுவதென்று தெரியாமல் இருக்கின்றேன்.

**↔ பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக 30 வருடங்களாக சிரித்திரனை வெளியிட்டு வருகின்றீர்களே! இந்த நீண்டகால விடாமுயற்சியில் நீங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றியும் ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவங்கள் பற்றியும் விளக்கமாகக் கூறுவீர்களா?**

⇦⇨ தாயானவளுக்குப் பிரசவ வேதனை. பத்திரிகைக்காரனுக்கு பிரசுர வேதனை. ஆனால், நான் அரசாங்க உத்தியோகத்தை விட்டு சிரித்திரன் தொடங்கியபொழுது, என் வீட்டிலும் துணைவியார் வீட்டிலும் பலத்த எதிர்ப்புப் புயல் தோன்றியது. நாம் அதையும் மீறி சிரித்திரனைத் தொடங்கினோம். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கடனுதவியே எமக்குக் கைகொடுத்தது. சிரித்திரன் குடிசைக் கைத்தொழிலாகவே ஆரம்பமானது. என் பிள்ளைகள் ஒற்றை ஒற்றையாகச் சேர்த்து சிரித்திரனை உருவாக்குவார்கள். இலக்கிய ஆர்வமும், நிர்வாகத் திறமையுமுள்ள என் துணைவியார் என்னுடன் ஒத்துழைத்தபடியாலேயே என்னால் சிரித்திரனைத் தொடர்ச்சியாக வெளியிட முடிந்தது. இந்தியாவில் இன்று சிறைவாசம் அனுபவிக்கும் ராதேயன் சிரித்திரனுக்கு கதை, கவிதை எழுதியது மட்டுமல்லாது, இரவு பகலாக சிரித்திரன் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். அவரின் பங்களிப்பு சிரித்திரன் சிறப்புற வெளிவர உதவியது. டாக்டர் சுகுமார் அவர்களின் முயற்சியால் சிரித்திரனில் வெளிவந்த கருத்தோவியங்களைத் தேர்ந்து, தொகுத்து 'சிரித்திரன் சிரித்திரக் கொத்து' என வெளிக்கொணர்ந்தோம். 'சிரித்திரக் கொத்து'வுக்கு சிறிலங்கா அரசு 1991ல் 'சாகித்திய மண்டலப் பரிசு' வழங்கியது. 'குண்டின் நிழலில் பரிசா' எனக் கூறி அதனை நிராகரித்துவிட்டேன். யாழ்ப்பாணத்தில் சிரித்திரன் அச்சிடுவதற்கு ஒரு அச்சகம் நிறுவினோம். சிரித்திரன் ஒழுங்காக வெளிவந்துகொண்டிருந்தது. அமைதிப்படை (இந்திய இராணுவம்) வந்தபின் சிரித்திரன் வரமுடியாமல் போய்விட்டது. அச்சுக்கூடம் இயங்காமல் ஆனது. அத்துடன் சேகரித்து வைத்திருந்த என்னுடைய காட்டூன்கள், இந்தியாவில் இருந்து கொண்டுவந்திருந்த முதல் பிராயத்து ஓவியங்கள், சிரித்திரனின் பிரதிகள், புதிய



சிரித்திரனுக்காக அச்சிட்டிருந்த தாள்கள் எல்லாமே அமைதிப் படையால் வீதியெங்கும் வீசப்பட்டன. நாங்கள் வீட்டைவிட்டு இடம்பெயர்ந்திருந்த வேளையில் இவைஎல்லாம் நடந்தன. சில நாட்களின் பின் நாம் வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது சிரித்திரனுக்காக அச்சடித்த தாளில் பொருட்களைச் சுற்றிச் சென்றனர் பொதுமக்கள். இதனைக் காணும் வேளையில் மனத்துயரைச் சகிக்க முடியவில்லை. இது ஆறாத வடுவாக இன்னும் உள்ளது. அத்துடன் நண்பர்களின் எழுத்துப் பிரதிகள் பலவும் அழிந்துபோயிற்று. இவற்றில் கவிஞர் காசிஆனந்தனின் 'மாத்திரைக் கதைகளின்' தொகுப்பிற்கான எழுத்துப் பிரதிகளும் அடங்கியிருந்தன.

**↔ உங்கள் மகுடிக்கு மக்கள் மத்தியில் மகத்தான வரவேற்புண்டு. நகைச்சுவை என்றும், அரசியல் என்றும், தத்துவம் என்றும் மகுடி ஊதுகின்றீர்களே! உதாரணத்துக்குச் சில கூறமுடியுமா?**

⇦⇨ 'உமது வாழ்க்கை வெற்றியா தோல்வியா' என்னைப் பொறுத்த வரை வெற்றி. என் உறவினரைப் பொறுத்தவரை பெருந் தோல்வி. 'எமது அரசியல் பார்வை குருடா' ஒற்றைக் கண்ணன் சோல்பரியின் துரதிருஷ்டப் பார்வை இல்லாத காரணத்தால் குட்டிமணியின் இரு கண்களும் தோண்டப்பட்டன. 'வாழ்க்கை பற்றி என்ன நினைக்கிறீர்' இன்னலும் கன்னலும் பின்னலாகிய மின்னல்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பாரதி மாணவர் இல்லம்



தமிழர்களின் பாரம்பரியச் சொத்தான கல்வியைச் சிதைத்துவிட சிங்களப் பேரின வாதம் நீண்ட காலமாகப் பலவகையிலும் முயன்று வருகின்றது. தனது உச்சக்கட்ட நடவடிக்கையாக பாடசாலைகள் மீது விமானக் குண்டு வீச்சுக்களை நடாத்தி வருகின்றது. இதனால் மாணவர்களை உளரீதியாகப் பாதிப்படையச் செய்து, அதன் மூலம் தமிழர்களின் கல்வியை அழித்துவிடலாம் என்று பேரினவாத அரசு எண்ணுகின்றது.

இலங்கை அரசின் இந்த நோக்கத்தைத் தகர்க்கும் நோக்குடனும் தமிழ் மாணவரின் கல்வியை வளர்க்கும் நோக்குடனும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினர் தமது வேலைகளை விரிவாக்கி வருகின்றனர். அவர்களின் நடவடிக்கைகளுள் ஒன்றாக, பாரதி மாணவர் இல்லம் 1993-02-15 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் மகளிர் பிரிவினரின் வேலைத் திட்டங்களுள் ஒன்றாகும். தற்போது யாழ். மாவட்டத்தில் மட்டும் ஒரே ஒரு இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் இல்லம் இன்று ஏறத்தாழ அறுபது மாணவிகளுடன் இயங்குகின்றது. கல்வி பயிலும் ஆர்வத்தோடு வறுமையால் வாடிக் கொண்டிருக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கல்வி பயில்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கும் பணியில் பாரதி மாணவர்கள் இல்லம் ஈடுபட்டிருக்கின்றது.

இந்த இல்லம் ஏறத்தாழ ஒரு மாணவ விடுதி போலவே செயற்படுகின்றது. மாணவிக்ளுக்கு வேண்டிய உணவு, உடை, பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் எல்லாமே இங்கு வழங்கப்படுகின்றன. காலையில் வழமை போலவே பாடசாலைகளுக்குப் போய் மாலையில் திரும்பி வருகின்றார்கள். ஏற்கனவே தாம் கற்ற கல்லூரிகளிலேயே தொடர்ந்தும் கல்வி பயிலச் செல்கின்றார்கள்.

மாலை வேளைகளில் இவர்களின் கலையுணர்வுகளுக்கு ஏற்ப இசை நடன பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டை விட இவ்வாண்டு இத்திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரையிலான மாணவிகள் பாரதி மாணவர் இல்லத்தினால் தம் கல்வியைத் தொடருகின்றார்கள். கல்வியில் ஆர்வமும் சகோதரத்துவ உணர்வும் கொண்டவர்களாக இவர்கள் வளர்கின்றார்கள். இவர்களை மேலும் சிறப்பாக வளர்ப்பதற்கும் இத்திட்டத்தை நாட்டின் பலபகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்குமான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவினர் முழுமுச்சாக ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமது பணிக்குத் தேவையான சகல உதவிகளையும் தமிழீழ மக்களிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# முற்றத்து வேம்பு

ஊரில்
வீட்டின் புறத்தே
என்றும் கிடந்து
உச்சஸ்தாயியில்
சப்திக்கும் ஏழாற்றுக்கடல்

அப்பாட அப்பாவின் அப்பா
நட்ட வேம்பு
உருக்கொண்டு ஆடும்.
அதன் காற்றைக் குடித்து
களைதீர்த்த வாழ்வு
ஒரு காவியமாய்...
என் கண்களின் வழி நடந்தது.

மாரி காலத்தில் நுளம்புகள்
தொல்லை;
புகை போட்டுக் கலைக்க
ஒரு பிடிகேட்டும்
ஊரார் வருவார்.

அம்மன் கோயில் திருவிழாக்
காணும்
அற்புதத்தேர் ஊரார் கையது
ஒன்றாய்ச் சேர்ந்திட அசையும்.

வேப்பிலைப் பிடிகள் சுமந்து
உருக்கொண்டு பக்தர் கூட்டம்
ஆனந்தக்கூத்தினை நிகழ்த்தும்.

சின்னக்கைகள் கூப்பிய என்சிறுவம்
வேம்பின் முன்னே நிற்க
அப்புவும் ஆச்சியும்
சுற்றி வந்தொரு கூடம்
கொளுத்துவர்.

வேம்பு பூச்சொரியும் நாளில்,
தேன்சிட்டுக் குருவி விழாக்கூட்டும்
சூரியன் ஒளித்து சுடர்முகம்
காட்டும்
நிலவில் நனையும் வேம்பின்
உச்சிமேல்
முகில்கள் உலவும்.
உப்புக் காற்று வந்து மோத
வேம்பு சிலிர்க்கும்.
இந்த மோகத்தினால்
பூமி என்றும் உயிர்த்திருக்கும்.

முற்றி வெடித்துக் கள்ளொளுகும்
ஓர் நாளில்,
நிலவு தழுவும் வானத்திடை
எதிரி வந்து போட்ட குண்டில்
சரிந்த கதை இதயம் தாங்காது.

நிச்சம் ஓர் நாள்
வேம்பின் அடியிருந்து புதுத்தளிர்
எழும்.
புதுத் தளிர் எழுந்து
தென்றலில் ஆடும்.
புதுவாழ்வு தொடங்கும்.
சத்திய வாழ்வு என்றும் சாகாது
வெல்லும்

-சுபா-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தேசாபிமானிகளுக்கு...

"ஆயுதம் செய்வோம்
நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பலவண்மைகள் செய்வோம்"

- பாரதியார் -

தமிழீழம் முன்னர், நிமிர்ந்துதான் நின்றது. ஒப்பற்ற நாகரிகங்களுடன், தமிழர்கள், உயர்ந்துதானிருந்தார்கள். கோபுரங்களின் கலசங்கள் வானை முட்ட கட்டிடங்கள் எழுந்திருந்தன. ஏராளமான நீர்நிலைகள், பாசன வடிகால்கள் சீராக வடிவமைக்கப்பட்டிருந்தன. நெற்காணிகளெல்லாம் பசுமை பெற்றிருந்தன. குடாநாட்டின் கரைகளில் மாதோட்டக் கரையில், இன்னும் கிழக்கின் கரைகளிலெல்லாம் அந்நிய தேசத்துக் கலங்களெல்லாம் நங்கூரமிட்டு நின்றன. அரிசியும் பனைபடு பண்டங்களெல்லாம் கலங்கள், கலங்களாக அந்நிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகின.

இங்கு வந்துபோன ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களெல்லாம், எமது பண்பாட்டுடணிணைந்த தொழில் நுட்ப வல்லாண்மையை வியந்துள்ளார்கள். அயர்லாந்து தேசத்தில் கண்ட, தானியங்களை அரைக்கும் கற்பொறிகள், மரப்பொறிகளை இங்கும் கண்டு வியந்துள்ளார்கள். வெப்பமேற்றி, மதுசாரத்தையும், மருந்துச் சாரங்களையும் வடிக்கும் வடிசாலைத் தொழில்நுட்பத்தை, எண்ணெய் வடிக்கும் தொழில் நுட்பத்தை, பொறியமைப்புக்களைக் கண்டு அதிசயித்துள்ளார்கள். இவையெல்லாம் எமது தேசம் கண்டுநின்ற தன்னிறைவைச் சொல்லி நிற்கின்றன.

நாலரை நூற்றாண்டு காலங்களுக்கு மேலாக நாம் எமது தேசத்தை இழந்திருந்தோம். நீண்ட நெடுங்காலம் எமக்கென்றிருந்த தேசத்தை இழந்திருந்தோம். எமது சமூக பண்பாடுகளுக்கு முற்றிலும் ஒத்திசைவற்ற அரசியல், பொருண்மியக் கட்டமைப்புக்கள் எம்மீது சுமத்தப்பட்டன. சுரண்டலும், தேசிய ஒடுக்குமுறைகளும் உக்கிரம் பெற்றன. அழுத்தத்திற்கு மேல் அழுத்தங்களையெல்லாம் உடைத்தெறிந்து, எமக்கென்றொரு தேசம், இன்று மீண்டும், எமது கண் முன்னேயே உருவாகிக் கொண்டிருக்கிறது. நிமிருகின்ற இந்த தேசம், தன்னாதிக்க வலுவுடன் இறுக்கமான அடித்தளத்தில் பலமாகக் கால்பரப்பி நிமிர வேண்டும். அதற்கான தற்சார்புப் பொருண்மிய அடித்தளம் ஒன்றின் அவசியம், பரவலாக இன்று எல்லோராலும் உணரப்படுகிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பு, மன்னாரின் பெரும் பகுதி, குடாநாட்டின் பெரும் பகுதி இன்று விடுவிக்கப்பட்டு விட்டன. தமிழரின் சிந்தனைகளுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுக்க, மீண்டும் சுதந்திர பொருண்மியத்தை கட்டியெழுப்ப களங்களும், வளங்களும் எங்கள் கைகளில் கிட்டியுள்ளன. இப்பெருநிலப்பரப்புக்களிலெல்லாம் பொருண்மிய மேம்பாட்டை நோக்கிய முயற்சிகளை முடுக்கிவிட வேண்டும்.

சுதந்திரமான, தற்சார்புப் பொருண்மிய மேம்பாட்டுக்கான ஏராளமான ஆற்றல்களும், மூல வளங்களும் நிறைந்துள்ள வேளையில் 'நிதி, தொடழில்நுட்பம்' ஆகிய மூலவளப் பற்றாக்குறைகள் இம்முயற்சிகளுக்குப் பெருத்த முட்டுக்கட்டையாக அமைகின்றது. எமது தேசத்தை விடுவிப்பதற்காக, எண்ணற்ற வழிகளில் நிதியை வழங்கிக் கொண்டிருக்கிற, எமது தேசத்திலும், அந்நிய தேசத்திலும் வாழுகின்ற எமது மக்களின் அக்கறைகள் முறையாக திசை திருப்பப்படும் பொழுது இம்முட்டுக்கட்டைகளைப் பெயர்த்தெறிவது சிரமமான ஒன்றல்ல.

இன்னமும் எமது மக்களின் சொந்தப் பணம், ஏராளமாக அரச வங்கிகளில் குவிந்து கிடக்கின்றது. எந்த வகையிலும், சொந்த மண்ணுக்குப் பயன்படாத இந்த நிதிக்குவியல், தென்னிலங்கையின் வளர்ச்சிக்கு மட்டுமே பயனளிக்கிறது. அரசின் பேரினவாதத்தை மேலும் பலப்படுத்துகின்றது. சொந்த மண்ணை விடுவிப்பதற்கான விடுதலைப் போராட்டத்தையே நசுக்குவதற்கு மறைமுகமாக துணை நிற்கின்றது.

சிறீலங்காவின் அரச வங்கிகளில் மட்டுமல்லாமல், அந்நிய தேசத்து வங்கிகளில், அந்நிய தேசங்களின் முதலீடுகளில், முடக்கம் பெற்றுக் கிடக்கின்ற இந்த நிதிமூல வளங்களெல்லாம் எமது தேசத்தின் பொருண்மிய மேம்பாட்டுக்கான வழிகளில் திசை திருப்பப்பட வேண்டும். பல வழிகளிலும் எங்களுக்கான தேசிய வரையறுப்புகளுக்குள்ளாகும் இவ்வேளையில் அதை மேலும் பலப்படுத்தும் வகையில் தேசிய உற்பத்தித் துறைகளை ஊக்குவிக்கும் வகையில் தேசிய நிதி நிறுவனங்களில், நிதியைச் சேமிக்க; தொழிற்துறைகளில் நேரடியாக மூலதனமிட முன்வர வேண்டும்.

எமது தேசத்தின் புவிச்சூழல் இயற்கைச் சக்திகளை அதிகளவில் கொண்டிருக்கின்றது. இன்றைய வலு நெருக்கடியைப் போக்கத்தக்க வகையில் சூரியச் சக்தி, கடல் அலைச்சக்தி, ஆக்கிவாயு, ஏனைய உயிரியல் வாயுச் சக்திகளையும் எங்களது உற்பத்தித் தேவைகளுக்குப் பயன்படுத்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலும் நாங்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


துரிதமாகக் கால்வைக்கவேண்டும். மக்களினது அத்தியாவசிய உணவுத் தேவைகளைப் பூர்த்தியாக்கும் நோக்கிலான விவசாயம், மேலும் தேவைகளை நிறைவேற்றும் வகையிலும், அடுத்துத் தொழிற்துறைக்கான மூலவளங்களைப் பெருக்கிக் கொள்ளும் நிலைக்கும் நகர்த்தப்பட வேண்டும்.


இத்தகைய ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கெல்லாம் துறை போனவர்கள் எம்மில் இல்லாமல் இல்லை. இன்று இந்தத் தேசத்தில் இல்லாவிட்டாலும் இத்துறைகளில் கற்றுத் தேர்ந்தவர்கள், பிரத்தியேகத் தேர்ச்சிபெற்ற பொறியியல் வல்லுனர்கள் அந்நிய தேசங்களிலெல்லாம் அந்தத் தேசங்களின் வளர்ச்சிக்காக உழைக்கின்றார்கள். இவர்களின் உழைப்பும், அறிவியல் ஆற்றல்களும் சொந்தமண்ணுக்காய் பெயர்க்கப்பட வேண்டும். சொந்த மண்ணின் பயன்பாட்டுக்கான, சொந்தமண்ணின் பண்பாட்டுடணிணைந்த தொழில்நுட்ப வளர்ச்சிக்காக இவர்களது ஆற்றல்கள் அனைத்தும் அணிதிரள வேண்டும்.

இன்னமும் தோன்றிய சுவடுகள் அழியாமல், எம்முடன் வாழுகின்ற வாழ்விக்கின்ற பாரம்பரிய தொழில் நுட்பங்களைப் புத்தூக்கம் பெற வைக்கவேண்டும். எமது பண்பாட்டுக்கு ஒத்திசைவான தொழில்நுட்பங்களை வளர்த்துக்கொள்வதற்கான தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களை உருவாக்க முன்வரவேண்டும். எல்லாவகைகளிலும் நிறுவன ரீதியிலான செயற்பாடுகள் காலத்தின் தேவையாக உள்ளன. உதிரம் வடிக்கும் நம் தேசம் நாளை உலகில் உயர்ந்து நிற்க அனைவரும் இணைந்து நிற்போம்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

# தமிழீழத்தின் புள்ளிவிபரத் தரவுகள்

## நூல் மதிப்பீடு




சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற ஒரு தேசிய இனத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று, அவ் இனத்திற்கென ஒரு தனியான பொருளாதார அமைப்பு இருக்கவேண்டும் என்பதாகும். இத்தீவில் வாழும் தமிழ்த் தேசிய இனம், பாரம்பரியமாகவே தனது பிரதேசங்களில் தனக்கென ஒரு தனித்துவமான பொருளாதார அமைப்பினைக் கட்டியெழுப்பியிருந்தது. ஆனால், 19ம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியில் எமது பிரதேசங்கள் சிறீலங்காவுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியப் பொருளாதாரம் சிதைக்கப்பட்டது. ஆங்கிலேயரின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து எம் மண்ணை ஆக்கிரமித்த சிங்கள ஆட்சியாளர்களினால், எமது பொருளாதார அமைப்பு முற்றுமுழுதாக அழிக்கப்பட்டதுடன், சிறீலங்காவில் தங்கியிருக்கும் பொருளாதாரமாகத் தமிழீழப் பொருளாதாரம் மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று இம்மண்ணில் நடைபெறும் விடுதலைப் போராட்டம், சிங்கள இராணுவத்திற்கெதிரான ஆயுதப் போராட்டமாக மட்டும் அமைந்துவிடாமல் சிங்கள அரசாங்கத்தின் பொருளாதார அடக்குமுறைகளையும் உடைத்தெறியக் கூடிய வகையில், பரந்து பட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. எனவே சிதைக்கப்பட்ட எமது தேசியப் பொருளாரத்தினை மீளவும் கட்டியெழுப்ப முனையும்போது முதலில் தேவைப்படுவது, எமது மண்ணின் வளங்கள் தொடர்பான தகவல்கள்-தரவுகளாகும். இத் தேவையினை நிறைவு செய்யக்கூடிய வகையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிபரக் கிளை, தமிழீழத்தின் புள்ளிவிபரத் தரவுகள் - 1993 என்ற கையேட்டினை வெளியிட்டுள்ளது. எமது மண்ணின் வளங்கள் தொட்பான அனைத்து விபரங்களையும் ஒரே பார்வையில் அறிந்துகொள்ளக் கூடிய வகையில், தமிழீழத்தின் புள்ளிவிபரத் தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளமை, இந்நூலின் சிறப்பம்சமாகும். பொருளாதாரத் திட்டமிடலாளர்களுக்கு மட்டுமன்றி, தமிழீழத்தின் பொருளாதார வளங்களை அறிய விரும்பும் அனைவருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். “நாங்கள் உணவு அனுப்பாவிடில் தமிழீழத்தில் உள்ளவர்கள் மண்ணைத்தான் தின்னவேண்டும்” என்று சிங்கள பௌத்த பேரினவாதம் கூக்குரல் போடுகின்ற இவ்வேளையில் இந்நூல் வாசித்து முடிக்கும்போது. சிங்களப் பேரினவாதத்தின் கூக்குரல் எவ்வளவு தூரம் முட்டாள்தனமானது என்ற உணர்வு எல்லோர் மனத்திலும் எழுவது தவிர்க்கமுடியாதது. அதுவே இந்நூலின் வெற்றியாகும். “என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்” என்ற பாடல் வரிகளே இந்நூலின் உண்மையான மதிப்புரையாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மேதின எழுச்சியும் முடக்கப்பட்டுள்ள தமிழீழ தொழிலாளர் கரங்களும்



**நிலவன்**

மே தினம்- இது உலகத் தொழிலாளர்களின் எழுச்சி நாள். தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர விடுதலை உணர்வுகளுக்கு வித்திட்ட நாள். 1886களில் அமெரிக்காவிலுள்ள தொழிற்பேட்டைகளில் அவ்விடத் தொழிலாளர்களினால் எட்டு மணித்தியால வேலை நேரத்திற்கான போராட்டம் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு 1889ல் இவர்களின் கோரிக்கை வென்றெடுக்கப்பட்டது. இந்தப் போராட்ட நகர்வே உலகளாவிய தொழிலாளர் இயக்கமாக வியாபித்து மேதின எழுச்சி நாளுக்கும் வித்திட்டதெனலாம். உலகெங்கும் வாழுகின்ற ஒடுக்கப்படுகின்ற மக்கள் வீதிகளில் இறங்கி தமது உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கின்ற இந்த உணர்ச்சிகரமான நாளிலே எமது தமிழீழத் தொழிலாளர்களின் வாழ்வியல் யதார்த்தத்தை எண்ணிப் பார்த்தல் பொருத்தமாக அமையுமென எதிர்பார்க்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வீச்சுடன் முனைப்புப் பெற்று வரும் இவ்வேளையிலே தமிழீழத் தொழிலாளர்கள் மிகுந்த துயரங்களுக்கு முகம் கொடுத்தபடி புதிய தேசத்தின் புலர்வுக்காகவும் தமது பங்கினைச் செலுத்தி வருகின்றனர்.

“தமிழீழத் தொழிலாளர் வர்க்கமானது என்றுமில்லாத பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கின்றது. போராட்டப் பளுவினை ஒரு தோளிலும், பொருளாதாரப் பளுவை மறு தோளிலும் உறுதி தளராது சுமந்து நிற்கின்றார்கள் எமது தொழிலாளர்கள்” என எமது தமிழீழத் தேசியத் தலைவர் எமது தொழிலாளர்களின் நிலைமையைக் கச்சிதமாகக் கூறுகின்றார்.

இலங்கையின் கடந்த கால வரலாற்றில் பல தமிழ் மக்கள் வர்க்க உணர்வோடு செயற்பட்டு தொழிலாளர் சமூகத்திற்காக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துத் தியாகங்களையும் புரிந்துள்ளார்கள். ஆனாலும் “உலகத் தொழிலாளர்களே அணிதிரளுங்கள். தொழிலாளர் வர்க்கமே ஒன்றுபடு” என்ற கோசங்களுடன் தொழிலாளர்களை முதன்மைப் படுத்தி நின்ற இடதுசாரிக் கட்சிகள் பலதும் **“தோசை, மசாலா, வடை, தலதெல் அப்பிட்ட எப்பா”*** என்று தமிழ் மக்களைப் புறக்கணித்து தமிழ் மக்களுக்கு எதிரான இனவெறிக் கூச்சலை எழுப்பின. அத்துடன் சிறீலங்கா ஆட்சியாளர்களின் இனவெறிக் கொள்கையும் உச்சக்கட்டத்தை அடைந்து வர்க்க முரண்பாடுகளுக்கு மேலாய் இனமுரண்பாடுகள் பெருவெள்ளமாய்ப் பெருக்கெடுத்து தமிழீழத் தொழிலாளர்களின் வாழ்வியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதெனலாம். தற்போதைய சூழ்நிலையில் தமிழீழத் தொழிலாளர்களின் போராட்ட இலக்கும் வேறுபட்டதாக அமைந்துள்ளது. எமது தொழிலாளர்கள் சம்பள உயர்வு, சலுகைகள், வசதிகள் கேட்டு போராடும் நிலையின்றி, தாம் செய்து வந்த தொழிலையே இழந்து விட்ட நிலையில் தொழிலுக்காக அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளது. கட்டிடத் தொழிலாளர்களுக்கு வேண்டிய சீமேந்து, இரும்புக் கம்பி, மணல் போன்ற மூலப்பொருட்கள் இன்மையால் கட்டிடத் தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகின்றார்கள். ஆலைகளுக்கு வேண்டிய எரிபொருட்கள், மின்சாரம், மற்றும் மூலப்பொருட்கள் இன்மையால் ஆலைத் தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கின்றார்கள். இதே போன்றுதான் பல்லாயிரக் கணக்கான தமிழ் விவசாயிகளும் வேலையில்லாது அல்லற்படுகின்றார்கள். தமிழீழத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் தென்தமிழீழ வயல்வெளிகள் தமிழ் விவசாயிகளின் குருதியில் தோய்ந்து போய்க் கிடக்கின்றது. மீன்பிடிப்பதற்குச் செல்வதற்கு எரிபொருள் இன்மையாலும், இராணுவ, கடற்படை அட்டூழியங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


களினாலும் எத்தனையோ ஆயிரக் கணக்கான மீன்பிடித் தொழிலாளர்கள் தொழில் இழந்து துடித்துப் போய் உள்ளனர். மொத்தத்தில் தமிழீழத் தொழிலாளர்கள் தொழில் உரிமை, அரசியல் உரிமை அனைத்தும் இழந்து துயரப்படும் சோக வரலாற்றினையே எம்மால் காண முடிகின்றது. இச்சூழ்நிலையில் தமிழீழ மக்கள் தமது தேசிய விடுதலையை நிலைநாட்டுவதன் மூலமே தம்மீது திணிக்கப்பட்டுள்ள அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்து உரிமைகள் பெற்ற இனமாக பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

இன்று மேதினம் என்பது ஒரு சம்பிரதாய சடங்காக மட்டுமே பெரும்பாலான நாடுகளில் கொண்டாடப்பட்டு வரும் வேளையில், குறிப்பாக சிறீலங்காவில் ஆளும் அதிகார வர்க்கங்களின் கோரிக்கை நிறைந்த பிரச்சாரத்தின் பெரு மேடையாக இந்த உன்னதமான தொழிலாளர் தினம் அமைந்து காணப்படுகின்ற இந்நேரத்திலே, போர் சூழ்நிலையிலும் கூட பல லட்சம் மக்கள் அணிதிரளும் அர்த்த புஸ்டியுடன் கூடிய பல மேதின நிகழ்வுகளை தமிழீழம் கண்டிருப்பது பெருமையுடன் நோக்கத் தக்கதாகும்.

புதிய தமிழீழ தேசத்தின் உருவாக்கத்திலேதான் தமிழீழத் தொழிலாளர்களின் வாழ்வும் புத்துயிர் பெறுவதுடன், ஒடுக்கப்படும் சிங்கள தொழிலாள வர்க்கத்தினரின் புதிய வாழ்வுக்கான கதவுகள் திறக்கப்படும் எனவும் எதிர்பார்க்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக சிறீலங்கா அரசின் கொடூரமான ஒடுக்குமுறைக்கு உள்ளாகி, வாழ்தலுக்கான அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்ட நிலையில் தவிக்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் விடிவிற்கும், தமிழீழத்தில் உதயமாகும் கதிரவனாலேயே ஒளிபாய்ச்ச முடியும் என நம்புவோம்.

**• (தோசையும், மசாலாவடையும், நல்லெண்ணையும் எங்களுக்கு வேண்டாம்.)**



இலைச்சுமை பின்னே சாய்ந்து
இழுத்திடும் கூடையோடு
தலைச்சுமை கூடைக் கயிறால்
தாங்கியே முன்னே உந்தி
மலைச்சுமை மனதில் தாங்கி
மாதர்கள் செல்லும் காட்சி

நாவண்ணனின்
**'கதை கவிதை கண்ணீர்' நூலிலிருந்து...**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



போராளியின் பேனாவிலிருந்து

# வேதனையின் வடுக்கள்

பொன்னிலா

சதக்.... சதக்... என்று மூவரின் கால்களும் சேற்றில் புதைந்து எழும் ஒலியுடன் கடல் நோக்கிச் செல்கின்றன. பொழுது புலர்ந்தும் புலராத தன்மையது. "டேய் தம்பி யஸ்ரீன் கொஞ்சம் கெதியா நடவடா. விடிஞ்செல்லே போகுது" என்றவாறு நடையை விரைவுபடுத்துகின்றார் அந்தோனிப்பிள்ளை. "ஓம்.... ஓம்.... விடியத்தான் போகுது நேவி கண்டா அதோ கதிதான். சுணங் காமப் பட்டியை இழுக்க வேணும்". என்றார் அருகில் வந்த சின்னையா.

யஸ்ரினின் சிறிய தந்தைதான் அவர். திருமணம் புரிந்து தனியாக வாழ்ந்தபோதிலும், தான் கூட்டுத் தொழிலினை மேற்கொண்டு வந்தார் சின்னையா.

இளமையின் துடிப்பும் வேகமும் உடைய பதினைந்து வயது இளை ஞன்தான் யஸ்ரீன். ஆனால் கடின உழைப்பின் நிமித்தம் உருண்டு திரண்டிருந்த அவனது தோற்றத் தையும் உறுதியையும் காணும் எவ ரும் அவனுக்கு இருபது வயதென்றே மதிப்பிடுவர். அந்தோனிப்பிள் ளைக்கு இவனுடன் சேர்ந்து மொத்தம் ஐந்து பிள்ளைகள். யஸ்ரீனுக்கு நேரே மூத்த பெண்கள் திருமணத்தை எதிர்நோக்கிய பருவத்தில் இருந்தனர். குடும்பநிலை காரணம், படிப்பு இடைநிறுத்தப் பட்டது. இறுதியில் தந்தையுடன் மீன்பிடித் தொழிலுக்கு சென்றுவருகி றான் யஸ்ரீன்.

"ம்... ஏறடா.... டேய் கம்பால கெதியா தாங்கு....'' என்றவாறு பாய்தனைப் பிரித்து கம்பத்தில் பொருத்தி சரிபார்க்கிறார் அந்தோனி. உயிரை உறையவைக்கும் குளிரது. சில்லென்று சோழகக்காற்று உடலைத் தழுவ மூவரின் தேகமும் ஒருமுறை சிலிர்த்துக்கொள்கிறது. பட்டையினால் வள்ளத்தினுள் தேங்கி நின்ற நீரினை அள்ளி வெளியில் ஊற்றுகின்றார் சின்னையா. "தாங்கினது போதும் பாயை இழுப்பம்" என்றபடி யஸ்ரீன் அணியப்பகுதியினை நோக்கிச் செல்கின்றான்.

'உர்.....' என்ற இரைச்சலுடன் காற்று பாயில் படவும், சட சடவென ஒலி எழுப்பியவண்ணம் காற்றுக்கு பாய் முகம் கொடுக்க வள்ளம் விரைகின்றது.

"சின்னையா ஒருக்கால் சவலையை இறுக்கிக் கட்டி விடுங்கோ. பாய் கெளிக்குது" என்று பாயின் நுனிக் கயிற்றினை வள்ளத் தின் ஒரு பகுதியுடன் கட்டியபடி யஸ்ரீன் கூறுகின்றான். குளிருக்கு ஈடுகொடுக்கும் முகமாக சுருட்டு ஒன்றினைப் பற்ற வைக்கின்றார் அந்தோனி. "ஐயா உதை முதல்ல எறியுங்கோ, வெளிச்சத்தைக் கண் டால் அடிக்கப்போறாங்கள்" என்ற படி சற்றுத் தொலைவில் தெரிந்த இராணுவ அரண்களை நோக்கிப் பார்வையைத் திருப்புகின்றான் யஸ்ரீன்.

"நிம்மதியா எப்பதான் நாம் தொழில் செய்யிறது பாழ்படுவாங் கள்" என்று மனதினுள் திட்டியபடி அணியத்தின் மேல் தளத்தில் அமர்ந்துகொள்கின்றார் அந்தோனி.



மிக அருகில்தான் 'நேவி'யின் படகு நிற்கின்றது. ஆகையினால் உயிரினைக் கையில் பிடித்தபடிதான் இவர்களது பயணங்கள் தொடர் கின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"நேற்றும் 'கலிபரால' அடிச்சவன். இண்டைக்கு என்ன மாதிரியோ" என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார் சின்னையா.

சிறிது தூரத்திலும் சில வள்ளங்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையைக் கண்ட மூவரின் மனங்களும் ஒருவித நிம்மதியை அடைகின்றன.

"பட்டி கிட்ட வந்திட்டுது. பாயை இழக்கடா யஸ்ரீன்" என்றவாறு மீன் பிடிப்பதற்குத் தேவையான அத்தாங்கு, பறி, கம்பி எல்லாவற்றையும் கையில் எடுத்த படி தயாராகின்றார் அந்தோனி.

நங்கூரம் பாய்ச்சப்படுகின்றது. வள்ளம் ஒருமுறை ஆட்டம் காட்டியது. பின்னர் அமைதி அடைகின்றது. யஸ்ரீனின் அத்தாங்கிலே முதற் கோலிலேயே பாரைகளும், சூரை மீன்களுமாகத் துள்ளிவிளையாடின.

'நாலு நாளாக இழுக்காத பட்டி, இண்டைக்காவது சோறு சமைக்கலாம்' என்ற எண்ணம் மனதில் எழ யஸ்ரீனிடம் மீனை வாங்கி வள்ளத்தினுள் கொட்டினார்




சின்னையா. அவற்றைத் தெரிந்து எடுத்து ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார் அந்தோனி.

நீலப் பேய்களின் ஒலி கடலில் எதிரொலித்தது. அந்தோனி புலனைத் தீட்டினார். நிமிர்ந்து பார்க்கவும், தூரத்தே கரும்புள்ளிகளாக அவை புலப்பட்டன. கல்முனையின் வெளிச்சக்கூண்டுப் பகுதியில் இருந்து இராணுவத்தினரால் ஏவி விடப்பட்ட வெளிச்சக் குண்டுகள் முழுச் சூரியனே உதயமாகியதைப் போன்று எங்கும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சின. இவ்வெளிச்சத்தினூடே தூரத்தே தெரிந்த கரும் புள்ளிகள் சிறிது சிறிதாக முன்னோக்கி வருவதைக் கண்டார் அந்தோனி.

"தம்பி யஸ்ரீன், சின்னையா கெதியில ஏறுங்கோ வள்ளத்தில" என்றவாறு நங்கூரத்தினை அவசரமாக எடுத்துப்போட்டார் அந்தோனி.

ஏன்? எதற்கு? என்று கேட்பதற்கு அவசியமிருக்கவில்லை. இருவருக்கும் நிலைமை புரிந்து விடவே அத்தாங்கில் உள்ள மீனினை வள்ளத்தினுள் போட்டு விட்டு இருவரும் ஏறிக்கொள்கின்றனர். இவர்களுக்கருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த வள்ளங்களும் கரையை நோக்கி விரையத் தொடங்குகின்றன. பாயை ஏற்ற முயலவும் அத்தருணத்திலே நெருப்புப் பாளங்கள் வள்ளத்தினை நோக்கி அசுர வேகத்துடன் வந்து வீழ்ந்து வெடித்தன. மூவரின் மனமும் இறைவனையே பிரலாபித்தன.

"வள்ளத்தில இருந்தா ஆபத்து. குதியுங்கோடா கடலுக்க. நீந்திப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போவம்'' என்றபடி அந்தோனி குதிக்க, அவரின் பின்னால் இருவரும் கடலுள்....

தொடரும் குண்டுகளின் ஒலியினால் கடல் கலங்கிற்று. அரைமணி நேரமாகக் கடலினுள் போராட்டம். இரவும் சரியாகச் சாப்பிடாத குறை. களைப்பு மிகுதியிலும் அந்தோனியின் கை தானாகவே விரைகின்றது.

"இன்னும் கொஞ்சத்தூரந்தான் மணற்பிட்டிக்குப் போயிடலாம்'' என்று எண்ணமிட்டபடி நீந்திக் கொண்டிருந்தான் யஸ்ரீன். இடையிடையே பின்னோக்கி இரு தலைகளும் தெரிகின்றனவா என்றும் கவனித்துக் கொண்டான். சிறு பொழுதின் பின்னர் ஒரு தலை மட்டுமே தண்ணீர் மட்டத்தில் தெரிவதைக் கண்ட யஸ்ரீன் தலையை உயர்த்தி, தந்தையைக் காணாததினால் "சின்னையா, எங்க ஐயா?'' எனக் கத்தியபடி வந்த பாதையைநோக்கித் திரும்ப நீந்தத் தொடங்கினான். தத்தளித்த தந்தையினை ஒரு கரத்தினால் பற்றியபடி மணற்திடலை வந்தடைந்தான். களைப்பு மிகுதியினால் சின்னையா ஏற்கனவே அங்கு படுத்திருந்தார்.

குண்டொலிகள் அதிர்ந்தன. அதற்குச் செவிகொடுக்க முடியாத நிலையில் மணற்திடலில் அமர்ந்திருந்த ஐந்து கொக்குகளும் தூரப் பறந்து சென்றன. எறிகணைகள் ஓய்ந்தபாடில்லை. மணற்திடலுக்குச் சமீபமாகவும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.

சிறிது நேர அமைதி யஸ்ரீனின் மன ஓட்டத்திற்கு தூபம் போடுகின்றது. "இவன் சிங்களவனால தமிழன் மட்டுமல்ல அவன்ர பகுதியில வாழுற எந்த உயிருக்கும் ஆபத்துத்தான்'' எண்ணத்திற்கும், உடலுக்கும் இதமாக மெல்லிய சோளகக்காற்று உடலை வருடி சிறிது உற்சாகத்தைக் கொடுத்தது. தொடர்ந்தது குண்டுமழை. ....கற்பனை கலைய மீனுடன் விட்டுவந்த வள்ளத்தினை நினைத்துப் பார்க்கின்றான் யஸ்ரீன். வேதனை முள்ளாய் நெஞ்சை நெருடியது.

'இதுக்கெல்லாம் எப்பதான் விடிவு வரப்போகுதோ?' மனம் ஓலமிட்டது. யஸ்ரீனின் கண்கள் வள்ளம் நின்ற திசையினை நோக்கவும், அரைக்கம்பத்தில் ஏற்றிய பாயுடன் நின்ற வள்ளத்தினுள் பட்ட குண்டொன்றினால் அது தீக்கிரையாகி கடலினுள் மெதுவாக மூழ்குவதைக் கண்டான். மூவரின் நெஞ்சத்திலிருந்தும் ஆற்றாமையின் நிமித்தம் பெருமூச்சு நீண்டதாய் புறப்பட்டது.

**கடல்வலயத் தடைச்சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்துவிட்டு, அப்பாவித் தமிழ் மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினர் மூலம் கடலில் சுட்டுக்கொல்கின்றது. கடந்த மூன்று மாதங்களில் சுமார் 40 தமிழ் மீனவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்கள். கடற்படையினர் சுட்டுக்கொல்லவும், மீனவர்கள் மறுநாள் தொழிலுக்குச் செல்லவேண்டியுள்ளது. அவர்கள் தொழிலுக்குச் செல்லத்தான் வேண்டும். இராணுவ நடவடிக்கை காரணமாக கரையோரத்தை அண்டிய பகுதிகளிலேயே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பத்து அல்லது பதினைந்து அடி நீளமான குடிசைகளிலே தமது அன்றாட கருமங்களை ஆக்கி வருகின்றார்கள்.**

**மகளிர் தின விழாவில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்கள் இவ்வாறு கடற்தொழிலாளர்களின் அவல நிலைபற்றிக் குறிப்பிட்டிருந்தார்.**

அதனைக் குலைக்கும் வகையில் காதைப் பிளக்கும் ஓசையுடன் மிகச் சமீபமாக ஒரு குண்டு வீழ்ந்து வெடிக்கின்றது. நேவியின் படகும் அருகில் தெரிய நீலப்பேய்களின் உருவம் தெளிவற்றுத் தெரிகின்றது.

"ஐயா எங்களைக் கண்டிட்டான் போல கிடக்கு, இதில கிடந்தா ஆபத்து மெதுவா வந்து தண்ணிக்குள்ள இறங்குவம்'' என்றான் யஸ்ரீன்.

"ஓம்.... அந்தோனி, இந்தப்பக்கம் பரப்பு. அதால அவனால இஞ்சால வரேலாது. வா போவம்'' என்றார் சின்னையா. மணல்மீது போராட்டம். தலைக்கு மேலாக பல குண்டுகள் கூவியபடி சென்றன. சிறிது நிமிர்ந்தாலும் தலை போவது திண்ணம். இந்த நிலையில் நெஞ்சையும் வயிற்றுப் பகுதியையும் மணலினுள் உராய்ந்தபடிக்கு கடலினை நோக்கிச் சென்றனர் மூவரும்.

மணல்கூட தன் பங்கிற்கு அவர்களின் நெஞ்சில் இருந்து குருதியைக் கொட்டவைத்துக் கொண்டிருந்தது. மீண்டும் கடலினுள் போராட்டம்... தேகம் புண்ணாகி இருந்ததினால் உப்புநீர் படவும் வேதனை பன்மடங்காகின்றது.

ஊரே ஒருமுறை ஒப்பாரி வைக்கின்றது. 'போன வள்ளமெல்லாம் வந்திட்டுது. அந்தோனியின்ர வள்ளத்தை மட்டும் காணயில்லை' என்ற செய்தி காட்டுத்தீயாகப் பரவி லூர்த்தம்மாவின் நெஞ்சை எரிக்கின்றது. முதல் குண்டுச் சத்தம் கேட்கும்போதே மனம் ஒரு நிலையில் இல்லை. அவளுக்கு இந்தச் செய்தியும் காதில் விழுந்த பின்னர், சொல்லவும் வேண்டுமா? தாய்க்குப் பின்புறமாக மூன்று பெண்களும், கண்ணீருடன் இளையவன் குமாரோ தாயின் சேலைத் தலைப்பைப் பிடித்தபடி அழுது கொண்டிருந்தான்.

"அழாதேங்கோ பிள்ளையள், அவங்க நீந்தி வந்திடுவாங்க'' என்றவாறு ஆறுதல் மொழிந்தார் ஒரு வயோதிபர். வார்த்தைகள் ஆறுதல் வழங்கிடுமா? தொடர்ந்து ஓலங்கள்.

சிறிது தூரத்தே மூவர் நீந்தி வருவது கண்ணுக்குத் தெரிய எல்லோர் மனங்களிலும் ஒருவித நிம்மதி பிறக்கிறது. எறிகணைகள் சற்று ஓய்ந்து காணப்பட்டன. துணிந்த இளைஞர்கள் சிலர் வள்ளம் ஒன்றின் துணையுடன் மூவரையும் நோக்கி விரைகின்றனர். நிர்மலமான வானம் ஒன்றுமே நடவாததுபோல விரிந்து கிடக்கின்றது.

மூவரும் வள்ளத்தினுள் ஏற்றப்படுகின்றனர். அந்தோனி, சின்னையாவிடமிருந்து ஆறுதலின் வடிவமான சோக மூச்சுக்கள் வெளிவருகின்றன. சவல் ஒன்றில் சாய்ந்திருந்த யஸ்ரீனின் கண்களோ தொலைதூரத்தில் தெரியும் இனவெறியரின் அரண்களையும் அவர்களால் எரியுண்ட தனது வள்ளம் நின்ற திசையினையும் பார்க்கின்றது. மனமோ ஆர்ப்பரிக்கும் கடலலைபோல......

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தெருக்கூத்து



## காலத்தின் கலைத்தேவை

**சுயநிர்ணய உரிமைப் போரில் ஒரு இனத்தின் தேசிய அடையாளத்தை நிர்ணயிக்கும் ஓர் ஊடகமான, கலையின் வரலாறு மனித சமூகத்தின் வரலாறே.**

கலை உணர்வு என்பது, மனிதனுடைய நதிக்கரை வாழ்வு தொடக்கம் பரிணாம வளர்ச்சிக் கட்டங்கள் முழுவதிலும் இணைந்து வளர்ந்து வந்திருக்கிறது. ஆபிரிக்க நாட்டுக் காப்பிரிகளி லிருந்து ஆசிய நாட்டுப் பழங்குடி கள் வரை- அவர்களுள் பொங்கி வழிந்த- விவரிக்கமுடியாத கலை உணர்வுகளைப் படைப்பாக்கியிருக் கிறார்கள்.

அவற்றில் பல, காலவெள்ளத் தின் ஓட்டத்திற்கு ஈடுகொடுத்து, புதிய மெருகும் புதிய உத்திகளும் சேர்ந்து அவைசார்ந்த இனங்களின் கலாச்சாரப் பாரம்பரியத்திற்குப் பெருமை சேர்க்கின்றன. சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஒரு இனத்தின் தேசிய அடையாளத்தைத் தீர்மானிக்கும் ஒரு ஊடகமான இக்கலை உணர்வின் வரலாறு, மனித சமூகத்தின் வரலாறே.

கடல்கொண்ட லெமூரியா கண்டத்துப் பெருநிலப்பரப்பில் தோன்றிவளர்ந்த திராவிட மரபு, கலை உணர்வுகளில் தோய்ந்துயர்ந்த சரித்திரப் பின்னணிமிக்கது. அதுவே தமிழர் வாழ்வில் சங்ககாலம் முதலாக கலைவடிவங்களாக, இலக் கியங்களாக நடை போட்டது. இயல், இசை, நாடகம் என்னும் முப்பரிமாணங்களூடாக பெரும் புரட்சியை நிகழ்த்தியது.

கூத்து என்பது இந்தக் கலை வடிவங்களுக்கெல்லாம் மிகப் பழமை வாய்ந்தது. நாகரிகத்தின் தொடக்க காலங்களில் குழுக்களாக எமது முன்னோர் வாழப் பயின்ற நாட்களில், மகிழ்ச்சியை வெளிப் படுத்தவும், கவலையைப் பகிரவும், போரை முன்னெடுக்கவும், வெற்றி யில் களிகூரவும் தீயை வளர்த்து அதனைச் சுற்றிவந்து கூத்தினை நிகழ்த்தினர்.

இயற்கையே அவர்களின் பல்கலைக்கழகம் ஆதலின் மயிலின் ஆடலும், மானின் துள்ளலும் விதவிதமான கலைவினோதங்களை அவர்கள் படைத்திட உந்துதல் அளித்திருக்கும்.

தமிழரின் வாழ்விலும், கூத்துக் கலை பெற்றிருந்த பெருஞ்சிறப்பை வீரம் செறிந்துநின்ற அவர்களின் வரலாற்றினூடாக நாம் உணரலாம். புறநானூறு, கலிங்கத்துப் பரணி போன்ற புறம் பாடும் இலக் கியங்களிலும், அகநானூறு, குறுந் தொகை போன்ற அகம் பாடும் இலக்கியங்களிலும் இதற்கான சான்றுகள் விரவிக்கிடக்கின்றன. இயல்பாகவே போர்க்குணம் மிக்க தமிழரின் வாழ்வில் கூத்துக்கள் இடம்பெற்றிருப்பதற்கான சான்றுகள் புறப்பொருள் நூல்களிலே மிகையாக வருதல் வியப்பல்ல. அங்கே குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு முதலிய பல்வகைக் கூத்துக்கள் பொருள் மரபு பொதிய ஆடப்பட்டு வந்துள்ளன.

### மாற்றத்தின் பாதையில்

கூத்துக்கள் கால ஓட்டத்தின் வேகத்திற்கேற்ப பல சீர்திருத்தங் களைப் பெற்று வந்திருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது களமாற்றம். ஆம், அரங்கத்திலே ஆடிவந்த கூத்தர்களின் கால்கள் கல்லிலும் முள்ளிலும், கரடுமுர டான பூமியிலும் நாற்சந்திகளிலும் தெருமுனைகளிலும்- தாம்-தை எனச் சப்திக்கத் தாண்டவமாடின. சலங் கையின் சல்லிப்பும் முழவுகளின் முழக்கமும் வீதிக்கு வந்தது. கூத்து தெருவுக்கு வந்ததானது ஒரு புரட்சிகர மாற்றமே. தேடுங்கள் கிடைக்கும்! என்றார் யேசு. தேடிவந்து வாரி வழங்குகின்றார்கள் கூத்தர்கள்.

தெருக்கூத்து எனும் கூத்தின் கூர்ப்படைந்த வடிவத்தை ஈழத்தின் போராட்டச் சூழலும் விடுதலை தாகமும் கலாரீதியான தேடலும் இலகுவில் உள்வாங்கிக் கொண்டன. போர்ப் பின்னணிக்குள் ஊடுருவிய இக் கலாவடிவம் போராட்டக் கலை ஊடகத்துக்குரிய சாதகமான

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பல போக்குகளைக் கொண்டுள்ள தால் வளமூட்டப்படுகின்றது.

## போர் மேகமும் கலை வாழ்வும்

ஷெல்கள் கூவுகின்றன; பகை விமானங்கள் பனிமூட்டம் கிழித்து விரைந்து வருகின்றன; போர் மேகம் எந்நேரமும் சூழ்ந்திருக்கின்ற பூமி எங்களது;

கலை அரங்குகளிலே மக்கள் ஒருமித்துக் குழும முடியாத சூழல்; நவீன தொடர்பு சாதனங்களின் செயற்படு திறன் இனவாத அரசால் அருமையாக ஆக்கப்பட வானொலியும், தொலைக்காட்சியும் அனேகமாகக் கிடப்பில் கிடக்கின்ற நேரம்;

தெருக்கூத்து இந்த நெருக்கடிகளை ஜீரணித்து மக்களைத் திரளவைக்கிறது.

எந்த ஒரு போராட்டத்திலுஞ் சரி, கலாச்சார மறுமலர்விலும் சரி, மிகப்பெரிய உந்துசக்தியாக இருப்பவர்கள் கிராமப்புற மக்கள். நேரச் சிக்கனம், கருத்தாழம், உணர்வுகளின் வீச்சு, சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல், கிறங்கடிக்கும் இசைச் சேர்க்கை, தாளகதிக்கு ஏற்ப இயங்கும் கால்கள் என்ற தெருக்கூத்தின் உச்சநிலைகள் போராட்டத்தின் பெரும் உந்துசக்தியை (கிராமப்புற மக்களை) சட உலக மயக்கத்திலிருந்து விடுபடவைக்கப் பாடுபடுகின்றன.

இதில் மற்றொரு நெகிழவைக்கும் விடயம் கூத்தர்கள் போராளிகளாக இருப்பதுதான். அவர்களால் கையில் துவக்கேந்தி, களத்திலே எதிரியைத்தான் சந்திக்கத் தெரியும் என்பதல்ல; காலிலே சலங்கை தாங்கி, கலையையே கருவியாக்கி, எமக்குள்ளே புரையோடிவிட்ட எதிரிகளைத் தகர்க்கவும் முடியும். ஏனெனில் அவர்கள் இதயம் விடுதலையின் விசாலம் அறிந்தது,

நெகிழ்ந்துகொடுக்கும் தன்மை இக்கலைவடிவத்தின் பிறிதொரு சிறப்பு. ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய மொழிவழக்கு, பண்பாடு, சமூக நடைமுறைகளுக்கேற்ப் வளைந்துகொடுக்கும் தன்மை இதற்குப் பெருமை சேர்க்கிறது.

## வானமே எல்லை

தெருக்கூத்தில் சொல்லப்படக் கூடிய விடயதானங்களை நோக்கின் அதன் தொடுபரப்பு எல்லையற்றதாக விரிகிறது.

போராட்டம் மட்டுமல்ல!

கொடிய மலேரியா அபாயம்; இதுவும் கூத்தின் கருப்பொருளாகிறது.

இதோ! அரிதாரம் பூசி ஆயத்தமாகிறார்கள்- போராளிக்கூத்தர்கள், இப்பயங்கர நோயை எதிர்கொள்ளும் வகை பாட.

ஒவ்வொரு வீட்டிலும் தன்னிறைவு காணும் வேளாண்மைத் திட்டம்.

துவக்கு ஏந்திய தோள்கள் மண்வெட்டியும் கலப்பையும் ஏந்தி வீதிக்கு வீதி "வேளாண்மை செய்வோம்" என முழங்குதல் கேட்கிறது.

மரங்களை வெட்டாது தடுத்தல்.

எதிரியை வெட்டி மரமென வீழ்த்தும் மண்ணின் புதல்வர்கள், பசுமையைக் கொல்லும் செயலினைச் சாடி பாடி ஆடுகின்றனர்.

இத்தகைய சிறப்பு இலக்கணங்களைக்கொண்டு தெருக்கூத்து எனும் கலைவடிவம் இன்றைய போராட்ட சூழலில் மக்களை இலக்கை நோக்கிய பயணத்திற்கு துரிதப்படுத்துவதில் பல்வேறு வழிகளில் முனைகிறது.

போராட்டத்தினை உணர்வுபூர்வமாக அணுகுதல்,

அதன்பால் அணிதிரள வைத்தல்,

எதிரியை எதிர்கொள்ளல்,

துயர வாழ்வைத் தொலைத்தல்,

நிகழ்கால நிதர்சனங்களைப் புரிதல்,

மனதிற்கு விருந்தளித்து இறுக்கங்களிலிருந்து விடுபடச் செய்தல்,

எதிர்கால வெற்றிகளுக்குத் திட்டமிடல்,

எதிர்வரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தல்

போன்ற இன்னோரன்ன பணிகளில் ஒரு கலைவடிவத்துக்குரிய பங்கை கூத்தானது செவ்வனே நிறைவேற்றுகிறது எனலாம். இந்த எழுச்சி மிகு கலைவடிவம் இன்றைய காலத்தின் தேவையாக ஒடுக்கப்படும் மக்களுக்கான கலைப் படைப்பாக நின்று அதன் உச்ச எல்லைகளை எட்டிவருகின்றது.

– தா. விவேகானந்தன் –

## மலேரியாவைப் பரப்பும் நுளம்பின் குடம்பிகளைஅளிக்கவல்ல மீனினம்

வவுனிக்குளத்தில் காணப்படும் ஒரு வகையான மீனினம் மலேரியா நோயைப் பரப்பும் அனோபிலிஸ் நுளம்பின் குடம்பிகளை உண்டு அழிக்கக்கூடியது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இம் மீனினத்தை யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவந்தது குறிப்பிட்ட நுளம்பின் குடம்பிகளை அழிக்கவைப்பதற்கு ஈடுபடுத்தப்பட இருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது சம்பந்தமான ஆராய்ச்சி தற்போது மேற்கொள்வதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மலேரியா தடுப்பு வாரம் மேற்கொள்ளப்படும் நாட்களில் இந்த மீனின் செயற்பாடுகள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்ட காலமாக நீர் தேங்கியுள்ள இடங்களான கிடங்குகள், கிணறுகள், குட்டைகள் ஆகியவற்றில் இம்மீன் போடப்பட்டு நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குடிநீருக்காக பயன்படுத்தப்படும் கிணறுகளில் கூட இந்நுளம்பின் குடம்பிகள் இருக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அக்கரைப்பூக்கள்

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**

மாதம் தோறும் எரிமலையை தவறாது வாசிப்பவர்களில் நானும் ஒருத்தி. நான் மட்டுமல்ல மற்றவர்களுக்கும் இதை வாசிப்பதற்குக் கொடுக்கிறேன். மேலும், நீங்கள் பிரசுரிக்கும் சிறுகதைகள், கவிதைகள், மற்றும் பெண்ணின் அடக்குமுறைகளை எதிர்த்து எழுதும் நற் கருத்துக்கள், மேலும் போராட்டம் சம்பந்தமான கருத்துக்கள் நன்றாக உள்ளன. அது மட்டுமல்ல மக்களைச் சிந்திக்க வைக்கின்றீர்கள். எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

**பா. ஈஸ்வரி**
**சுவிஸ்.**

**அன்பின் எரிமலையே நீ!**

கடல்
கடந்து வந்து
அகதியாய்...
அனாதையாய்...
அடிமையாய்...
இருக்கும் எங்களுக்கு
ஆறுதலாய் உள்ள
புரட்சி மிக்க
உணர்ச்சி மிக்க
இதழே! எரிமலையே!
நீ மாதம் தோறும்
சிந்தனை மிக்க
கவிதைகள், கட்டுரைகள்
நாம் அறிந்துகொள்ள
விமர்சனங்கள்
புகைப்படங்கள்
இப்படிப் பலவற்றை
தாங்கி வருகிறாய்
உன்னை நான் வாய்சோர
வாழ்த்த இல்லை
வார்த்தைகள்.

**எஸ். சுதன்**
**பாரிஸ்.**

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு!**

எரிமலை மாதாந்த இதழை மனம்திறந்து வாசிப்பவர்களில் நானும் ஒருவன். எமது தாய் மண்ணைக் காக்கும் சகோதர, சகோதரிகளின் உணர்வுகளை எரிமலையில் கதைகளாக, கட்டுரைகளாக, கவிதைகளாக படிக்கின்றபோது, அவை எம் மண்ணை நேசிக்கவும் தாய்மண்ணிற்கு அழைத்துச் செல்லவும் செய்கின்றன. குறிப்பாக வீரமரணம் அடைந்த போராளிகளின் வரலாற்றுச் சம்பவங்களை வாசிக்கும் போது நான் ஏன் இங்கு வந்தேன் என்னும் உணர்வுதான் எழுகின்றது.

எரிமலையில் இடம்பெற்ற "சமூகத்தின் உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் கலைகளின் முக்கியத்துவம்" மிகப் பயனுள்ள கட்டுரையாகவும், "மண்ணில் எல்லாம் உயிர்த்திருக்கு" சிறுகதை என்னையே பிரதிபலித்ததாகவும் உணர்ந்தேன். உங்கள் உன்னதமான பணி தொடர தமிழீழ மக்கள் சார்பில் தாழ்மையுடன் ஆசிரியர் குழுவை வேண்டிக்கொள்கிறேன்.

**தமிழீழ மண்ணை, மக்களை நேசிக்கும்**
**கு. திருச்செல்வம்**
**ஜேர்மனி.**

**அன்பினிற்கினிய நண்பர்கட்கு, வணக்கம்,**

ஒரு திங்கள் கழித்து விடை இறுக்கின் றேன். பொறுத்தருள்க. எரிமலை வாசிக்கக் கிடைப்பதில் மகிழ்ச்சி. பௌத்தரும், சைனரும் பார்ப்பனருடன் சேர்ந்து புகுத்திய நாட்காட்டியை நீக்கிவிட்டு, தமிழ் ஞாயிறு மாதங்களைப் புகுத்தி பின்னர் பின்வாங்கி இருக்கின்றீர்கள். தமிழைத் தமிழாக எழுதுவது குற்றமாமோ? அரிசியிலிருந்து கற்களை அப்புறப்படுத்துவது இயற்கைக்குப் புறம்பாகாதது போல, நல்ல தமிழை ஆள்வது தமிழரிடையேயும் கூட எதிர்ப்பைக் கிளப்புவது ஒரு புரியாத புதிராக உள்ளது. அயல்மொழிக் கலப்பை எதிர்ப்பதென்பது தமிழ்த் தேசியத்தின் ஒரு வெளிப்பாடு என்பதனை ஏற்பீரென நம்புகின்றேன்.

எரிமலையில் சென்ற இதழில் சிந்துவெளிப் பண்பாடு திராவிடப் பண்பாடென்னும் கருத்தில் ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. உள்ளபடியே, சிந்துவெளிப் பண்பாடென்னும் வட தமிழப் பண்பாடு ஒரு வழி நாகரிகமே (Secondary civilization) அன்றி முதல் நாகரிகம் (Primary culture) ஆகாது. குமரிக்கண்டக் கோட்பாட்டின்படி தமிழ் நாகரிகம் வடக்கிலிருந்து தெற்கே வந்ததன்று. தெற்கிலிருந்து வடக்கே சென்றது. குமரிக்கண்ட நாகரிகத்தின் தாயகப் பகுதியின் பெருங்கூறாகவிருப்பது உள்ள படியே ஈழத்தமிழ் நாகரிகமே ஆகும். அதுவே தாய்ப் பண்பாடு ஆகும். ஈழத்தின் ஆனைக்கோட்டையில் கன்டெடுக்கப்பட்ட 'சிந்துவெளி' எழுத்துக்கள் (தவறாக அவ்வாறு பெயரிடப்பட்டவை) கண்டுபிடிக்கப் பட்டுள்ளது போன்ற சான்றுகள் அதை மெய்ப்பிக்கின்றன. அதுபோக, ஈ. வெ. ரா. பெரியாரே தமிழ்த் தேசியத்தின் ஊற்றுக்கண் என்னும் பொருளிலமைந்த தமிழ்நாட்டவர் ஒருவரின் பாடலும் அதில் வெளியாகியுள்ளது. 1965 ஆம் ஆண்டு வெடித்த தமிழ்த் தேசிய இயக்கமாகிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை எதிர்த்து விடுதலையில் 'தாய்ப்பால் பைத்தியம்' என்னும் தலைப்பில் எழுதுகையில், "நான் தமிழனும் அல்ல; தமிழ்ப்பற்றும் எனக்கில்லை" என எழுதிய கன்னடரான ஈ. வெ. ரா. பெரியாரைத் தமிழ்த் தேசியத்தின் உருவமாக வடிப்பது போன்ற பாடல்கள் வெளிவர எரிமலை ஏற்ற ஏடாகாது என்பதும் என்னுடைய பணிவான கருத்து. தமிழ்நாட்டின் இழிகேடான 'திராவிட' அரசியலின் நிழல்கூட ஈழ வாழ்வியலின் மீது படியாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

அன்புடன் எண்ணிப்பார்க்க.

**இவ்வண்ணம்**
**குணா, பெங்களூர்.**

**பேரன்பின் இனிய எரிமலை ஆசிரியருக்கு! வணக்கங்கள்.**

கடந்த ஆடி, ஆவணி மாத எரிமலை படித்தேன். அந்த இதழ்களைப் படிக்கும் போது, உள்ளக் கிளர்ச்சியும், தமிழனின் எழுச்சி நிறைந்த உண்மைச் செய்தியும் என் உள்ளத்தில் பாய்ந்தோடுகின்ற குருதிநீரில் பதங்கொண்டது. அந்த இதழ்களை கையில் வைத்திருப்பது என்பதே ஒரு பெருமிதம் கொண்ட செயலாக எனக்குப் பட்டது. எமைச் சார்ந்த நண்பர்களுக்கும் படிக்கக்கொடுத்தேன்.

இழந்துவிட்ட உரிமைதன்னை மீட்க எண்ணி இரவு பகல் பாராது, செங்களத்துமிசை வாழ்கின்ற எம்மினத்தை நினைக்கையிலே எத்தனை இறுமாப்பு எனக்கு. உரிமை முழக்கத்தோடு பீறிட்டு எழுந்த பிஞ்சு நெஞ்சங்களின் ஈகங்களை தங்களின் சொந்த - தன்னலப் போக்குக்குப் பயன்படுத்தும் தமிழக அரசியல் தலைவர்களை எண்ணுகையில் குடரெல் லாம் எரியுது.

ஈழவிடுதலைப் போராட்ட உண்மைச் செய்திகளை, அண்மைக்கால நிகழ்வுகளை எமக்குணர்த்தும் தங்களின் அளப்பரிய சேவையை நெஞ்சத்தால் நினைக்கின்றேன்.

**"வலந்தாங்கும் வாளுடைய தமிழர் பெற்ற வரலாற்றை முழக்கிடுவோம் உலகமெல்லாம்."**
**"பிறநாட்டார் உள்நாட்டார் எவரும் நம் வரலாற்றை அறியும்வகை முழக்கம் செய்வோம்"**
**என்ற புரட்சிப் பாவேந்தரின் பாடல் வரிகளை மெய்ப்பாய்ச் செய்ய எம் பாராட்டுக்கள்.**
**"வாழ்வின் பிடியிலிருந்து சருகுகளாக உதிர்வதை விட மரணத்தின் மடியிலிருந்து விதைகளாய்ச் சிந்தலாமே."**

என்ற "மறவேங்கை" "உலகத் தமிழினத் தலைவன்" வே. பிரபாகரனின் சொற்களை ஏற்று செயல்படும் தங்களுக்கு எம் உளங்கனிந்த நன்றியும் பாராட்டும்!

வெல்லட்டும் புலிகள்! மலரட்டும் தமிழீழம்!!

**இவ்வண்ணம்**
**தமிழ்வேங்கை, விழுப்புரம்,**
**தமிழ்நாடு.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புயற் பிரவேசம்




- தூயவன் -

பூநகரியில் சிங்களம்
எம்மக்கள் சிரங்களைச் சீவியதால்
சிவந்தது யாழ்நீரேரி மட்டுமல்ல
கரும்புலிகள் கண்களுமே

கொடும் பகை குடல் எடுக்க
நெடும் வெற்றி நமதாக்க
உடல் உடையிடை
கடலூரிமண் உராய்வெடுக்க
உதிரம் கசிந்து உறைந்திட
நெடுநாளாய்ப் பயின்றனர் புலிகள்
அவர்களின் இரவுகள் பகல்களாயின.

அவன் மூச்சின் ஓசையும்
சிறு அசைவின் காற்றிசைவும்
புலன்களால் உணர்ந்திட
வேவுப் புலிகள் கடமை தொடர்ந்தனர்.

இருளில் புலிகள் நகர்கிறார்கள்
தமிழீழம் விடியலைத் தேடுவதால்

புயலுக்கு முந்திய அமைதியாய்
பூகம்ப ஆரம்பக்கண அமுக்கமாய்
வியூகம் அமைத்த புலிகள்
பூநகரியில் புயற்பிரவேசம் செய்கிறார்கள்.

உடல் தாங்க முடியாக் குளிருடன்
கடல் கடக்கமுடியா நீரோட்டமுடன்
காற்றும் மழையும் பயணத்தைக்
கடினமாக்கப் போட்டியிட்டன.

ஆயினும், புலிகளுக்கு
அலை உறைக்கவில்லை.

பேயாகி நின்றவர் தமிழரை
பிணமாக்கித் தின்றவர் மன
நோயாளிகளாக மாறத்தொடங்கினர்.

வெடிமருந்தாயினர் புலிகள்
விடியுமுன் வானம் ஒளிர்ந்தது ஒருகணம்
வேட்டுக்களாக மாறினர்
பகைவன்
கேட்டுணருமுன்னரே
வீழத்தொடங்கினான்.

ஓராண்டின் உழைப்பால் தான்
உருவாக்கிய திட்டமதை
கரிகாலன் கையாண்ட திறனால்
பார் முழுதும் எமைச் சிலமணியில்
நேராக நோக்கி நின்றது.
பகை விசைப்படகுகள் எம் வசமாகின.
'செக்கோசெலவாக்கிய' டாங்கிகள் உடன்
செல்லப்பிராணிகளாயின
சிசிலின் பதக்கங்கள் சிதை ஏறின.
ஆம்
எங்கள் கால்களைத் தடக்கியவை
மரக்கட்டைகளும் கற்களுமல்ல
மாறாக
எதிரியின் உடல்களும் ஆயுதங்களுமே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# பனை உற்பத்திப் பொருட்கள் மூலம்

# 100 பெண்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பு







வன்னி மாவட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி நிலையங்களினூடாக 100 பெண்கள் சுயதொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவர்களால் பனை சார் உற்பத்திகள் உற்பத்திசெய்யப் பட்டு வருகின்றன. இவ்வுற்பத்திப் பொருட்களில் ஒரு தொகுதி சந்தைப் படுத்துவதற்காக இலங்கை செஞ் சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளையின் உதவியுடன் கொழும்பி லுள்ள பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையத்திற்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள் ளது.

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமான 'உழைக் கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்' என்னும் அமைப்பு முல்லைத்தீவு கிழக்கு, முல்லைத்தீவு மேற்கு, கிளிநொச்சி கிழக்கு, கிளிநொச்சி மேற்கு ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்றது. தற்போது 750 கிலோ கிராம் அளவுள்ள தொகுதி பனந் தும்புப் பொதிகள் முல்லைத்தீவு மேற்கிலுள்ள உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்பட்டு பனை அபிவிருத்திச் சபையின் பிராந்தியக் காரியாலயத்தில் தரம் பிரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. தரம் பிரிக்கப் பட்ட பின்னர் இவை சந்தைப் படுத்துவதற்காக விரைவில் அனுப்பப் படவுள்ளது. இத்துடன் பனைநார் உற்பத்திப் பொருட்களின் மாதிரி களும் ஏற்றுமதிக்காக அனுப்பிவைக் கப்படவுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மலையகமும் இலக்கிய வளர்ச்சியும்



அருவி அன்பன்

ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பை விரிவுற நோக்கின் அதனிடையே பல்வேறு பிரதேச இலக்கியக் கூறுகள் செழுமையுடன் உள்ளடங்கி நிற்பதினை அவதானிக்க முடியும். அவற்றில் மலையகத் தமிழ் இலக்கியக் கூறும் ஒன்றாகும். எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளக் கூடிய இலக்கியக் கூறாக மட்டுமன்றி ஈழத்து தமிழ் இலக்கியத்திற்குப் புதிய இரத்தம் பாய்ச்சி நிற்கும் ஒன்றாகவும் வளர்ந்து வருகின்றது.

மலைய மக்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகட்கு முன்பாக இந் நாட்டுக்கு பிரித்தானியர்களால் அழைத்து வரப்பட்டவர்கள். தென்னிந்தியத் தமிழர்கள் மத்தியில் இருந்து கூலிகளாகக் கூட்டிவரப்பட்ட இம்மக்கள் சமூகம் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் வேலைக்கமர்த்தப் பட்டு காலனித்துவ சுரண்டலால் உறுஞ்சப்பட்டனர். அதனால் அம் மக்கள் விபரிக்கமுடியாத துன்பச் சுமைகளைத் தாங்கி அல்லலுறும் ஒரு சமூகமாக வாழும் ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த நிலையிலும் அவர்கள் தமது இன, மொழி, கலாச்சாரத் தனித்துவங்களை ஒருபோதும் இழந்துவிடவில்லை. அவற்றை தாம் நிலை பெற்று வாழ்ந்துவந்த இலங்கைச் சூழலில் பேணிப் பாதுகாத்து வளர்த்தும் வந்துள்ளார்கள்.

ஒரு மக்கள் சமூகத்தின் பொருளாதார, அரசியல் விழிப்புணர்விற்கான சூழலும், வேகமும் எந்தளவிற்கு வளர்ச்சி பெறுகின்றதோ அந்தளவிற்கே அவர்களது சமூக, கலாச்சார விழிப்புணர்வின் உந்துதலும் அமையமுடியும். பிரித்தானியரின் கொடூர சுரண்டல் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்ட மலையக மக்கள் மத்தியில் இந்த நூற்றாண்டின் இருபதுகளிலேயே பொருளாதார, அரசியல் விழிப்புணர்வுக்கான வித்துக்கள் தூவப்பட்டன. இதனை பத்திரிகையாளரும், அரசியல் தொழிற்சங்க வாதியுமான கோ. நடேசய்யரும் அவரைப் போன்றவர்களும் துணிவுடன் முன்வைத்தனர். முப்பதுகளின் ஆரம்பத்துடன் பொருளாதார அரசியல் துறைகளில் நாடு பூராவும் தீவிரமான கருத்துக்கள் வளர்ந்தன. இடதுசாரி இயக்கம் தோற்றம் பெற்றது. இவை யாவும் மலையக மக்கள் மத்தியில் ஆரம்ப விழிப்புணர்வு வேகம் பெறுவதற்கு அடிப்படைகளாகின. இடதுசாரித் தொழிற்சங்க இயக்கமும், இலங்கை இந்திய காங்கிரஸ் இயக்கமும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வேகமாகப் பரவியதுடன் தொழிற்சங்கப் போராட்டங்கள் வெடித்தெழுந்து முன் செல்லும் போக்கு முனைப்படையத் தொடங்கியது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# கிராமிய மேம்பாட்டு சிரமதானங்கள்

**பல்வேறு வகைப்பட்ட கிராமிய மேம்பாட்டுத் திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இவற்றுள் கிராமத்துள் பொது வேலைகளை மனித வலுவினை ஒருங்கிணைத்து சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.**

**முல்லைமாவட்டத்தில் இவ்வகையான பல சிரமதான நடவடிக்கைகள் நடைபெற்றன. செம்மலைப் பகுதி உவர்நிலப் பாதுகாப்புக்கு 25 மனித வலுவினைப் பயன்படுத்தி 5000 ரூபா பெறுமதியான வேலையும் தட்டையமலைப் பகுதியில் எண்ணை விதை உற்பத்திக்காக 50 மனித வலுவைப் பயன்படுத்தி 10 000 ரூபா பெறுமதியான வேலையும் நடைபெற்றன. முத்துஐயன்கட்டில் விதை உற்பத்தித் திட்டத்திற்கு 20 மனித வலுவைப் பயன்படுத்தி 4000 ரூபா பெறுமதியான வேலையும் மன்னார் கண்டலில் காளைச் சேவை நிலையம் அமைப்பதற்கு 15 மனித வலுமூலம் 5000 ரூபா பெறுமதியான வேலையும் இடம்பெற்றுள்ளது.**

**மற்றும் ஆனந்தபுரம் குளம் புனரமைத்தல், பேராற்றில் புல் வளர்ப்பு வேலைகள், பெரிய இந்திமடுவில் குளம் புனரமைத்தல், புதற்குடவிலும் கனகரத்தினபுரத்திலும் தென்னை நாற்றுமேடை அமைத்தல் ஆகிய வேலைகளிற்கு 200 மனித வலுவைப் பயன்படுத்தி 41,500 ரூபா பெறுமதியான செயற்பாடுகள் நடைபெற்றன.**

**இவ்வேலைகள் மூலம் கிராம மக்கள் தம் ஊர் பொது வேலைகளை தாமே எழுச்சியுடன் செய்வது குறிப்பிடத்தக்கது.**

இத்தகைய சூழலிலேயே மலையக இலக்கியம் துளிர்விட ஆரம்பித்தது. முப்பதுகளின் ஆரம்பத்துடன் இளம் இலக்கியவாதியான சி.வி. வேலுப்பிள்ளையும் வேறு சிலரும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள். அவர்களது இலக்கியப் படைப்புக்களில் மலையக மக்களின் அவல வாழ்வு வெளிக்கொணரப்பட்டது. இவர்களது இலக்கிய முயற்சியைத் தொடர்ந்து ஆங்காங்கே புதிய சில இலக்கியத் துளிர்கள் துளிர்விட ஆரம்பித்தன. இவை யாவும் மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்கான ஆரம்பப் பாதையை உருவாக்கி வைத்தன.

நாற்பதுகளின் முற்கூறுகளில் மலையக தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க இயக்கங்களில்- வேலை நிறுத்தப் போராட்டங்களில் அவர்களது பொருளாதார அரசியல் கோரிக்கைகளில் விழிப்புணர்வுக் கனதி உள்ளடங்கி இருந்தமை நோக்குதற்குரிய ஒன்றாக விளங்கியது. அவற்றின் தொடர் வளர்ச்சியானது நாற்பதுகளின் பிற்கூறிலே இடம்பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் முழுமையாக வெளிப்பாடடைந்தது.

வர்க்க, இன அடிப்படையில் வெளிப்பாடடைந்த இப் பொருளாதார அரசியல் விழிப்புணர்வின் சாராம்சத்தை மிக உன்னிப்பாக அவதானித்த சிங்கள ஆளும் வர்க்கத்தினர் அதனை முறியடித்து மழுங்கச் செய்யும் நோக்குடன் 1948ல் மலையக மக்களின் அடிப்படைக் குடியியல் உரிமையான பிரசாவுரிமையையும்- வாக்குரிமையையும் நிராகரித்து இல்லாதொழித்தனர். எனவே இவ் அடிப்படை உரிமையை வற்புறுத்தி மீண்டும் அதனை வென்றெடுப்பதற்கான கோரிக்கையும் இயக்கங்களும் மலையக மக்கள் மத்தியில் வளரலாயிற்று. அத்துடன் அவர்களது பொருளாதார, சமூகக் கோரிக்கைகளும் இணைக்கப்பட்டு இவை யாவும் மலையக சமூகத்தின் மீது அக்கறை கொண்ட அனைத்து சக்திகளாலும் வெவ்வேறு நிலைகளில் போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன.

இத்தகைய நிலையில் அவற்றின் உடன் நிகழ்வாக இலக்கிய வளர்ச்சியும் முன்செல்வதாயிற்று. ஐம்பதுகளில் இவ் இலக்கிய வளர்ச்சி வேகம் பெற்றதுடன் அறுபதுகளின் தேசிய சர்வதேச சூழலின் உந்துதல்களால் மேலும் முன்னேறிச் சென்றது. அது தேசிய இலக்கியக் கோட்பாடுகளுடன் கைகோர்த்துச் செல்லும் ஒன்றாகவும் மலர்ச்சி பெற்றது. இக் காலகட்டத்தில் சமூக கலாச்சாரத் துறைகளிலான அக்கறை மிக்க வளர்ச்சிப் போக்கு மேலும் பல படிகளைத் தாண்டிச் சென்றது. மலையக மக்கள் சமூகத்தில் கல்விக்கான ஆர்வமும், உயர் கல்வி பெற்றவர்களின் சிறுதொகையும் கவனத்தைக் கவரக்கூடிய ஒன்றாக விளங்கியது. ஏற்கனவே சி.வி. போன்ற ஆளுமை மிக்க சமூக, இலக்கிய வாதிகள் உருவாக்கிய இலக்கியப் பாரம்பரியம் வளர்திசையில் மேலும் வளர்வதாயிற்று. கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற இலக்கியத் துறைகளில் மலையகப் படிப்பாளிகள் மேன் மேலும் தோற்றம் பெற்று வளர்ந்தனர். உயர்கல்வி பெற்றவர்கள், இடைநிலைக் கல்வியை முடித்தவர்கள், ஆரம்பக் கல்வியை பெற்ற தொழிலாளர்கள் (இத்தகையோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தபோதிலும்) ஆகிய இளம் தலைமுறையினர் மத்தியில் இருந்து தோன்றிய இலக்கியப் படைப்பாளிகள் ஈழத்து இலக்கியத்துக்கு தமது பங்களிப்பை வழங்குபவர்களாக மாற்றம் பெற்றனர். ஆக்க இலக்கியத் துறையில் மட்டுமன்றி நாடகங்கள், இசைக் குழுக்கள் போன்றவற்றின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கவையாக அமைந்தன. பருவகால கலை இலக்கிய இதழ்களும், சிற்றேடுகளும் மலையகத்தில் இருந்து வெளிவரத் தொடங்கின. நாளடைவில் அவற்றின் எண்ணிக்கையும் தரமும் வளர்வதாயிற்று. நாளிதழ்கள், வார இதழ்கள் போன்றவற்றில் மலையகப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் தனித்து வந்ததுடன் தொடர்ந்து வெளிவரும் நிலைகள் வளர்ந்தன. அவை யாவும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மலையக கலை, இலக்கியத்தின் வளர்ச்சியையும், தனித்துவத்தையும் புலப்படுத்தி நின்றன. மலையக மக்கள் மத்தியில் நாட்டார் பாடல்கள், காமன் கூத்து போன்றன வாய்மொழி கலை இலக்கிய வடிவங்கள் சமகாலத்தின் தேவைக்கேற்ப வளர்ச்சி கண்டது. இவை யாவும் நீண்டதோர் ஆய்வுக்குரிய கருப்பொருள் எனன்பதை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரும் கூர்ந்து நோக்கவேண்டியதொன்றாகும்.

இத்தகைய மலையக கலை இலக்கிய வளர்ச்சி இன்று அண்மைய வருடங்களில் புதிய கட்டத்தினுள் பிரவேசித்துள்ளமையை இனம்காணலாம். அதற்குரிய அடிப்படையாக அமைந்துள்ளமை மலையக மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் தேசிய உணர்வு நிலையேயாகும். நாம் இந்த நாட்டின் மக்கள் சமூகம் என்பதையும், எமது பிரதேசம் நாம் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்துவந்த மலையகப் பிரதேசம் என்பதையும் எமக்குரிய அடிப்படை ஜீவாதார உரிமைகள் எவ்வகையிலும் மறுக்கப்படக் கூடியவை அல்ல என்ற உணர்வும் இன்றைய மலையக இளம் தலைமுறையினரிடமிருந்து ஆழமானதொன்றாக வளர்ந்து வருகின்றது. தாம் ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் என்பதை வலியுறுத்தி பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்துவரும் யதார்த்தத்தைக் கண்டுகொள்ளும் அதே வேளை, தாங்கள் இரண்டாம் தரப் பிரசைகளாக நடத்தப்பட்டு வந்த வரலாற்றுச் சூழலை மாற்றி அமைக்க முன்வந்துள்ள புதிய தலைமுறையின் எழுச்சிக் குரல்கள் அவர்களது அரசியல் கோரிக்கைகளில் சங்க நாதமாக ஒலிக்கத் தொடங்கி உள்ளன. அதன் பிரதிபலிப்பை இன்றைய கலை இலக்கிய வடிவங்களிலேயும் காணமுடிகின்றது.

இவ்வாறு கூறும்போது மலையக கலை இலக்கியம் யாவும் ஒரே திசையில் ஒரே குரலில் சவால்கள் எதுவுமற்றுச் செல்கின்றது எனக் கொள்ளமுடியாது. சமூக அக்கறையும் சமுதாய மாற்றமும் வேண்டிநிற்கும் கலை இலக்கிய வளர்ச்சியே வற்புறுத்தத் தக்கவையும் வளர்க்கப்பட வேண்டியவையுமாகும். இருப்பினும் எதிர்நிலைக் கலை இலக்கியப் போக்கினை வளர்க்க முனையும் சக்திகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டும் வருகின்றன. நமது கலை இலக்கியம் யாவும் தென் இந்தியக் கலை இலக்கியங்களே எனக் கூறி அங்கிருந்து தரமற்ற வர்த்தக நோக்கிலானவற்றையும் வரவழைத்து மக்களை திசைதிருப்பி மலையக கலை இலக்கிய வளர்ச்சியின் தனித்துவங்களை சிதைத்துவிட முயலும் சக்திகள் வெளிப்படையாகவே செயலாற்றி வருகின்றன. அதே வேளை அரசசார்பற்ற அந்நிய- உள்நாட்டு நிறுவனங்களும் மதம் மாற்றும் நிலையங்களும் கலை இலக்கியத் துறையினுள் பிற்போக்கான பாதைக்கு மலையக மக்களைத் திருப்பிவிட மறைமுகமாக முயலுகின்றன. இவை இரண்டும் மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு எதிரே தோன்றியுள்ள பாரிய சவால்களாகும்.

இவற்றை எதிர்கொண்டு முறியடித்து மலையக கலை இலக்கிய வளர்ச்சியின் பயணத்தை உரிய பாதையில் முன்னெடுக்க வேண்டும். சமூகப் பொறுப்புணர்ச்சியும்- அக்கறையும் கொண்ட அனைத்து கலை இலக்கிய சக்திகளும் தீவிர செயற்பாட்டுடன் இயங்க வேண்டியது இன்றைய சமூகச் சூழலின் தேவையாகும். இத்தேவையை நிறைவு செய்ய முற்படும் போது மலையக கலை இலக்கிய சக்திகள் வடக்கு கிழக்கு உட்பட ஏனைய பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் கலை இலக்கிய வாதிகளுடன், தமிழீழத்தின் முன்னோக்கிச் செல்லும் கலை இலக்கியப் பரப்புடனும் தம்மை இறுகப் பிணைத்துக்கொள்ளல் வேண்டும். மேலும் புலம்பெயர்ந்த தமிழ் இலக்கிய வளர்ச்சியுடனும் மலையக இலக்கியம் நெருக்கம் கொள்வதனால் பயன்களைப் பெற முடியும். இவை யாவும் முழுமை பெறும் போதே மலையக கலை இலக்கியமும் எழுத்தாளர்கள்- கலைஞர்களும் பூரணத்துவத்தை நோக்கிய தமது பங்களிப்பினை மேலும் ஈழத்து கலை இலக்கியத் துறைக்கு வழங்க முடியும்.

## சுயதொழில்வாய்ப்பு ஏற்பட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடனுதவி

சுயதொழில் வாய்ப்பை ஊக்குவித்து, உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல கடனுதவித் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

தொழில் வாய்ப்பு இன்றி பல்வேறு தொழில்களையும் செய்துவரும் குடும்பங்களுக்கு இக் கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இக்கடனுதவி பெறும் குடும்பங்களுக்கு தொழில் திட்டம் தொடர்பாக பயிற்சி வகுப்புக்களும் துறை சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. மேலும் திட்டங்களை நேரடியாகச் சென்று கண்காணித்து திட்டங்களுக்கான உள்ளீடுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வகையில் சுன்னாகம், கந்தரோடை, செல்வபுரம், குடத்தனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 88 குடும்பங்களுக்கு கால்நடை வளர்ப்பிற்கென 8,80,000 ரூபாவும், கடற்தொழில் மேற்கொள்வதெற்கென குருநகர் பகுதி மீனவர்களான 102 குடும்பங்களுக்கு 5,10,000 ரூபாவும், கோப்பாய், உடுவில், கரவெட்டி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, கண்டாவளை பகுதியில் 1013 கடும்பங்களுக்கு காலபோக நெற்செய்கைக்காக 99,63,655 ரூபாவும், உடுவில், கோப்பாய் பகுதியில் 87 விவசாயக் குடும்பங்களுக்கு உருளைக்கிழங்கு செய்கைக்கென 14,65,950 ரூபாவும், நல்லூர், அரியாலை, நாவற்குழி பகுதியில் 06 குடும்பங்களுக்கு சிறு கைத்தொழில் முயற்சிக்காக 60,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# மாவீரரே

ஓ
என் தோழிகளே!
இருள் சூழ்ந்த எங்கள் இருப்பிடங்களில்
உங்கள் ஒளிவீச்சு
பட்டுத்தெறித்து
எங்களைப் பிரகாசப் பிரதேசத்துக்குள்
தள்ளிக்கொண்டிருக்கிறது.
அந்த ஒளியில் நாங்கள்
உலாவுவது
உங்களுக்குத் தெரியும் என நினைக்கின்றேன்.


வேங்கைகளே,
வெறும் வெற்றிடமாய்
உங்களை நாம் நினைக்கவில்லை
வேர் நிறைந்த மரம் ஒன்றின்
விழுதுகளாய்,
அடிமனத்தில் உதிக்கும் சூரியர்களாய்
வரலாற்று வாசகத்தில்
வரிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

காலத்தைக் காட்டிநிற்கும்
வெறும்கட்டிடம் அல்ல
நீங்கள்.
சுழலுகின்ற வரலாற்றுச் சக்கரத்தில்
வடிவமைக்கப்பட்ட காவியக் கல்லறைகள்;
ஆழமாய் அமைக்கப்பட்ட
அத்திவாரத்துள்
அமர்த்தப்பட்ட அடிக்கற்கள்

சுதந்திர ஈழம்
எங்களை
வந்து சேருமாயின்,
விடுதலைக் காலம்
எங்களுக்கு
விடை கூறுமாயின்
அவையெல்லாம் உங்கள்
சாதனையின் சாம்ராஜ்யங்கள்தான்.

– மிருணா -

www.tamileelamarchive.com



வறுமையின் அணைப்பு
வாட்டும் பசிக்கொடுமையின் தகிப்பு
ஓலைக்குடிசையில்
மலர்ந்த குழந்தையின் விழிகளில்தான் எத்துணை தவிப்பு
சிரிப்பை மறந்த சின்ன மலரின்
இருப்பைச் சரி செய்ய வா! ஒரு கை தா!

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com